வள்ளுவ ஆண்டு 2057 – கார்த்திகை 01 – செவ்வாய்க்கிழமை – 17.11.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 14

BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 14 : ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்

பொருள் : மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், (உணவுப் பொருள்களை உண்டாக்கும்) உழவரும் ஏர்கொண்டு உழ மாட்டார்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி யாழில் மாபெரும் கவனயீர்ப்பு : ராஜ் சோமதேவாவின் உருவபொம்மை ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிப்பு!



செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் சர்வதேச நீதியை வலியுறுத்தி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அரியாலை தபால்கட்டைச் சந்தியில் இன்று (17.11.2026) முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடனும், சுயாதீனமான முறையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதி கிடைக்க சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியம் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட இடைக்கால அறிக்கை தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்திய போராட்டக்காரர் கள், செம்மணி விவகாரத்தில் உண்மைகள் முழுமையாக வெளிக் கொணரப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்ப ங்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

செம்மணி மனிதப் புதைகுழி முன்பாக பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் உருவபொம்மையும் ஆர்பாட்டக் காரர்களால் எரிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தரங்கப் படங்கள் தவறான பாவனை: Ontario முதல்வர் Doug Ford அரசினால் புதிய சட்டம் அறிமுகம்



சம்மதமின்றி அந்தரங்கப் படங்கள் மற்றும் காணொளிகளை இணையத்தில் வெளியிட்டுத் துன்புறுத்தப்படுவதால் பாதிக்கப்படுவோருக்குப் பாதுகாப்பளிக்கும் வகையிலும், அத்தகைய படங்களை இணையத்தளங்களில் இருந்து விரைவாக நீக்குவதற்குப் புதிய சட்டப்பூர்வ வழிமுறையை உருவாக்கும் வகையிலும் கனடாவின் Ontario மாகாண அரசு புதிய சட்ட மூலம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. P- 20

ரஷ்யாவின் புற்றுநோய் தடுப்பூசியான NeoOncovac பரிசோதனைகளில் வெற்றி!

60 வயதுடைய தோல் புற்றுநோயாளி ஒருவருக்கு இத்தடுப்பூசி செலுத்தப்பட்ட 4 மாதங்களில், உடலிலிருந்த புற்றுநோய் பரவல்கள் முற்றாக மறைந்துள்ளதோடு புதிய கட்டிகள் எதுவும் உருவாகவில்லை என ரஷ்ய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இதுவரை 6 பேருக்கு இத்தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ள நிலையில் இதன் முழுமையான செயல்திறனை உறுதிப்படுத்த மேலதிக ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மருத்துவ உலகில் இதுவொரு மாபெரும் திருப்புமுனையாகப் பார்க்கப் படுகிறது.

கனடா விமான நிலையப் பாதுகாப்பு மாற்றியமைக்கப் படுகின்றது?



பயணிகளின் பொதி அடையாள அட்டை களைப் பயன்படுத் திப் போதைப் பொருள் கடத்தப் படுவதை அம்பலப் படுத்திய 'W5' புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்து, மத்திய அரசாங்கம் விமான நிலையப் பாதுகாப்பில் மாற்றங்களைச் செய்து வருகின்றது என கனேடிய போக்கு வரத்து அமைச்சர் Steven MacKinnon தனது அலுவலகத்தில் அண்மையில் வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

P- 20

மது போதையில் வாகனம் செலுத்துவதைக் கண்டறியும் புதிய கருவி தமிழ் மாணவனால் கண்டுபிடிப்பு!

பதுளை கல்வி வலயத்தில் பாரதி மகா வித்தியாலயத்தின் மாணவன் செல்வன். எஸ். திலீப்ஷான் மதுபோதையில் வாகனம் செலுத்துவதைக் கண்டறியும் புதிய நெக்ஸா தொழில் நுட்பக் கருவியை கண்டுபிடித்து தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றுச் சாதனைப் படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள் ளதாக பாடசாலையின் அதிபர் சொ. திருச்செல்வம் தெரிவித்தார். P- 20

பிரித்தானியாவில் நிரந்தர மாவீரர் நினைவாலயம்!

பிரித்தானியாவின் King's Sutton பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிரந்தர மாவீரர் நினைவாலய வளாகத்தில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் மாவீரர் குடும்பங்களை மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.






ஜனநாயக பதக்கத்தைப் பெற்றார் பிரதமர் Carney!

சர்வதேச அரசியல் ஆலோசகர்கள் சங்கத்திடமிருந்து 2026 ஆம் ஆண்டுக்கான ஜனநாயகப் பதக்கத்தை பிரதமர் Mark carney பெற்றுக் கொண்டார்.

P- 20



மாத்தளை மனிதப் புதைகுழி வழக்கு மீண்டும் விசாரணைக்கு...

இதுவரை இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளில் அவற்றின் அளவில் மூன்றாவது இடத்தைப் பெறும் மனிதப் புதைகுழி தொடர்பாக,

P- 20

கனடா சீன வாகன உற்பத்தியாளர்களை நாடப்போகிறதா?



ஒருங்கிணைந்த வட அமெரிக்க வாகனத் தொழில் துறையைப் பாதுகாக்கத் தவறினால், கனடா சீன வாகன உற்பத்தியாளர்களை நாடக்கூடும் என்று கனடா பிரதமர் Mark Carney தெரிவித்துள்ளார்.

P- 20

London Wembleyயில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



கடந்த 15.11.2026 அன்று London Wembleyயில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் மாவீரர் பெற்றோர் களைக் கௌரவித்தல், வரலாற்று ஆவண நூல்களின் அறிமுகமும் வெளியீடும், உலகத் தமிழர் வரலாற்று வளாகத்தினால் TGTE இடம் தேசியக் கொடி கையளிப்பு நிகழ்வு, இரத்ததானம் செய்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தல்... எனப் பல முக்கிய விடயங்கள் சிறப்பாக இடம்பெற்றன.

P- 20

தமிழ்த் தேசியத்தின் மூத்த அரசியல்வாதி சிவாஜிலிங்கத்திற்கு சபையில் அஞ்சலி

தமிழ்த் தேசியத்தின் மூத்த அரசியல்வாதியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சபையில் அஞ்சலி செலுத்தினார்.

P- 20

கனடாவில் ஒரே நாளில் நான்கு முக்கிய நிகழ்வுகள்!

நவம்பர் 21, சனிக்கிழமை

01 தமிழீழத் தேசியக்கொடி நாள்

பிராம்படன்

நவம்பர் 21 (சனி)

காலை 10.00 – 11.00

Ken Whillans Square
(41 Main Street South)
Brampton



02 மாவீரர் நினைவேந்தல் வாரம்

மிசிசாகா

நவம்பர் 21 – 27

உத்தியோகபூர்வ ஆரம்பம்
நவம்பர் 21 (சனி)
நண்பகல் 12.00

தினமும்
காலை 9.00 – மாலை 7.00

Behind Me Media
2283 Argentia Road, Unit 16
Mississauga

03 கார்த்திகைப் பூக்கள் 2026

ஈழப் பாடல்களின் இசை நிகழ்வு

நவம்பர் 21 (சனி)

மாலை 4.30 மணி

கனடா கந்தசுவாமி ஆலயம்
733 Birchmount Road
Scarborough



04 தமிழீழத் தேசியக்கொடி நாள்

ஸ்கார்பரோ

நவம்பர் 21 (சனி)

மாலை 5.00 – இரவு 9.00

Malvern Family Resource Centre
90 Little Road
Scarborough



அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்!



ஜனாதிபதி அனுர குமார திசநாயக்கவுக்கு அனோஜனின் குடும்பத்தினர் நன்றி!

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட இலங்கைப் பிரஜையான அனோஜன் சிவராசாவின் குடும்பத்தினர், அவரது விடுதலையை உறுதி செய்யத் தலையிட்டமைக்காக ஜனாதிபதி அனுர குமார திசநாயக்கவுக்குநன்றியைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் (PMD) தகவலின்படி, அனோஜனின் குடும்ப உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து அவரது முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தனர். இச்சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி திசாநாயக்க, எச்சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பிரஜைகளுக்காக முன்னிற்பது தனது பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

மேலும், இன, மத மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனோஜனின் விடுதலையை உறுதி செய்வதற்குப் பங்களிப்புச் செய்த அனைத்து நபர்களுக்கும், சவூதி அரேபிய அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இதேவேளை, தமது மகன் தற்போது நலமுடன் இருப்பதாகச் அனோஜனின் பெற்றோர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். தமது மகனை மரண தண்டனையிலிருந்து மீட்டு, அனைத்துக் குற்றச்சாட்டு களிலிருந்தும் விடுவிப்பதற்கு ஆரம்பம் முதலே தலையிட்டமைக்காகச் அனோஜனின்தாயார் ஜனாதிபதிக்கு நன்றி கூறினார்.

அத்துடன், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஓ.எல். அமீர் அஜ்வத் மற்றும் தூதரக அதிகாரிகளுக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

சட்ட உதவிகளை வழங்குவதற்காகச் சவூதி அரேபியாவுக்குச் சென்ற சட்டத்தரணிகள் மற்றும் தமது மகனின் விடுதலைக்கான முயற்சிகளுக்கு ஆதரவளித்த அனைத்து இலங்கையர்களுக்கும் அவர் மேலும் நன்றி கூறினார்.

இதற்கிடையில், அனோஜனின் வழக்கில் தலையிடுவதாகத் தமது முதலாவது சந்திப்பின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியமைக்காகச் சமூக செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.



குறிப்பாக, சவூதி அரேபியாவில் பங்களாதேஷ் தம்பதியினருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, அக்காலப்பகுதியில் அனோஜனின் பெற்றோர் கடும் உளவியல் ரீதியான வேதனையை அனுபவித்ததாக அவர் வெளிப்படுத்தினார்.

இச்சந்திப்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் மகர மண்டல மாலை அணிவிப்பு!





















BEHIND ME MEDIA

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் இன்று 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, அதிகாலை 5:30 மணிக்கு கணபதி ஹோமத்துடன் மகர மண்டல மாலை அணியும் நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது.

காலை 8:00 மணி முதல் ஆரம்பமான குருசாமி தலைமையில் மாலை அணிவிக்கும் நிகழ்வு இரவு 9:00 மணி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. ஜனவரி 20ஆம் திகதி வரை மண்டல பூஜை மற்றும் மகர பூஜை வழிபாடுகள் ஆன்மீகபூர்வமாக நடாத்தத் திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மகர மண்டல காலத்தை முன்னிட்டு, கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் சிறப்பு விழா பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களாக கனடாவில் வாழும் மக்களுக்கு ஆன்மீக சரணாலயமாகவும், சமூகப் பணிகளின் மையமாகவும் திகழும் இவ்வாலயத்தில் கணபதி ஹோமம், சாஸ்தா ஹோமம், விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள், பஜனைகள் மற்றும் கூட்டுப் பிரார்த்தனைகளுடன் ஆரம்பமாகும் இம்மகர மண்டல காலம், ஜனவரி 14ஆம் திகதி மகர சங்கராந்தி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த 12,196 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்கள் நிலவிய காலப்பகுதியிலும் அதன் பின்னரும் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த 12,196 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப் பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம் அவர்கள் வாய்மூல விடைக்காக எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு செயற்பாட்டின் கீழ் ஆலோசனைச் சேவைகள், யோகா மற்றும் ஆன்மீக நிகழ்ச்சித்திட்டங்கள், அடிப்படைக் கல்வி மற்றும் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், ஓவியம், இசை, நாடகம் மற்றும் அரங்கக் கலை உள்ளிட்ட அழகியல் கலை நிகழ்ச்சித்திட்டங்கள், வாகனச் செலுத்துநர் பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அப்பயிற்சிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் ஏனைய உதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் கடனுதவிகள், வீடுகள், தையல் இயந்திரங்கள், மீன்பிடி வலைகள், மிதிவண்டிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், தச்சுத் தொழில் உபகரணங்கள், பதப்படுத்தும் உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், கால்நடைகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள ளதாகவும் அமைச்சர் வழங்கிய பதிலளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச மனித கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது



இலங்கைக் குடிமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட சர்வதேச மனித கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, இந்திய அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளார். அதற்கமைய, இந்தியாவின் தேசிய விசாரணை முகவரகம் (NIA) அவரைக் கைது செய்துள்ளது. தேசிய விசாரணை முகவரகத்தின் கோரிக்கையின் பேரில் விடுக்கப்பட்ட இன்டர்போல் சிவப்பு அறிக்கைக்கமைய, இலங்கை அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேக நபர், கடந்த 13ஆம் திகதி பெங்களூரு கெம்பகௌடா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து NIA குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

சட்டப்பூர்வ கடவுச்சீட்டுகள் மூலம் கனடாவுக்குச் செல்ல வழிவகுப்பதாக உறுதியளித்து, இலங்கை குடிமக்களை முறைகேடான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பும் சதித்திட்டத்தில் இவர் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து பெருமளவில் பணத்தைச் சேகரித்த அவர், ஹவாலா (Hawala) முறையைப் பயன்படுத்தி இந்தியாவின் பிற சந்தேக நபர்களுக்கு அந்தப் பணத்தை அனுப்பியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு மங்களூரில் உள்ள வீடு ஒன்றில் இலங்கை குடிமக்கள் சிலர் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தமை குறித்த தகவலை அடுத்து இந்தியக் காவல்துறையினர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து இந்த விசாரணைகளை பொறுப்பேற்ற தேசிய விசாரணை முகவரகம்உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்கு முன்னர் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் இந்த மோசடியுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டனர். கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி இலங்கை குடிமக்களை ஏமாற்றும் இந்தச் சட்டவிரோத மனித கடத்தல் வலையமைப்பு தொடர்பில் தேசிய விசாரணை முகவரகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான விசாரணைகளின் மற்றுமொரு முக்கிய படியாக இந்த கைது நடவடிக்கை அமைந்துள்ளது.



சுங்கவரி விலக்கு நடவடிக்கைகளைக் கனடா நீடிக்கிறது?



அமெரிக்கப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட பதில்-சுங்கவரிகளிலிருந்து அளிக்கப்பட்ட சில விலக்குகளைக் கனடா நீடித்துள்ளதாகவும், இந்த வரி விலக்கிற்குத் தகுதியுடைய இறக்குமதிகளின் வரம்பை விரிவுபடுத்தியுள்ளதாகவும் திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

கனடிய நிதி அமைச்சர் Francois-Philippe Champagne இந்த மாற்றங்களை ஓர் அறிக்கையில் அறிவித்தார்.

அமெரிக்கச் சுங்கவரிகளால் பாதிக்கப்பட்ட கனடிய வணிகங்கள் மற்றும் தொழிலாளர்களுக்குச் சிறந்த ஆதரவை வழங்குவதும், சாத்தியமான இடங்களில் கனடாவில் தயாரிக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் இத நோக்கம் என்று அவர் கூறினார்.

horizontal remission எனப்படும் பரந்த அளவிலான இந்த வரி விலக்கு, 2028 ஜூன் 30 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுரங்கத் தொழில், கல் குவாரி தொழில் அல்லது எண்ணெய் மற்றும் எரிபொருள் பிரித்தெடுக்கும் தொழிலில் பயன்படுத்தப்படும் இரும்பு அல்லாத பொருட்கள் மற்றும் பழங்குடியின அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ளவை உட்படப் பொதுக் கல்வி நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த விலக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கனடாவிலேயே நம்பகமான முறையில் பெறக்கூடிய பொருட்களை இந்த நிவாரணத் திட்டத்திலிருந்து சிறுகச் சிறுக நீக்கவுள்ளதாக ழுவவயறய தெரிவித்துள்ளது.

கனடாவில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் போது அல்லது தற்போதைய ஒப்பந்தங்களின்படி அமெரிக்காவிலிருந்து வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளில்,

அமெரிக்காவிலிருந்து தொடர்ந்து பொருட்களைக் கொள்முதல் செய்ய வேண்டிய நிறுவனங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வரி விலக்கை வழங்கவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

2026 November, 17
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

தன் இனத்திற்கான கடமையை நிறைவு செய்த திருப்தியுடன் விடைபெற்றார் சிவாஜிலிங்கம் ஐயா!

நான் முன்னால் செல்கிறேன் நீங்கள் எல்லோரும் பயப்படாமல் பின்னால் வாருங்கள் என எத்தனை எத்தனை நெருக்கடிகள் வாய்ந்த போராட்ட களங்களுக்கும் மக்களை துணிச்சலுடன் அழைத்துச் சென்ற சிவாஜிலிங்கம் ஐயா காலமாகி விட்டார்.

நாங்கள் சாகத் தயாராக இருக்க வேண்டும். அதுவரை இனத்துக்கு விடிவில்லை. விடுதலையில்லை என்று அடிக்கடி சொல்வார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும், வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளருமான மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கத்தின் இழப்பு தமிழ்த் தேசிய அரசியலில் என்றும் ஈடுசெய்ய முடியாதது.

எதற்கும் அஞ்சாதவர் எந்த வரலாறு சார் விடயமானாலும் மாதம், திகதி, ஆண்டு ஏன் நேரங்களைக் கூட நினைவில் வைத்திருப்பவர். வரலாற்று ஆவணப்படுத்தல்களுக்கு அன்று நடந்த சம்பவங்களை அப்படியே தெளிவாக விபரிப்பதில் வல்லவர்.

2009 க்குப் பின்னர் நெருக்கடி காலங்களில் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் கூட அனுட்டிக்கப் பயந்த தமிழ்த் தேசிய நினைவு நாட்களை துணிச்சலுடன் அனுட்டித்து மக்களுக்கு நினைவேந்தும் உரிமையை பெற்றுக் கொடுத்தவர்களில் முக்கியமானவர்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தமிழ் அரசியல் தலைவர்கள் குறித்து கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் விக்கிலீக்ஸ் இணையத் தளம் மூலம் வெளியில் வந்திருந்தது. அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பியாக இருந்த சிவாஜிலிங்கம் முக்கியத்துவம் வாய்ந்த-மேன்மையான தமிழ் அரசியல்வாதியென குறிக்கப்பட்டிருந்தார்.

தேர்தல்கால சொத்து விபரங்களைப் பார்த்து தேர்தல் ஆணையாளரே வியக்குமளவுக்கு சொந்தமாக வீடு, காணி, வங்கியில் பணம் சேர்த்து வைக்காத இலங்கை தமிழ் அரசியல்வாதியாக வலம்வந்தவர்.





தலைவரின் தாய், தந்தையரின் மறைவின் போது நெருக்கடி காலங்களையும் பாராமல் மஹிந்த அரசுடன் போராடி அவர்களது இறுதிச் சடங்கை வல்வெட்டித்துறையில் முன்னின்று நடாத்தி முடித்தவர். பதவிகளையும் அதிகாரத்தையும் வைத்துத் தலைமுறைக்கும் சொத்து சேர்க்கும் இன்றைய அரசியல் சூழலில் கடன் சுமையோடு வாழ்ந்து தன் இனத்தின் நினைவுகளைச் சுமந்து திரிந்தவர் சிவாஜியர். சிவாஜிலிங்கத்தார் "நினைவேந்தல் என்றால் வாழைக்குற்றியுடன் வந்திடுவார்" என நாம் பொதுவா சொல்வது.

எதற்கும் அஞ்சாத மனுஷன். அண்ணே தூக்கி உள்ளே போட்டுவிடுவாங்க என நாம சொன்னால் , போடட்டும் வெளியே இருந்தால் கடன் காசு கேட்டு வந்து தொந்தரவு தாறாங்க கொஞ்ச நாள் உள்ளே இருந்து வருவோம் என கூறுவார். நாடாளுமன்ற வடமாகாண சபை உறுப்பினராக இருந்த போதிலும் கடனுடன் வாழ்ந்த மனுஷன், தனக்காகவே தன் குடும்பத்திற்காகவோ எதையும் சேர்த்து வைக்காத மனுஷன்.

நினைவேந்தல் நிகழ்வுகள், தனது அரசியல் பயணத்திற்கான செலவு என்பவற்றுக்காக தானே செலவு செய்வதுடன் சில சமயங்களில் மனைவியின் நகைகளையும் அடகு வைத்துவிடுவார். முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் மாவீரர் நினைவு வாரங்களில் ஆட்டோவில் வாழைக்குற்றி , மண்சட்டி, கற்பூரம், கொஞ்ச பூ என்பவற்றுடன் தினமும் காலையில் வெளிக்கிட்டு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை செய்வார். காணி சுவீகரிப்புக்காக காணி அளவீட்டு பணிகளை முன்னெடுக்க முயலும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சிவாஜியாரின் குரல் ஒலிக்கும்.

அவ்வாறே முல்லைத்தீவு "கோட்டாபய" கடற்படை முகாமிற்காக காணி சுவீகரிக்கும் நோக்குடன் , காணிகளை அளவீடு செய்ய வந்தவர்களை காணி உரிமையாளர்கள் உள்ளிட்டவர்களுடன் தடுத்து நிறுத்தி போராடினார். அதன் போது நில அளவையாளர்கள் வந்த வாகனத்தை சேதப்படுத்தினார் என குற்றச்சாட்டில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு முகம் கொடுத்து வந்தவர்.

2001-2010 காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்கள இனவெறிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் விவாதங்களுக்கு அவர்கள் மொழியிலே, அவர்கள் பாணியில் திருப்பிப் பதிலடி கொடுக்கும் வல்லமையும் துணிவும் கொண்டவர்.

2020இல் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்தில் அவர் தேர்தல் கேட்டபோது எப்படியாவது அவரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கும் முயற்சிகள் செய்தோம். அவர் பாராளுமன்றத்திற்குச் சென்றிருந்தால் பல விடயங்களில் அது தமிழர்களுக்கு நன்மையளித்திருக்கும்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கூட்டணி வைப்பதற்குப் பேச்சுகள் நடைபெற்றபோது இறுதியில் ஆசன ரீதியில் விட்டுக்கொடுப்பு தேவைப்பட்டபோது எந்தத் தயக்கமும் இல்லாமல் தமிழ்த் தேசிய ஒற்றுமைக்காகத் தனது தேர்தல் ஆசனத்தையே விட்டுக்கொடுக்க முன்வந்தவர்.

இரண்டு முறை இலங்கை சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர். தமிழர் தரப்பில் ஒரு பொதுவேட்பாளர் போட்டியிட வேண்டும் என்ற சிந்தனையைத் தமிழர் தரப்பில் விதைத்தது மட்டுமல்லாமல் போட்டியிட்டும் சாதித்துக்காட்டியவர்.

சிவாஜிலிங்கம் வடமாகாண சபையில் செங்கோலைத் தூக்கியிருக்காவிட்டால் வடமாகாண சபையில் அன்று தமிழின அழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கமாட்டாது. எப்போதும் அவர் அடிக்கடி சொல்லுவார், வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றும்போது மாணவனாக அதில் பங்கேற்றேன் என்று.

அவர் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் வந்த முதல் இடம் பண்ணாகம் மண்தான். பண்ணாகம் மண் மீதும் மக்கள் மீதும் தனிப்பட்ட பந்தம் அவருக்கு உள்ளது. சுகவீனமுற்று சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையில் "கட்டாய ஓய்வு" எடுக்க வேண்டும் என வைத்தியர்கள் கண்டிப்பாக கூறிய போதிலும் ஓய்வின்றி போராட்ட களங்கள் நினைவேந்தல் நிகழ்வுகளில் அவர் நிற்பார். கடுமையாக நோய்வாய்ப்பட்டு, கதைக்க கூட முடியாத நிலையில் கூட ஊடக சந்திப்புக்களில் கலந்து கொண்டு தனது நிலைப்பாடுகளை தெரிவித்து வந்தார்.

தனது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு நிதியுதவி வழங்குங்கள் என அவர் வாய்விட்டு கேட்ட போது பல்வேறு தரப்பினரும் உலகெங்கும் இருந்து அவருக்கு நிதியுதவியை வழங்கினார்கள். அவ்வாறான நிலையில் கூட தனக்கு சேர்ந்த நிதியில் ஒரு தொகையை இன்னுமொருவரின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு வழங்கினார்.

மனுஷனின் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறு விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் அவ்வாறான விமர்சனங்களை தாண்டியும் பலராலும் மதிக்கப்படும் மனுஷன்.

வாழைக்குற்றியும் கற்பூரமும் கொண்டு வந்து நினைவேந்தல்களை முன்னின்று செய்த மனுஷன் , போராட்டக் களங்களின் ஒலிக்கும் அந்த அஞ்சாத குரலும், முன்னணியில் தெரியும் அந்த உருவமும் வெறும் நினைவுகளாக மட்டுமே எஞ்சப் போகின்றன. தேர்தல் அரசியலுக்கு அப்பால் கொள்கை அரசியலை முன்னெடுத்து இறுதிவரை மக்களோடு மக்களாகக் களத்தில் நின்றவர்.

ஈழத்தமிழர்களின் அஞ்சாமை-சுயமரியாதை: தமிழ்த் தேசியவாதி சிவாஜிலிங்கம்!

ஈழத்தமிழர்களின் சமகால அரசியல் வரலாற்றில் கொள்கைப் பிடிப்பும் எளிமையும் கொண்ட தனித்துவமான ஆளுமையாக மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் திகழ்ந்தவர். வல்வெட்டித்துறை மண்ணில் 1957ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் திகதி பிறந்த இவர் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒரு மக்கள் பிரதிநிதியாக வாழ்ந்து மறைந்துள்ளார்.

ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடாகத் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த சிவாஜிலிங்கம், 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதன் முக்கிய தூண்களில் ஒருவராகச் செயற்பட்டார். அரசியலில் ஈடுபட்டால் உண்மையான மக்கள் சேவகனாக இருக்க வேண்டும் என்பதற்குச் சிவாஜிலிங்கம் ஒரு வாழும் உதாரணமாகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையில்லை.

அவர் தனக்கோ தனது குடும்பத்தினருக்கோ உறவினர்களுக்கோ எந்தவொரு சொத்தையும் சேர்த்து வைக்கவில்லை. தனக்குக் கிடைத்த வருமானத்தையும் வளங்களையும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகவே செலவிட்டார். குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதார உதவிகளுக்காகத் தனது இறுதி மூச்சுவரை உழைத்திருந்தார். 2009ஆம் ஆண்டு இறுதி யுத்ததின் பின்னரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவராகவே அவர் தொடர்ந்து அழைத்து வந்தார். போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளைப் பாதுகாப்புப் படையினர் தடுத்து வந்த காலகட்டத்தில் அவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகளை அவர் ஏற்பாடு செய்தார்.

சிவாஜிலிங்கத்தின் அரசியல் துணிச்சலுக்கும் சுயமரியாதைக்கும் 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஒரு வரலாற்றுச் சாட்சியாகும். அத்தேர்தல் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதிக்குச் சென்றிருந்த வேளையில் ஆயுதக் குழு ஒன்றின் கொடூரத் தாக்குதலுக்கு உள்ளானார். இத்தாக்குதலில் அவருடன் பயணித்த இருவர் கொல்லப்பட்டதுடன், 29 பேர் படுகாயமடைந்தனர். சிவாஜிலிங்கமும் கடுமையாகத் தாக்கப்பட்டுக் கால் முறிவடைந்த நிலையில் உயிர் தப்பினார்.

இத்தனை கொலைவெறித் தடைகளையும் தாண்டி, 17,859 விருப்பு வாக்குகளைப் பெற்று மக்கள் ஆணையுடன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். நடக்க முடியாத நிலையிலும், தனது மக்களின் குரலைச் சபையில் ஒலிக்கச் செய்வதற்காக சக்கர நாற்காலியில் சபைக்குள் அழைத்து வரப்பட்டார். தனக்குரிய ஆசனத்திற்குச் செல்ல முடியாத நிலையிலும் சபையின் வாசல் கதவருகே சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே அவர் ஆற்றிய உரை ஈழத்தமிழர்களின் தளராத மனவுறுதியையும் சுயமரியாதையையும் தென்னிலங்கைக்கு உரத்து உணர்த்தியது.

தமிழ்த் தேசியக் கொள்கையில் எவ்வித சமரசத்திற்கும் இடமளிக்காத சிவாஜிலிங்கம், இலங்கை அரச கட்டமைப்பின் அடக்குமுறைகளுக்கு எதிராக வீதியிலும் சபையிலும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். 2013ஆம் ஆண்டு வடமாகாணத்தின் முதலாவது மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். புதிய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்ய மறுத்த ஒன்பது மாகாணசபை உறுப்பினர்களில் சிவாஜிலிங்கமும் ஒருவராக இருந்தார்.

முள்ளிவாய்க்காலில் உள்ள கடற்கரையோர இந்து ஆலயமொன்றில் அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்குப் புரியும் வகையில் இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்கள மொழியிலேயே உரத்துச் சத்தமிட்டுத் தமிழ் மக்களின் நியாயங்களை முன்வைத்தார்.

குறிப்பாக, 2003ஆம் ஆண்டு நாடாளுமன்ற அமர்வின் போது, "ஜக்கிய நாடுகள் சபையில் புலிக் கொடி பறக்கும்" என அவர் முழங்கியமை, ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி சிங்கள உறுப்பினர்களிடையே பெரும் சலசலப்பையும் வாய்த்தர்க்கத்தையும் ஏற்படுத்தியது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தடைகளை மீறி முன்னின்று செயற்பட்டார்.

இதனால் பலமுறை கைது செய்யப்பட்டும், நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டும் தனது கொள்கையில் உறுதியாக நின்றார்.

மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் என்பது வெறுமனே ஒரு தனிமனிதனின் பெயரல்ல் அது ஈழத்தமிழர்களின் அஞ்சாமையினதும் சுயமரியாதையினதும் அடையாளம்!

எட்டு கனடியப் பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள் மீது அமெரிக்க நிதி அமைச்சுத் தடை?

நிதித் தடைகளை ஈரானிய அமைப்புகள் மீறிச் செயல்பட உதவியதாகக் குற்றம் சாட்டி, எட்டு கனடியப் பணப்பரிவர்த்தனை வணிகங்கள் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

"ஒப்பரேஷன் எகனாமிக் அவுட்காஸ்ட்" என்று அழைக்கப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்க நிதித் திணைக்களம் வெள்ளிக்கிழமை இந்த நடவடிக்கைகளை அறிவித்தது.

ஈரானிய ரியால்கள் மற்றும் பிற நாணயங்களை cryptocurrency போன்ற டிஜிட்டல் சொத்துக்களாக மாற்றுவதன் மூலம் இந்த வணிகங்களில் சில தங்களின் வருவாயைச் சலவை செய்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளதுடன், இ வணிகங்களில் சில போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவர் என்று குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு உதவியதாகவும் சேர்த்துக் கூறியுள்ளது.

"ஈரானிய ஆட்சிக்கும் அதன் பதிலாளிகளுக்கும் தடைகளிலிருந்து தப்பிக்கும் சேவைகளை வழங்கும் சட்டவிரோத நிதி உதவி அமைப்புகளுக்குக் கனடா பாதுகாப்பான புகலிடமாக இருக்க முடியாது," என்று அமெரிக்க நிதி அமைச்சர் Scott Bessent ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் கூற்றுப்படி, இந்த வணிகங்கள் ஒன்ராறியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இவற்றில் மில்லியன் எக்ஸ்சேஞ்ச் (Million Exchange), Amin Exchange மற்றும் Cryptoyal ஆகியவை அடங்கும்.

இந்தத் தடைகள் நிறுவனங்களை அமெரிக்க டாலர் அடிப்படையிலான நிதி அமைப்பிலிருந்து திறம்படத் துண்டிக்கின்றன, மேலும் அமெரிக்காவில் அவை வைத்துள்ள எந்தவொரு சொத்துக்களையும் முடக்குவதுடன், அமெரிக்க நபர்கள் அல்லது அமைப்புகளுடனான பரிவர்த்தனைகளிலிருந்தும் அவற்றை விலக்குகின்றன.

அமெரிக்க நிதி அமைச்சின் அறிவிப்பு வெளியான சிறிது நேரத்திலேயே, கனடாவின் நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் அறிக்கைகள் பகுப்பாய்வு மையம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில், பணப்பரிவர்த்தனை வணிகங்களுக்கு எதிரான தடைகளை விதிக்க அமெரிக்க நிதிசார் குற்றங்கள் அமலாக்க வலையமைப்புடன் இணைந்து பணியாற்றியதாகத் தெரிவித்துள்ளது.

"பணமோசடி, பயங்கரவாத நிதி மற்றும் தடைகளிலிருந்து தப்புதல் ஆகியவற்றை எதிர்த்துப் போராட சர்வதேச நிதி புலனாய்வுப் பிரிவுகளுடன் குஜவேசுயுஊ தவறாமல் செயல்படுகிறது," என்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம், உலகெங்கிலும் உள்ள நிதி புலனாய்வுப் பிரிவுகளுக்கு உளவுத்துறைத் தகவல்களை வெளிப்படுத்த இந்த மையத்தால் முடிகிறது."

வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட ஒரு தனி அறிக்கையில், அமெரிக்க நிதி அமைச்சு, அதன் பணமோசடி எதிர்ப்புப் பிரிவான FinCEN, MEXC Global என்ற பணப்பரிவர்த்தனை நிறுவனத்தைக் இலக்கு வைத்து ஓர் உத்தரவைப் பிறப்பித் துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

Seychelles பதிவுசெய்யப்பட்ட MEXC குளோபல் நிறுவனத்தைக் குறிப்பிடும் ∴பின்சென், ஈரான், வடகொரியா மற்றும் ரஷ்யாவுடன் தொடர்புடைய சட்டவிரோதப் பரிவர்த்தனைகளிலும், பிற தடை செய்யப்பட்ட அமைப்புகளுடனான பரிவர்த்தனை களிலும் குறைந்தது 16 பில்லியன் டாலர் மதிப்பிலான பரிவர்த்தனைகளுக்கு அது வசதி செய்து கொடுத்துள்ளதால், அந்நிறுவனம் தொடர்பான நிதிப் பரிமாற்றங்களைச் செயலாக்குவதிலிருந்து அமெரிக்க நிதி நிறுவனங்களை இந்த உத்தரவு தடுக்கிறது என்று கூறியுள்ளது.



டெஹ்ரான் மீதான மேலதிக அழுத்தம்

அமெரிக்க நிதி அமைச்சகத்தின் கூற்றுப்படி, அதன் தடைகள் பிரச்சாரமானது "ஈரானிய ஆட்சியையும், கனடாவாலும் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடப்பட்டுள்ள இஸ்லாமிய புரட்சிகர காவல் படையையும் தாங்கிப் பிடிக்கும் பொருளாதார உயிர்நாடிகளைத் துண்டிப்பதை" நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதன்கிழமை, ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி மற்றும் விமான நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளை ஈரான் மீறுவதற்கு உதவியதாகக் குற்றம் சாட்டி, இந்தியா மற்றும் துருக்கியில் உள்ள வலையமைப்பு ஒன்றுக்கு அமெரிக்க நிதி அமைச்சு தடை விதித்தது.

இந்த வலையமைப்பு வடஇந்திய நகரமான சண்டிகரைச் சேர்ந்த சுநீல் குமார் சர்மா மற்றும் அவரது மனைவி ஜஸ்ப்ரீத் பிரீதி ஷாஹித் ஆகியோரால் நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க நிதி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை ஈரானின் ரியால் மதிப்பைப் புதிய சரிவுக்குத் தள்ளியுள்ளதுடன், பணவீக்கத்தைச் சுமார் 90 சதவீதமாக உயர்த்தியுள்ளது என்றும் அமெரிக்கா கடந்த வாரம் உரிமை கோரியுள்ளது.

கனடாவில் அடையாளம் காணப்பட்ட வணிகங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

Diverse Trade Inc Ontarioவில் மில்லியன் Million Exchange என்ற பெயரில் இயங்குகிறது.

1380079 BC லிமிடெட், பிரிட்டிஷ் கொலம்பியாவில் Amin Exchange என்ற பெயரில் இயங்குகிறது.

Top PC Technician Inc இன் கார்ப்பரேஷன் ஒன்ராறியோவில் இயங்குகிறது.

NIA Nations Currency Ltd, பிரிட்டிஷ் கொலம்பியாவை மையமாகக் கொண்டது.

2397639 Ontario LTD, Farah Exchange என்ற பெயரில் இயங்குகிறது.

ஒன்ராறியோவில் உள்ள CCC இன் கார்ப்பரேஷன்.

B கேலக்ஸி இன் கார்ப்பரேஷன், ஒன்ராறியோவில் ஊஊஊஊ இன் கார்ப்பரேஷன் இயங்கும் அதே இடத்திலிருந்து ஊசலிவழலயட என்ற பெயரில் இயங்குகிறது.

ஒன்ராறியோவில் உள்ள Darvish Exchange.

BEHIND ME MEDIA

கனடாவில் தாய் மற்றும் மகளைக் கொன்ற நான்கு கரடிகள் சுட்டுக் கொலை!



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் தாயும் மகளும் கரடித் தாக்குதலில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நான்கு Grizzly கரடிகள் கொல்லப்பட்டுள்ளன.

Bella Coola பகுதியில் உள்ள பாதை ஒன்றில் பிற்பகல் வேளையில் நடைபயிற்சி மேற்கொண்ட Jennifer Balcarras – 48 மற்றும் அவரது மகள் Selah Reed – 20 ஆகியோர் இம்மாத தொடக்கத்தில் உயிரிழந்தனர்.

அவர்களது மரணம் தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பியா வனவிலங்கு பாதுகாப்பு சேவை (BCCOS) விசாரணையைத் தொடங்கியது. தடயவியல் சோதனைகளின் மூலம் பெண் கரடி ஒன்றும் அதன் மூன்று குட்டிகளுமே இத்தாக்குதலுக்குக் காரணம் என்பது உறுதியானது.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருதி மாகாண மனித-வனவிலங்கு மோதல் எதிர்வினை வழிகாட்டுதல்களின்படி அந்த நான்கு கரடிகளும் அழிக்கப்பட்டதாக பிசிசிஓஎஸ் ஆய்வாளர் Jeff Tyre செவ்வாய்க்கிழமை வெளியிட்ட புதுப்பிப்பில் தெரிவித்தார்.

"விசாரணையின் சான்றுகள் மற்றும் விலங்குகளின் னுயே ஆகியவை பகுப்பாய்வு செய்யப்பட்டு இத்தாக்குதலுக்கும் பெண் கரடி மற்றும் அதன் மூன்று குட்டிகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பது உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இத்தாக்குதல் "பெரும்பாலும் இரையை வேட்டையாடும் நடத்தையை வெளிப்படுத்துவதாக இருந்தது" எனக் குறிப்பிட்ட டயர் இத்தகைய சம்பவங்கள் "மிகவும் அரிதானவை" என்றும் சுட்டிக்காட்டினார்.

கடினமான நிலப்பரப்பு மற்றும் மோசமான வானிலைக்கு மத்தியிலும், கடந்த வாரத்தில் 12-க்கும் மேற்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் இந்த புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிரிழந்த துநகைநச அவரது மகள் ளுநடயா ஆகிய இருவரும் "ஒன்றாகவே நேரத்தைச் செலவிடும் நெருங்கிய தோழிகளைப் போல வாழ்ந்தவர்கள்" என்றும், பல பொதுவான பொழுதுபோக்குகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் என்றும் ஜெனி.∴பரின் சகோதரர் ஜோஷ் CBC ஊடகத்திற்குத் தெரிவித்தார்.

"ஜெனி மலைப்பாதைகளில் நடைபயிற்சி மேற்கொள்ளும் போதெல்லாம், சேலாவும் அவளுக்கு அருகிலேயே இருப்பாள்" என்று அவர் கூறினார்.

இதே பெல்லா கூலா பகுதியில் 2025 ஆம் ஆண்டு பாடசாலைக் குழுவொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இந்த நான்கு கரடிகளுக்கும் தொடர்பில்லை என்பது டிஎன்ஏ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஆய்வாளர் டயர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த அந்தச் சம்பவத்தில் 11 பேர் காயமடைந்ததுடன் அவர்களில் இருவர் பலத்த காயமடைந்தனர். ஆனால் அத்தாக்குதலுக்குக் காரணமான கரடி கண்டறியப்படவில்லை.

சமீபத்திய கொடூரத் தாக்குதலில் ஈடுபட்ட கரடிகளைப் பிடித்து கருணைக்கொலை செய்துள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியா வனவிலங்கு பாதுகாப்பு சேவை உறுப்பினர்கள் மூலம் இன்று அறிந்து கொண்டோம்" என Nuxalk Nation சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் Samuel Schooner வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"இந்தச் சம்பவத்திற்குத் தீர்வு காண அர்ப்பணிப்புடன் பாடுபட்ட பிரிட்டிஷ் கொலம்பியா வனவிலங்கு பாதுகாப்பு சேவைக்கு எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த ஆண்டின் தாக்குதலில் இருந்து நாங்கள் மீண்டு வரும் வேளையில் இத்தாக்குதல் எங்களது சமூகத்தினரிடையே மீண்டும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப ˙பட்டவர்களின் குடும்பத்தினருடன் எங்களது பிரார்த்தனைகள் எப்போதும் இருக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடியர்கள் ஏன் அத்தியாவசிய சேவைகள் இன்றி 72 மணி நேரம் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும்?

Canadian Disaster Response Organization
We Are Here To Help

நெருக்கடி நிலைக்குத் தயாராக இருக்குமாறு நாடுகளும் அதற்காக மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதும் குறித்தும் கனடாவின் பேரிடர் மீட்பு நிறுவனத்தைச் சேர்ந்த சுசான் பெர்னியர் விளக்குகிறார்.

அவசரநிலைகளுக்குத் தயாராக இருக்குமாறும் வீடுகளில் குறைந்தது மூன்று நாட்களுக்குத் தேவையான அவசரப் பொருட்களைப் பராமரிக்குமாறும் பல நாடுகளின் அரசாங்கங்கள் தங்கள் நாட்டு மக்களுக்கு வலியுறுத்தி வரும் நிலையில் இது புதிய அறிவுரை அல்ல என்று கனடிய அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும், குடும்பங்கள் இதனைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

தீவிர வானிலை, இணையத் தாக்குதல்கள் மற்றும் பிற அவசரநிலைகளால் ஏற்படும் சாத்தியமான தடைகள் உள்பட, நெருக்கடி காலங்களில் சுயமாக இயங்குவதன் அவசியத்தை இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட அவசர காலத் தயாரிப்புப் பிரச்சாரங்கள் மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளன.

72 மணி நேர அவசரநிலையைச் சமாளிக்கத் தேவையான அத்தியாவசியப் பொருட்களுடன் ஒரு பையைத் தயார் செய்யுங்கள்:

குடிநீர் மற்றும் கெடாத உணவுப் பொருட்கள்,

ஒளிரும் விளக்கு மற்றும் பேட்டரி மூலம் இயங்கும் ரேடியோ,

முதலுதவி பெட்டி மற்றும் மருந்துகள்,

உடைகள்...

பொதுப் பாதுகாப்பு கனடா நிறுவனம் இயங்கும் நீர் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகள் இன்றி கனடியர்கள் குறைந்தபட்சம் 72 மணி நேரம் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறது.

எனினும், கனடாவின் பேரிடர் மீட்பு நிறுவனத்தின் பயிற்றுநரான சுசான் பெர்னியர், நவம்பர் 4 அன்று ஒளிபரப்பான 'CTV யுவர் மார்னிங்' நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தச் செய்தி பல தசாப்தங்களாக நடைமுறையில் உள்ளது என்று தெரிவித்தார்.

குடும்பங்கள் மூன்று நாட்களுக்குத் தாங்களாகவே சுயாதீனமாகச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற பரிந்துரை, கனடாவிலும் பிற நாடுகளிலும் நீண்டகாலமாக உள்ள ஒரு வழிகாட்டுதலாகும் என்று பெர்னியர் கூறினார்.

"உலகெங்கிலும், கனடாவிலும் நாம் இப்போது கேட்கும் இந்தச் செய்தி... புதியதல்ல. 30 ஆண்டுகளுக்கு முன்பு நாம் வழங்கிய அதே செய்திதான் இது" என்று அவர் குறிப்பிட்டார்.

குடிமக்கள் திடீரென வெளியேற்றப்பட வேண்டிய அவசரநிலை ஏற்பட்டால், உடனடியாக எடுத்துச் செல்வதற்கு அவசர காலத் தொகுப்பு ஒன்றை தயாராக வைத்திருப்பது பாரம்பரியமாகவே அவசர காலத் தயாரிப்பில் அடங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இணையத் தாக்குதல்கள் மீதான வளர்ந்து வரும் கவலைகள் கடுமையான வானிலை மற்றும் இயற்கை இடர்கள் முக்கியமான கவலைகளாகத் தொடர்ந்தாலும், இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் அவசர காலத் தயாரிப்பு விவாதங்களில் zunehmgehend (அதிகரித்து) இடம்பெற்று வருவதாக பெர்னியர் தெரிவித்தார்.

"எந்த நேரத்திலும், எதிர்காலத்தில் எப்போதாவது நம் ஒவ்வொருவரையும் இந்த இணையத் தாக்குதல்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதித்திருக்கும் என்பதை நாம் அறிவோம்" என்று அவர் கூறினார்.

Public Safety Canada

சாத்தியமான பிற அச்சுறுத்தல்களுடன் இணைந்து, இணையப் பாதுகாப்பு தொடர்பான அபாயங்களைப் புரிந்துகொள்வதில் கனடா முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் பெர்னியர் கூறினார்.

கனடியர்கள் பீதியடையத் தேவையில்லை அவசர காலத் தயாரிப்பு மீதான newfound கவனம் மக்கள் அச்சமடைவதற்கான காரணமல்ல என்று பெர்னியர் கூறினார்.

மாறாக, அவசர காலச் சேவைகள் உடனடியாக அவர்களைச் சென்றடைய முடியாத பட்சத்தில், குடும்பங்களால் தங்களைச் சமாளிக்க முடியுமா என்பதை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு வாய்ப்பாக இது அமைகிறது என்றார்.

"மக்கள் 72 மணி நேர அவசர காலத் பெட்டிகளைத் தயார் செய்து வைத்திருக்குமாறு நினைவூட்டி இந்தச் செய்தி வெளிவருவதற்கான மற்றொரு காரணம் என்னவென்றால், கடந்த 30 ஆண்டுகளில் நாம் இந்த விஷயத்தில் பெரியளவில் முன்னேறவில்லை என்பதுதான்" என்று அவர் கூறினார்.

புதிய எச்சரிக்கைகளைக் கேட்கும் கனடியர்களுக்கு அவரது அறிவுரை நேரடியானது: "இது குறித்துக் கவலைப்படவோ அல்லது பதற்றமடையவோ தேவையில்லை இது மக்களுக்கு நாம் நினைவூட்ட முயற்சிக்கும் ஒரு விஷயம் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்."

BEHIND ME MEDIA

ஏமாற்றப்பட்ட 40 இலங்கையர்களுக்கு உதவி?

சவூதி அரேபியாவில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்த 40 இலங்கைப் பணியாளர்களுக்கு, அவர்களுக்குரிய நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக சுமார் 569 இலட்சம் ரூபாய் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் தேவப்பிரிய குணசிங்க தலைமையில் இந்த நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்தப் பணியாளர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்படாமல் இருந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக 639,381 சவூதி ரியால்கள் (இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் 569 இலட்சம் ரூபாய்) அறவிடப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சவூதி அரேபியாவில் சட்ட விரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பணியாளர்களை மீட்டு, அவர்களைப் பாதுகாப்பாக மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரவதற்கும் தூதரகத்தின் குறித்த பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது.

தூதரகத்தினால் மீட்கப்பட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்த உரிமைத் தொகை, இன்று உரிய பணியாளர்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுப் பயங்கரவாதி போராளிகளைத் தடுத்தல் சட்டமூலத்துக்கு அங்கீகாரம்!



வெளிநாட்டுப் பயங்கரவாதிப் போராளிகளைத் அல்லது இலங்கைக்கு வெளியே தவறிழைத்திருந்து தடுத்தல் சட்டமூலத்திற்கு பொருளாதார அது அந்நாட்டின் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய இருப்பின் இச்சட்டத்தின் கீழ் இலங்கையில் துறைசார் மேற்பார்வைக் குழுவில் அங்கீகாரம் நடவடிக்கை எடுக்க முடியும். வழங்கப்பட்டது.

சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இச்சட்டமூலம் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

வெளிநாட்டு பயங்கரவாதிப் போராளிகளால் எதிர்நோக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பான 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2178 இற்கு பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமான சட்டமூலமாக இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கடந்த ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இலங்கை பிரஜையொருவர் அல்லது இலங்கை பிரஜை அல்லாத வேறொரு நாட்டின் பிரஜை ஒருவர் இலங்கையில் சமுகமாயிருக்கையில்,

பயங்கரவாத செயல்களை மேற்கொள்ளல், திட்டமிடுதல், தயார்செய்தல் அல்லது அதில் பங்குபற்றுதல், பயங்கரவாத பயிற்சிகளை வழங்குதல் அல்லது பெறுதல் போன்றவை இச்சட்டத்தின் கீழ் தவறுகளாகக் குறிப்பிடப்பட்டிருப் பதாக அதிகாரிகள் குழுவில் விளக்கமளித்தனர்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை இன ரீதியாக இலக்குவைத்து கொண்டுவரப்படும் சட்ட ஏற்பாடு இல்லையென்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து குறித்த சட்டமூலத்திற்கு குழு அங்கீகாரம் வழங்கியது. குழுவின் உறுப்பினரான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இச்சட்டமூலத்திற்கு தனது எதிர்ப்பினைப் பதிவு செய்தார்.

இக்குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் களான சுரங்க ரத்னாயக்க, திலின சமரக்கோன், விஜேசிறி பஸ்நாயக்க, சிவஞானம் சிறிதரன் உள்ளிட்டோரும், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தி அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கனடா உயர்ஸ்தானிகருடன் தமிழர் தரப்பு சந்திப்பு



கடந்த வாரம் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் மாண்புமிகு இசபெல்லா மார்டின் அம்மையாருடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சந்திப்பு நடத்தியது.

இதில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆகிய திரு தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களும் ரெலோவின் உப தலைவரும் பேச்சாளரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் துணைத் தேசிய அமைப்பாளருமான குருசுவாமி சுரேந்திரன் அவர்களும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் செந்தில்நாதன் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களினுடைய நீண்ட கால கோரிக்கையான நிரந்தரமான அரசியல் தீர்வு மற்றும் காத்திரமான பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னிலைப்படுத்திய தற்போதைய அரசு அது சம்பந்தமாக எந்த நகர்வுகளையும் மேற்கொள்ளாமல் இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்கம் நடைமுறைப்படுத்த உள்ள பயங்கர வாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்ட மசோதா (PSTA) மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல் மசோதா (OCB) ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டிற்கும் அதிலும் சிறுபான்மை இன மக்கள் எதிர்கொள்ள இருக்கும் அபாயங்களை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையான நிரந்தர அரசியல் தீர்வு, காணி அபகரிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைக்கான நீதிப் பொறிமுறை, மற்றும் திட்டமிட்டு பின் போடப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல்கள் என்பவற்றிற்கு எதிராக தொடர்ந்து போராடி வருகின்ற நிலையிலே இந்த சட்டமூலங்களின் ஊடாக அந்தப் போராட்டங்களை ஒடுக்கவும் தனி மனிதர்களை குறி வைத்து வகை தொகை இன்றி கைதுகளை மேற்கொள்ளவும் வழி வகுக்கும் அபாயத்தை பற்றி சுட்டிக்காட்டப் பட்டது.

மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று மனித உரிமை பேரவையின் அறிக்கைகள் தெளிவாக கூறி வருகின்ற போதிலும் அரசாங்கம் அதை முற்றாக நீக்குவதற்கு பதிலாக, அதற்கு பதிலீடான ஆபத்தான சட்டங்களை நடைமுறைப்படுத்த முனைவது தமிழ் மக்களுக்கும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஆபத்தான விடயம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

தொடர்ந்து மாகாண சபை தேர்தல்களை அரசாங்கம் இழுத்தடித்து வருவது எமது பிரதேசங்களில் மாகாண சபையின் நிர்வாக கட்டமைப்பு இல்லாமையினால் பல்வேறு அரச நிறுவனங்களினால் காணி அபகரிப்புக்கும் சட்டவிரோத குடியேற்றங்களுக்கும் வழிவகுக்கிறது என்பதும் முன்வைக்கப்பட்டது. வட மாகாணத்தில் அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படாமல் இருக்கும் அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் மேச்சல் தரையான மாதவனை மயிலத்தமடு பிரதேசங்களில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், அங்குள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய மேய்ச்சல் தரையை அபகரித்து கால்நடை வளர்ப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலை நிலவுவது விளக்கப்பட்டது.

நாட்டின் தற்கால சூழலில் நடைபெறும் அரசியல் விடயங்களைப் பற்றி கலந்துரையாடிய வேளையில், அளவுக்கு அதிகமான வரிகளினாலும் கட்டுப்படுத்த முடியாத விலைவாசி உயர்வினாலும் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருக்கும் மக்கள் மாத்திரம் அல்ல மற்றவர்களும் வாழ்வாதார ரீதியாக கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதும் எடுத்துரைக்கப் பட்டது.

இவற்றிற்கு பதில் அளித்த உயர் ஸ்தானிகர், ஐநா மனித உரிமை விடையங்களில் கனேடிய அரசு தொடர்ந்தும் உறுதியுடன் செயல்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார். இலங்கை அரசோடு தாம் மேற்கொள்ளும் விடயங்களில் கனடிய மக்கள் சார்பிலே குறிப்பாக அங்கு வாழும் இலங்கை மக்களின் பிரதிநிதியாகவும் செயல்படுவதை சுட்டிக்காட்ட தவறுவதில்லை என தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் சமர்ப்பிக்கப்பட்ட வேளைகளிலும் நாங்கள் அவற்றை கவனமாக அவதானித்து வந்துள்ளோம்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைக்கப் பட்ட குற்ற செயல்கள் கனடாவிலும் பிரதிபலிப்பை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்ர்.

அவற்றை கட்டுப்படுத்துவதற்காக தாங்கள் இலங்கையோடு சேர்ந்து செயல்பட்டு வந்தாலும், காட்டுமிராண்டித்தனமான சட்டங்கள் இயற்றப் படுவதை தாங்கள் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்வதில்லை என்றும் தெரிவித்தார். இப்பொழுது இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த இருக்கும் சட்டங்களை பற்றி தாங்கள் ஏற்கனவே அவர்களிடம் தமது கரிசனைகளை வெளிப்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் தமது பங்களிப்பை மேற்கொண்டு வருகின்ற பொழுதிலும் வடக்கு கிழக்கிலே குறிப்பாக தமிழ் மக்களினுடைய அபிவிருத்தி சம்பந்தமாக பல வேலை திட்டங்களை கனியடி அரசு முன்னெடுத்து வருவதை சுட்டி காட்டினார்.

கனடாவில் உள்ள புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வடக்கு கிழக்கிலே ஏற்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் அதனுடாக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் தாங்கள் பல வேலை திட்டங்களை முன்னெடுத் துள்ளதாகவும் தெரிவித்தார்.

மனித உரிமை விடயங்கள் சம்பந்தமாகவும் தமிழ் மக்களினுடைய பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாகவும் தாம் தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார்

BEHIND ME MEDIA

பிரிந்து வாழ்ந்த மனைவி கொலை கணவர் மீது குற்றம்:

பிரிந்து வாழ்ந்த தனது மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர், கொலைக் குற்றச்சாட்டின் கீழ் முதன்முறையாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது துயரத்தில் ஆழ்ந்த குடும்பத்தினரும் நண்பர்களும் நீதிமன்ற அறையை நிரப்பியிருந்தனர்.

Fraser Valley பகுதியைச் சேர்ந்த அனைவராலும் அன்பாக நேசிக்கப்பட்ட ஒரு தாயும் பாட்டியுமான பெண்ணைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் அவரது பிரிந்து வாழ்ந்த கணவரே என்று அப் பெண்ணின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

52 வயதான Kitty Lou Hayward என்பவரின் மரணம் தொடர்பாக, 55 வயதான Kristopher John Hayward என்பவர் மீது இரண்டாம் நிலை கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை Chilliwack நீதிமன்றத்தில் கிறிஸ்டோ.ர் ஹேவர்ட் குறுகிய நேரம் ஆஜர்படுத்தப்பட்டபோது, அங்கு வந்திருந்த சுமார் இருபதுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் மற்றும் நண்பர்களில் அவரது மகள் Crystal Burton ஒருவர்.

தனது தாயின் வாழ்வு பாதியிலேயே பறிக்கப்படுவதற்கு முன்பு, அவர் சமூகப் பணியாளராக மாறுவதற்காகக் கல்லூரியில் படித்து வந்ததாக அவரது மகள் CTV News ஊடகத்திற்குத் தெரிவித்தார்.

“அவர் அனைவருக்கும் உதவ விரும்பினார். சில்லிவாக்கிலுள்ள சிக்கன விற்பனை நிலையங்களில் ஒன்றில் தன்னார்வலராகப் பணியாற்றவும் தொடங்கவிருந்தார். அதைச் செய்வதை அவர் விரும்பினார் சமூகத்திற்கு உதவுவதை அவர் நேசித்தார்” என்று தனது தாயைப் பற்றி பர்டன் பேசினார்.



நவம்பர் 6 அன்று, சில்லிவாக்கின் மெல்லார்ட் அவென்யூவின் 46000 பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்ற சில்லிவாக் RCMP பொலிஸார் அங்கு கிட்டி ஹேவர்ட்டைக் கண்டறிந்தனர். அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

“காரணமின்றி ஒரு அழகான ஆத்மா பறிக்கப்பட்டுள்ளது. அவர் இங்கு வாழ்ந்திருக்க வேண்டியவர்” என்று அவரது மகள் கூறினார்.

தனது தந்தையுடன் பல வருடங்களாகத் தொடர்பில் இல்லை என்று கூறிய பர்டன், தனது தாயும் தந்தையும் உயர்நிலைப் பள்ளியில் சந்தித்து 1992 இல் திருமணம் செய்து கொண்டதாகவும், ஆனால் சமீபத்தில் பிரிந்து வாழ்ந்ததாகவும் ஊவுஏ நேறள இடம் தெரிவித்தார்.

“அவர்கள் சில மாதங்களாகப் பிரிந்திருந்தனர், பின்னர் அவர் நவம்பர் 1 அன்று தனது சொந்த இடத்திற்கு மாறினார்” என்று அவர் கூறினார்.

தனது சகோதரனுடனான தொடர்பைப் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பே துண்டித்துக் கொண்டதாகக் கூறிய கிறிஸ்டோ.ர் ஹேவர்ட்டின் சகோதரியும், பர்டனுக்கு ஆதரவளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

“இது ஒரு தொடர் பயங்கரக் கனவாக உள்ளது” என்று பென்னி ரெம்பல் (Penny Rempel) கூறினார். “எனது உணர்ச்சிகள் இப்போது முற்றிலும் மரத்துப் போய்விட்டன, நான் மிகவும் கோபமாக இருக்கிறேன் ... என்னால் இப்போது தீவிரமான கோபத்தைத் தவிர வேறு எதையும் உணர முடியவில்லை.”

குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், டிசம்பர் 8 அன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். அவர் மீதான குற்றச்சாட்டு இன்னும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

கனடாவில் அதிகமாகத் திருடப்படும் வாகனங்கள் குறித்து பட்டியல் வெளியீடு!



Équité Association அமைப்பின் புதிய அறிக்கையின்படி கடந்த ஆண்டில் Ontarioவிலும் கனடா முழுவதிலும் அதிகமாகத் திருடப்பட்ட வாகனமாக Honda CR-V பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட இந்த அமைப்பின் வருடாந்த அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டில் கனடா முழுவதும் 2,137 ர்ழனெய ஊசு-ஏ வாகனங்கள் திருடப்பட்டுள்ளன. இதில் Ontario வில் மட்டும் 1,598 வாகனங்கள் அடங்கும்.

இந்த பிரபலமான SUV ரக வாகனம் 2024 இல் ஒன்டாரியோவிலும், 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் கனடா முழுவதிலும் திருடர்களால் அதிகம் இலக்கு வைக்கப்பட்ட வாகனமாக இருந்தது.

2025 ஆம் ஆண்டில் கனடாவில் மொத்தம் 550,586 ஹோண்டா சிஆர்-வி வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

கனடா அளவிலான பட்டியலில் ஹோண்டா சிவிக் மற்றும் Toyota RAV4 உள்ளிட்ட பிற பிரபலமான SUV ரக மாடல்களும் உயர் இடங்களில் உள்ளன. இவை கனடாவில் திருடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையில் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

Quebec மாகாணத்தில் ஹோண்டா சிவிக் வாகனம் அதிகபட்சமாக 487 திருட்டுகள் பதிவாகி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

Alberta மற்றும் அட்லாண்டிக் மாகாணங்களில் இரண்டு பிரபலமான Truck மாடல்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளன.

அல்பெர்ட்டாவில் காப்புறுதி செய்யப்பட்ட 94,621 Ram 1500 Series டிரக்குகளில் மொத்தம் 313 திருட்டுகள் பதிவாகியுள்ளன. அட்லாண்டிக் கனடாவில் காப்புறுதி செய்யப்பட்ட 68,117 வாகனங்களில் 120 Chevrolet/GMC Silverado/Sierra 1500 Series டிரக்குகள் திருடப்பட்டதாகப் பதிவாகியுள்ளது.

Honda CR-V உட்பட உலகளவில் பயன்படுத்தப்படும் வாகனங்களில் உள்ள தொடர்ச்சியான பாதுகாப்பு பலவீனங்களே அவை திருடப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன என எக்விட்டி அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

“நாங்கள் வாகனங்களைத் திருடுவதைக் கடினமானதாக்க வேண்டும். வாகனத் திருட்டு என்பது குறைந்த ஆபத்தும் அதிக லாபமும் கொண்ட ஒரு குற்றமாக நீடிப்பதால், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்புகள் இந்த பலவீனங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி, பல்லாயிரக்கணக்கான கனடியர்களைப் பாதிப்புக்குள்ளாக்குவதுடன், சமூகங்களை உணர்வுரீதியாகவும் நிதி ரீதியாகவும் பாதிக்கின்றன” என்று எக்விட்டி அமைப்பின் தலைவரும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான (CEO) ஹெதர் மாஸ்டர்சன் தெரிவித்துள்ளார்.

வாகனத் திருட்டை எதிர்த்துப் போராட கணிசமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திருடப்பட்ட வாகனங்களால் ஆண்டுதோறும் இழக்கப்படும் 900 மில்லியன் டாலர் தொகையிலிருந்து திருடர்கள் தொடர்ந்து லாபம் ஈட்டி வருவதாக மாஸ்டர்சன் கூறுகிறார்.

“சட்ட அமலாக்கம் மட்டுமே இதற்குத் தீர்வாகாது. Transport கனடாவுடன் கலந்தாலோசித்து, மோட்டார் வாகன பாதுகாப்பு விதிமுறைகளை உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப புதுப்பிப்பது உட்பட, முழு அமைப்பு முழுவதிலும் ஒரு கூட்டுத் தடுப்பு மாற்றம் தேவைப்படுகிறது. கனடியர்கள் மன அமைதிக்குத் தகுதியானவர்கள் அவர்கள் பாதுகாப்பாக உணர்வதற்குத் தகுதியானவர்கள்” என்று மாஸ்டர்சன் கூறினார்.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தேசிய மற்றும் தொழிற்துறை சார்ந்த முயற்சிகளின் காரணமாக 2025 இல் கனடா முழுவதும் வாகனத் திருட்டில் 18 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக எக்விட்டி அமைப்பின் தானியங்கி வாகனத் திருட்டுப் போக்கு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும், 72 சதவீதமான கனடியர்கள், வாகனங்களில் கட்டாயத் திருட்டு எதிர்ப்புத் தொழில்நுட்பங்கள் உள்ளமைக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும் அதை ஒரு விருப்பத் தேர்வுக்கான optional add-on விற்கக்கூடாது என்றும் கருதுவது அந்த அறிக்கையில் தெரியவந்துள்ளது.

எக்விட்டி அசோசியேஷன் என்பது கனடிய சொத்து மற்றும் விபத்து காப்பீட்டாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். “காப்பீட்டு மோசடி மற்றும் குற்றங்களை எதிர்கொள்வதன் மூலம் கனடியர்களைப் பாதுகாக்கவும், மிகவும் நியாயமான உலகிற்குப் பங்களிக்கவும்” 2021 இல் எக்விட்டி அசோசியேஷன் உருவாக்கப்பட்டது.

BEHIND ME MEDIA

Ontario பல்கலைக்கழக மாணவர் மீது குற்றம் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு!



சீன அரசாங்க அதிகாரி எனத் தான் நம்பிய ஒருவருக்காகச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ழுவெயசழைவைச் சேர்ந்த மாணவர் ஒருவர் அமெரிக்க நீதிமன்றத்தில் பொய் அறிக்கை அளித்ததாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்து, தான் குற்றமற்றவர் எனத் தெரிவித்துள்ளார்.

மிச்சிகன் நீதிமன்றத்தின் ஆவணங்களின்படி Weiheng Zeng திங்கள்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது தனது பிணையறிவிப்பைச் சமர்ப்பித்துள்ளார்.

Waterloo பல்கலைக்கழகத்தில் படித்து வந்த சீனக் குடிமகனான செங், இணையவழி அரட்டைத் தளமொன்றில் தான் சந்தித்த மர்மமான சீனத் தொடர்பாளரின் கோரிக்கைக்கு இணங்க, ரொறன்ரோவின் பியர்சன் விமான நிலையம் மற்றும் சிகாகோவின் O’Hare விமான நிலையம் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் கடந்த ஏப்ரல் மாதம் ஓஹேர் விமான நிலையத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்துடன் தொடர்புடையவராகவே Zeng முதன்முதலில் அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டதாக FBI முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார். அப்போதே FedEx வளாகத்தில் நபர் ஒருவர் புகைப்படங்கள் எடுப்பதும் Forklift வாகனத்தின் மீது ஏறுவதும் பூட்டப்பட்ட டிரெய்லர்களைத் திறக்க முயல்வதும் அவதானிக்கப்பட்டது.

அந்தச் சம்பவத்திற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவிற்குள் காரில் நுழைந்த Zeng பின்னர் அந்தச் சம்பவ இடத்தில் காணப்பட்ட மினிவேன் ஒன்றுடன் தொடர்பு படுத்தப்பட்டதாகப் பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் அதே வாகனத்தில் செங் நாட்டிற்குள் நுழைய முயன்றபோது அவர் பலமுறை விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது அவர் ஒன்றுக்கொன்று முரணான வாக்குமூலங்களை அளித்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் இதுவரை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

சிகாகோ பயணத்தின் போது விமானங்களைப் புகைப்படம் எடுத்ததாகச் Zeng முதலில் கூறியிருந்தார் ஆனால் எல்லைப் பாதுகாப்பு முகவர்கள் அவரது கைபேசியைப் பரிசோதித்தபோது அதில் விமானங்கள் மற்றும் இராணுவ விமானங்களின் புகைப்படங்களும் Zeng உட்பட பலர் தந்திரோபாய உடைகளை அணிந்து கொண்டு துப்பாக்கிகளை ஏந்தியிருக்கும் புகைப்படங்களும் கண்டெடுக்கப்பட்டதாக அந்த ஆவணம் தெரிவித்துள்ளது.

விமானக் கட்டுப்பாட்டு ரேடார் இணையதளத்திற்காக மாதிரி விமானங்களின் படங்களை எடுத்ததாக முகவர்களிடம் கூறிய அவர் தனக்கு எவ்வித இராணுவப் பயிற்சியும் இல்லை என மறுத்தார். எல்லை முகவர்களுடனான இரண்டாவது நேர்காணலில் ஓஹேர் விமான நிலையத்தில் பொதுமக்கள் நிறுத்துமிடத்தில் இருந்தே விமானங்கள் தரையிறங்குவதைப் படம் பிடித்ததாகச் Zeng கூறினார், ஆனால் பின்னர் .ஃ.பெட்எக்ஸ்கு edEx வளாகத்தின் .ஃ.போர்க்லி.ஃ.ப்ட்டில் இருந்தே படங்களை எடுத்ததாகக் ஒப்புக்கொண்டார் எனப் பிரமாணப் பத்திரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் பியர்சன் விமான நிலையத்தில் உள்ள குநனநுஒ வளாகத்திற்குள் முன்னதாக அத்துமீறி நுழைந்து பிடிபட்டதாகவும் அவர் கூறினார்.

தனது மூன்றாவது நேர்காணலின் போது செங் முதன்முதலில் ஒரு சீனத் தொடர்பாளரைக் குறிப்பிட்டதுடன் மேலதிக விவரங்களை அளிக்கும்போது அவரது வாக்குமூலங்கள் தொடர்ந்து மாறின என்று அந்த ஆவணம் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் அந்தத் தொடர்பாளர் தனது உத்தியோகபூர்வ அடையாள அட்டை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் மட்டுமே அணுகக்கூடிய பகுதிகளின் வீடியோக்களையும் அனுப்பியதாகவும் அதனால் அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு உடையவரோ எனத் தான் சந்தேகித்ததாகவும் செங் தெரிவித்ததாக அந்த ஆவணம் கூறுகிறது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அட்டவணையின்படி அவரது வழக்கு விசாரணை ஜனவரி மாதம் தொடங்க உள்ளது.

nvidia முதன்மை நிறைவேற்று அதிகாரி பதவியைத் துறந்தார்!



திருமணத்திற்கு அப்பாற்பட்ட தகாத உறவுகள் மற்றும் சீன உளவுப் புகார்கள் குறித்த தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து உலகப் புகழ்பெற்ற என்விடியா நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி (CEO) ஜென்சன் ஹுவாங் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நிறுவனத்திற்கான நிரந்தரத் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை, என்விடியாவின் பிரதம நிதி அதிகாரி (CFO) கொலெட் கிரெஸ் இடைக்கால முதன்மை நிறைவேற்று அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார். நவீன செயற்கை நுண்ணறிவு (AI) சில்லுகள் (Chips) சந்தையில் சுமார் 90 சதவீதத்தைத் தன்வசம் வைத்துள்ள இந்நிறுவனம், உலகின் மிகப் பெறுமதி வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

தனது தனிப்பட்ட உறவுகள் மற்றும் சாத்தியமான தேசிய பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்துப் பல நாட்களாக நிலவிய தீவிர கண்காணிப்பைத் தொடர்ந்து, வியாழக்கிழமை (12) ஹுவாங் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

முன்னதாக, ஞாயிற்றுக்கிழமை தனது மனைவிக்குத் துரோகம் இழைத்ததை ஒப்புக் கொண்ட ஹுவாங், தனது குடும்பத்தினரிடமும் என்விடியா ஊழியர்களிடமும் மன்னிப்புக் கோரியிருந்தார்.

சிறுவயதில் தாய்வானிலிருந்து அமெரிக்கா விற்குக் குடிபெயர்ந்த ஹுவாங், 1993 ஆம் ஆண்டு என்விடியா நிறுவனத்தை இணைந்து நிறுவுவதற்கு முன்பிருந்தே தனது மனைவி லோரியுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார்.

என்விடியா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஆரம்பத்தில் ஹுவாங்கிற்கு ஆதரவளித்ததுடன், அவரது தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை உள்ளதாக ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தது. மேலும், சீன உளவுத்துறையால் அவர் இலக்கு வைக்கப்பட்டாரா என்பது குறித்த செய்திகள் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்றையும் தொடங்கியிருந்தது.

இருப்பினும், ஹுவாங்கிற்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் என்விடியாவின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான கிம்பர்லி பவலுடன் அவருக்குத் தகாத உறவு இருந்ததாக மேலதிகக் குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து, அவரைப் பதவியிலிருந்து நீக்குவது குறித்துப் பணிப்பாளர் சபை கூடி ஆராயவுள்ளதாக புதன்கிழமை 'ரொய்ட்டர்ஸ்' (Reuters) செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து, வியாழக்கிழமை அவரது இராஜினாமாவை நிறுவனம் அறிவித்தது.

பணிப்பாளர் சபையிலிருந்தும் ஹுவாங் விலகியதால், முதன்மை நிறைவேற்று அதிகாரியாக அவரது 33 ஆண்டுகாலப் பதவிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது. அவர் பதவி விலகியதற்கான காரணத்தை என்விடியா வெளியிடவில்லை.

"என்விடியாவிற்கு ஜென்சனின் பங்களிப்புகள் ஆழமானவை" எனத் தெரிவித்துள்ள பணிப்பாளர் சபை, "நிறுவனத்திற்கும் இத்துறைக்கும் அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளுக்கு" நன்றியையும் தெரிவித்துள்ளது.

ஜென்சன் ஹுவாங் மீதான குற்றச்சாட்டுகள் என்ன?



திருமணத்திற்கு அப்பாற்பட்ட தகாத உறவுகள் தொடர்பிலேயே அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தேசிய பாதுகாப்பு குறித்த அச்சங்கள் எழுந்தது ஏன்?

அமெரிக்காவின் நவீன செயற்கை நுண்ணறிவு (AI) சில்லுகளைச் சீனாவிற்கு ஏற்றுமதி செய்வது குறித்து வொஷிங்டனில் விவாதங்கள் நடைபெற்று வரும் சூழலில் இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

63 வயதான ஹுவாங், சீனாவிற்கு என்விடியா சில்லுகளை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுக்கு எதிராகப் பல ஆண்டுகளாகப் பிரசாரம் செய்து வந்தார்.

பெய்ஜிங்கின் செயற்கை நுண்ணறிவுத் திறன்களை இத்தொழில்நுட்பம் வலுப்படுத்தக் கூடும் என்ற அச்சங்களுக்கு மத்தியிலும், 2025 டிசம்பரில் என்விடியாவின் H200 சில்லுகளைச் சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி வழங்கியிருந்தார்.

இந்தச் சில்லுகள், முன்னர் சீனக் கொள்வனவாளர்களுக்குக் கிடைத்த H20 மாதிரிகளை விடச் சுமார் ஆறு மடங்கு அதிக சக்தி வாய்ந்தவை.

இந்த ஏற்றுமதிகள் அமெரிக்காவின் சோதனைகள், விநியோக வரம்புகள், இராணுவப் பயன்பாட்டிற்கான தடைகள் மற்றும் 25 சதவீத வரி ஆகியவற்றிற்கு உட்பட்டவையாகும்.

அல் ஜசீராவின் ஒசாமா பின் ஜாவைத் தெரிவிக்கையில், சீன நிறுவனங்கள் சுமார் 54 பில்லியன் டொலர் பெறுமதியான இரண்டு மில்லியனுக்கும் அதிகமான H200 சில்லுகளுக்கு முன்பதிவு (Order) செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவை வெறும் முன்பதிவுகள் மட்டுமே தவிர, பூர்த்தி செய்யப்பட்ட விற்பனைகள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவுடனான இடைவெளியைக் குறைக்கச் சீனாவிற்கு உதவக்கூடும் என விமர்சகர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

BEHIND ME MEDIA

அவரது தனிப்பட்ட உறவுகள் மூலம் முக்கியத் தகவல்கள் கசிந்திருக்கலாமா என்ற கேள்வி களையும் இக்குற்றச்சாட்டுகள் எழுப்பியுள்ளன.

"அவர் தெரிந்தே பெய்ஜிங்கிற்கு உதவினார் என்பதற்கோ அல்லது நிறுவனத்தின் இரகசியங்கள் கசிந்தன என்பதற்கோ நிறுவப்பட்ட ஆதாரங்கள் எதுவும் இல்லை" என பின் ஜாவைத் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை என என்விடியா பணிப்பாளர் சபையும் தெரிவித்துள்ளது.

என்விடியாவின் புதிய இடைக்காலத் தலைவர் கொலெட் கிரெஸ் யார்?

2013 செப்டெம்பர் முதல் என்விடியாவின் பிரதம நிதி அதிகாரியாகப் (CFO) பணியாற்றி வரும் கொலெட் கிரெஸ், நிறுவனத்தின் பாரிய வளர்ச்சிக் காலகட்டத்தில் அதன் நிதி நிர்வாகத்தை வழிநடத்தினார்.

அவரது பதவிக்காலத்தில், என்விடியாவின் வருடாந்த வருமானம் 2014 நிதியாண்டில் 4.13 பில்லியன் டொலரிலிருந்து 2026 நிதியாண்டில் 215.9 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

என்விடியாவில் இணைவதற்கு முன்னர், 'டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்' (Texas Instruments), 'மைக்ரோசொப்ட்' (Microsoft) மற்றும் 'சிஸ்கோ' (Cisco) ஆகிய நிறுவனங்களில் சிரேஷ்ட நிதிப் பதவிகளை கிரெஸ் வகித்துள்ளார்.

அரிசோனா பல்கலைக்கழகத்தில் நிதியியலில் இளங்கலைப் பட்டமும், தெற்கு மெதடிஸ்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலை வணிக நிர்வாகப் பட்டமும் (MBA) பெற்றுள்ளார்.

'போர்ப்ஸ்' (Forbes) சஞ்சிகையின் தரவுகளின்படி, அமெரிக்காவில் சுயமாக முன்னேறிய மிகப் பெரிய செல்வந்தப் பெண்களில் கிரெஸும் ஒருவராவார்.

தனது நியமனத்தைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கையில், கடந்த 33 ஆண்டுகளில் ஹுவாங் உருவாக்கிய அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தத் தாம் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக கிரெஸ் தெரிவித்துள்ளார்.

கொலெட் கிரெஸ் என்விடியாவின் நிரந்தரத் தலைவராவாரா?

இது குறித்து இதுவரை தெளிவான முடிவு எட்டப்படவில்லை. நிரந்தரத் தலைவர் ஒருவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள என்விடியா பணிப்பாளர் சபை, நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தகுதியானவர்களைப் பரிசீலித்து வரும் நிலையில் கிரெஸை இடைக்காலத் தலைவராக நியமித்துள்ளது.

ஹுவாங்கிற்குப் பதிலாக அப்பிள் (Apple) நிறுவனத்தின் முன்னாள் முதன்மை நிறைவேற்று அதிகாரி டிம் குக்கை (Tim Cook) நியமிக்குமாறு ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார்.

'ட்ரூத் சோஷியல்' (Truth Social) சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப், என்விடியாவில் ஹுவாங்கின் பணிகளைப் பாராட்டியதுடன், அவருக்குப் பதிலாகப் பொறுப்பேற்க டிம் குக் பொருத்தமானவர் எனத் தெரிவித்துள்ளார்.

"ஒரு சகாப்தத்திற்குப் பதிலாக மற்றுமொரு சகாப்தம்" (A Legend replaces a Legend) என ட்ரம்ப் அதில் குறிப்பிட்டுள்ளார்.

2027: இலங்கையின் வரவு செலவுத்திட்டம்

தேசிய மக்கள் சக்தியின் தலைமையிலான அரசாங்கத்தின் மூன்றாவதும் 2027 ஆம் ஆண்டுக்கானதுமான வரவு-செலவுத் திட்டம் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால், பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (12) அன்று சமர்ப்பித்தார்.

பாராளுமன்றத்தில், வரவு-செலவுத்திட்டத்தை பிற்பகல் 1.45 மணிக்கு சமர்ப்பிக்கத் தொடங்கிய ஜனாதிபதி பட்ஜெட் உரையை மாலை 6.35 மணிக்கு நிறைவுசெய்தார். சுமார் ஐந்தரை மணிநேரம் ஒரே மூச்சில் தனது உரையை நிகழ்த்தி, யோசனையை முன்வைத்த ஜனாதிபதி, எதிர்க்கட்சியினரை பார்த்து கேலி கிண்டல்களையும் செய்தார். அப்போது சபையில், சிரிபொலி எழுந்தது.

இதேவேளை, நிவாரணைகள், வரி குறைப்பு, சம்பள உயர்வு, நிதி ஒதுக்கீடுகள் ஆகியவை தொடர்பிலான அறிவிப்புகள் விடுக்கப்பட்ட போது, ஆளும் கட்சியினர் மேசைகளில் தட்டி வரவேற்பு செய்தனர்.

1. வருமான வரி மற்றும் நிவாரணங்கள்

வரி விலக்கு வரம்பு உயர்வு: தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பு மாதமொன்றுக்கு ரூ. 150,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதச் சம்பளம் மற்றும் படிகளாக ரூ. 162,500 வரை பெறுபவர்கள் எந்தவித வரியும் செலுத்த வேண்டியதில்லை.

வரிச் சுமை குறைப்பு: குறைந்த வருமானம் பெறுவோரின் வரிச் சுமையைக் குறைக்கும் வகையில் வரி விகிதங்கள் மற்றும் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

2. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீதான வரிக்குறைப்பு

நுகர்வோர் மீது விலைவாசி அழுத்தத்தைக் குறைக்க, சில அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீதான சிறப்புப் பண்ட வரி குறைக்கப்பட்டுள்ளன:

இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு: கிலோ ஒன்றுக்கு ரூ. 10 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவு மீன் கிலோ ஒன்றுக்கு ரூ. 10 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

மிளகாய் (தூள் மற்றும் முழு மிளகாய்): கிலோ ஒன்றுக்கு ரூ. 50 ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

(இந்த வரி மாற்றங்கள் நவம்பர் 13, 2026 முதல் நடைமுறைக்கு வருகின்றன).

3. கல்வித் துறையில் மேம்பாடுகள்

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் படி.்உதவித்தொகை: ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர்களின் மாதாந்திர உதவித்தொகை ஏப்ரல் 2027 முதல் ரூ. 10,500 இல் இருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்படுகிறது.

பிரிவெனா மாணவர்களுக்கான உதவித்தொகை: பிக்குகளுக்கான தினசரி உதவித்தொகை ரூ. 15 இலிருந்து ரூ. 50 க்கும், ஏனைய மாணவர்களுக்கு ரூ. 5 இலிருந்து ரூ. 25 க்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கல்வி: பாடசாலைகளில் இணைய வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்பக் கருவிகளை வழங்குவதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய்க்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

4. சமூகப் பாதுகாப்பு மற்றும் உதவித்தொகைகள்

சிறுநீரக நோயாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள்: சிறுநீரக நோயாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ. 2,500 ஆல் அதிகரிக்கப்பட்டு, ரூ. 12,500 ஆக வழங்கப்படவுள்ளது.

அஸ்வெசும திட்டம்: ஏழை மற்றும் வறுமைக்கு உட்பட்ட குடும்பங்களைப் பாதுகாக்க அஸ்வெசும கொடுப்பனவுகள் தொடர்ந்து வழங்கப்படுவதுடன், இதற்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

5. அரச ஊழியர்களின் ஊதியமும் படிகளும்

வாகனப் படி : அரச சேவையில் உள்ள நிறைவேற்று அதிகாரிகளின் போக்குவரத்துப் படி மாதமொன்றுக்கு ரூ. 100,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவோருக்கு மேலதிக சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

சுகாதாரத் துறை: வைத்தியர்களுக்கான DAT படி ரூ. 70,000 இலிருந்து ரூ. 95,000 ஆக உயர்த்தப்படுகிறது. தாதியர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களின் சிறப்புக் கடமைப் படிகளும் உயர்த்தப்பட்டுள்ளன.



கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கள அலுவலர்கள்: கிராம உத்தியோகத்தர்களின் பயணப் படி ரூ. 1,600 இலிருந்து ரூ. 4,000 ஆகவும், அலுவலக வாடகைப் படி ரூ. 3,000 இலிருந்து ரூ. 6,000.்.8,000 வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள்: ஓய்வூதிய முரண்பாடுகளைக் களைவதற்காகப் படிப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், இடைக்கால கொடுப்பனவாக ஜூலை 1, 2027 முதல் மாதாந்திர இடைக்காலப் படி ரூ. 2,500 வழங்கப்படவுள்ளது.

6. மின்சாரம் மற்றும் எரிசக்தி

சூரிய மின்சக்தி ஊக்கத்தொகை: வீடுகளில் கூரை மேல் சூரிய மின் தகடுகளைப் புதிதாகப் பொருத்து வோருக்கு, மின்கல சேமிப்பு அமைப்புகளுக்காக ஒரு கிலோவாட்டுக்கு ரூ. 25,000 வீதம் அதிகபட்சம் ரூ. 250,000 வரை மானியம் வழங்கப்படவுள்ளது.

ஸ்மார்ட் மீட்டர்கள்: ஏசியன் டெவலப்மெண்ட் வங்கி (யுனுடீ) நிதியுதவியுடன், 180 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் 300,000 நுகர்வோருக்கு ஸ்மார்ட் மீட்டர்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

7. விவசாயம் மற்றும் மீன்பிடித் துறை

உர மானியம்: நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்களுக்கு ஒரு ஹெக்டேயருக்கு ரூ. 30,000 உர மானியம் வழங்கப்படவுள்ளது.

மீனவர்களுக்கான காப்பீடு: மீன்பிடித் தொழிலில் ஈடுபடும்போது விபத்தினால் திடீர் மரணமடையும் மீனவர்களின் இழப்பீட்டுத் தொகை ரூ. 1 மில்லியனில் இருந்து ரூ. 2 மில்லியன் வரை அதிகரிக்கப் பட்டுள்ளது.

8. வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு

குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் "சுயமான வீடு - அழகான வாழ்க்கை" திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான புதிய வீடுகளின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும், நீண்ட காலமாக அரைகுறையாக நின்ற பாதியளவு கட்டப்பட்ட வீடுகளை முடிக்க நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

9. வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள்

மின்சாரம் மற்றும் வலுசக்தி:

கில்லினோச்சியிலிருந்து புதிய ஹபரணை வரையிலான 400 கிலோவோட் (kV) வடக்கின் பிரதான பரிமாற்ற வலையமைப்பின் முதற்கட்டப் பணிகளுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனை 2030க்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய ஹபரணை மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் தலா 77 MVA (மெகாவோட்-ஆம்பியர்) கொள்ளளவு கொண்ட இரண்டு ஒத்திசைவான மின்தேக்கிகள் நிறுவப்படவுள்ளன. இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்போது மின்கட்டமைப்பு நிலைத்தன்மையைப் பேண உதவும்.

கல்வி மற்றும் உயர் கல்வி:

யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் தூய குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளை வழங்குவதற்கும், மற்றும் பல மாணவர் நலன்புரிப் பணிகளுக்காகவும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

BEHIND ME MEDIA

யாழ் பல்கலைக்கழகத்தின் உடலியல் பீடத்துக்கான கட்டிடங்கள் மற்றும் கிளிநொச்சி வளாகத்துக்கான வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

வவுனியா பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வதிவிட வசதிகளுக்காக 2,050 மில்லியன் ரூபாய் செலவில் உத்தியோகபூர்வ குடியிருப்புத் திட்டம் 2027 இல் ஆரம்பிக்கப் படவுள்ளது.

கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி:

வட மாகாணத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், தேசிய உப்பு நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி இதுவரை நிறுத்தப் பட்டிருந்த குருஞ்சந்தி உப்பு பாத்திரத்தின் உற்பத்திப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

மீன்பிடித் துறை:

வட மாகாணத்தில் மீன்பிடித்துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், நங்கூரமிடும் தளங்கள் மற்றும் பெசாலை மீன் பிடித் துறை முக அபிவிருத்திக்காக 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம்:

புத்தூர், மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஆட்டுப் பண்ணைகளை உருவாக்குவதற்காக விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்க மேலதிகமாக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் விவசாய மற்றும் சமூக அபிவிருத்திக்காக கீழ மல்வத்து ஓயா திட்டத்தின் பணிகளை துரிதப்படுத்த 7,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள்

பாலங்கள் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பு:

2027 ஆம் ஆண்டில் கொக்கட்டிச்சோலை பாலம் கட்டுவதற்கு 600 மில்லியன் ரூபாய்வும், கிரான் பாலம் கட்டுவதற்கு 400 மில்லியன் ரூபாய்வும், பொண்டுஹல்சேனை பாலம் கட்டுவதற்கு 200 மில்லியன் ரூபாய்வும், புன்னைக்குடா பகுதியில் உருவாக்கும் புதிய பாலம் கட்டுவதற்கு 340 மில்லியன் ரூபாய்வும், மற்றும் வத்துவாக்கல் பாலம் கட்டுவதற்கு 500 மில்லியன் ரூபாய்வும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுரங்க மற்றும் கனிம வளங்கள்:

லங்கா மினரல் சண்ட்சு நிறுவனத்திற்குச் சொந்தமான கிழக்குக் கடற்கரை பெல்ட்டில் உள்ள கனிம மணல் அடங்கிய 50 கட்டங்களுக்கு (புசனைள) அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கனிம மணல் மதிப்பு கூட்டுத் தொழிலுக்காக முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க அமைச்சரவை நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை:

யாழ்ப்பாணம், மன்னார், கல்பிட்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க டச்சு கோட்டைகள் பொது-தனியார் பங்களிப்பு (PPP) ஊடாக சுற்றுலா அபிவிருத்தி மையங்களாக மேம்படுத்தப்படும்.

குடிநீர் விநியோகம்:

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, நாகதீப, வலச்சேனை மற்றும் கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய 13 புதிய திட்டங்களை ஆரம்பிக்க 5,190 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பெரு கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்க 1,800 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருங் காலி நகர நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்க 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீதித்துறை மற்றும் சிறைச்சாலைகள்:

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை உள்ளிட்ட நவளைவபை நீதிமன்றங்களின் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்து வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி - பக்கம் 13

12ம் பக்க தொடர்ச்சி

11.மலையகத் துறை சார்ந்த அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள்

பெருந்தோட்டத் துறை :

பெருந்தோட்டத் துறையால் தற்போது ஈட்டப்படும் 3 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை 2030 ஆம் ஆண்டளவில் 5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளது இதற்காக 2027 ஆம் ஆண்டில் பெருந்தோட்டத் துறையை மேம்படுத்த 13,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களின் நிலங்களில் தேயிலை மீள்நடுகை மற்றும் காலி இடங்களை நிரப்புவதற்காக சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு மானியங்களை வழங்குவதற்காக 2027 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 820 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேயிலை பயிரிடுதலில் உரத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு ஒரு பையை வாங்குவதற்கு 4,000 ரூபாய் வீதம் மானியம் வழங்குவதற்காக 5,000 மில்லியன் ரூபாய்வை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இரப்பர் பயிரிடுபவர்களை ஊக்குவிக்கவும், புதிய நடுகை மற்றும் மீள்நடுகைக்கான சலுகைகளை வழங்கவும், பாரம்பரியமற்ற பகுதிகளில் இரப்பர் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கவும் 650 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரப்பர் தோட்டங்களில் தொடர்ந்து உரம் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, ஒரு பைக்கு 4,000 ரூபாய் உர மானியத்தை வழங்குவதற்காக 1,000 மில்லியன் ரூபாய்வை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நாளொன்றுக்கான 200 ரூபாய் ஊக்கத்தொகை 2027 இலும் தொடர்ந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தெற்கு, சப்ரகமுவ, வடமேற்கு, மேற்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளடக்கிய 500 தேயிலை கிராமங்களை அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த 730 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட தேயிலை மற்றும் தென்னை தோட்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், கைவிடப்பட்ட முதிர்ந்த இரப்பர் தோட்டங்களை புனரமைப்பதற்கும் மற்றும் பனைத் தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் விசேட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் வர்க்கத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் களஞ்சியங்கள், மலசலகூட வசதிகள் மற்றும் பிரஜா சக்தி மையங்களின் புனரமைப்பு உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீடமைப்பு மற்றும் தோட்ட சமூக நலன்:

தோட்ட சமூகத்தின் வீடமைப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியாவின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட 10,000 வீடுகளைக் கட்டும் திட்டம் மேலும் துரிதப்படுத்தப்படும்.

தில்வா பேரழிவால் பாதிக்கப்பட்ட, உரிய தகுதிகள் இருந்தும் வீட்டைப் பெறத் தவறிய, வவுனியா, பொலன்னறுவை, முல்லைத்தீவு மற்றும் நுவரேலியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்காக வீடுகளை வழங்க 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

12. பொதுவான அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள்

வரி மற்றும் சலுகைகள் :

தனிநபர் வருமான வரி விலக்களிக்கப்பட்ட வரம்பு மாதாந்தம் 100,000 ரூபாய்விலிருந்து 150,000 ரூபாய்வாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதமொன்றுக்கு 162,500 ரூபாய் வரை சம்பளம் மற்றும் படிகளைப் பெறுபவர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை.

கல்விக்கான முக்கியத்துவத்தை உணர்ந்து, பாடப்புத்தகங்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், குழந்தைகளின் வரைபட மற்றும் வர்ணப் புத்தகங்கள் மற்றும் உடற்பயிற்சிப் புத்தகங்கள் போன்றவற்றுக்கு மதிப்பு கூட்டு வரியிலிருந்து (VAT) விலக்கு அளிக்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு, மாலத்தீவு மீன் மற்றும் மிளகாய் தூள் மீதான விசேட பண்ட வரியைக் (SCL) குறைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறை

தரம் 1 மற்றும் தரம் 2 க்கான புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதுடன், அடுத்த ஆண்டு தரம் 6 க்கும் விரிவுபடுத்தப்படும்.

ஆசிரியர் பயிற்சியில் உள்ள வசயநெநள-களின் மாதாந்தப் படி 10,500 ரூபாய்விலிருந்து 20,000 ரூபாய்வாக ஏப்ரல் 2027 முதல் அதிகரிக்கப் படவுள்ளது.

இலங்கையின் அனைத்து இரண்டாம் நிலைப் பள்ளிகளுக்கும் நம்பகமான இணைய இணைப்புகளை வழங்குவதுடன், தெரிவுசெய்யப்பட்ட 750,000 பள்ளி மாணவர்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவு வவுச்சர்கள் வழங்கப்படும்.

சுகாதாரத் துறை :

பழைய அவசர ஊர்திகளுக்கு (Ambulances) பதிலாக புதிய ஊர்திகளைச் சேர்க்கவும், சுவ சேரியா (1990) சேவையை விரிவுபடுத்தவும் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளின் உதவியுடன் புதிய ஊர்திகள் இணைக்கப்படும்.

மருத்துவ அதிகாரிகளின் DAT படி, தாதியர்களின் விசேட கடமைப் படி போன்ற பல்வேறு சுகாதாரத் துறைப் படிகளை அதிகரிக்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

பொது நிர்வாகம் மற்றும் பொதுச் சேவையாளர் ஊதியம் (Public Administration & Salaries):

பொதுச் சேவைக்குத் தேவையான மனித வளங்களைப் பேண அங்கீகரிக்கப்பட்ட 148,940 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

அரச துறை ஊழியர்களின் பல்வேறு படிகள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் மற்றும் இடைக்காலப் படிகள் (மாதாந்தம் ரூ. 2,500) என்பன 2027 முதல் அமுல்படுத்தப்படும்.

போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு :

நாட்டின் நெடுஞ்சாலைகள், எக்ஸ்பிரஸ்வேக்கள் மற்றும் இரயில்வே வலையமைப்புகளை மேம்படுத்து வதற்கும், மின்மயமாக்குவதற்கும் பெருமளவிலான முதலீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பொதுப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த இலகுரக மின்சாரப் பேருந்துகள் மற்றும் குளிரூட்டப்பட்ட பேருந்துகள் இறக்குமதி செய்யப் படவுள்ளன.

ஊடகத்துறை மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்கள்

டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் ஒளிபரப்பு வசதிகள்:

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் (Sri Lanka Rupavahini Corporation) டிஜிட்டல்மயமாக்கல் செயற்பாடுகள், ஒளிபரப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை வாங்குவதற்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பிற்கு டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் ஒளிபரப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 489 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மீள்செலவுகளுக்காக 384 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறை மற்றும் ஊடகவியலாளர்களின் திறன் மேம்பாடு:

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப, பத்திரிகைத் துறையில் (Journalism) ஈடுபடும் ஊடகவியலாளர்களின் திறன்களை வளர்ப்பதற்கும், அவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப அணுகலை வழங்குவதற்கும் உயர்கல்வி கல்விவழங்கல் புலமைப்பரிசில்களை (Scholarships) வழங்கு வதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA

மட்டக்களப்பு மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் விபரம் சேகரிப்பு!



மட்டக்களப்பு மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விபரங்களை ஆவணப்படுத்தி, விரிவான புத்தகமொன்றைத் தயாரிக்கும் நோக்கில் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில், வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் தங்களது முழுமையான தகவல்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தின் தலைவியிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இத்தகவலை தங்களுக்குத் தெரிந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுடனும் பகிர்ந்துகொண்டு, அவர்களும் இந்தத் தரவுச் சேகரிப்பு நடவடிக்கையில் இணைந்துகொள்ள உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சங்கத்தின் தலைவியிடம் தங்களது விபரங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் அவற்றை வழங்க வேண்டிய அவசியமில்லை. எழுத முடியாதவர்கள் தங்களது விபரங்களை வீடியோ வடிவில் பதிவு செய்து அனுப்ப முடியும்.

மேலும், பிரதேசத் தலைவியர்கள் தத்தமது பகுதிகளில் வசிக்கும் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் அனைவருக்கும் இத்தகவல் சென்றடைவதை உறுதிப்படுத்தி, தரவுகள் உரிய காலத்திற்குள் சேகரிக்கப் படுவதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

அதேவேளை, தத்தமது பகுதிகளில் உள்ள மக்களுக்கு இத்தகவல் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அந்தந்தப் பகுதி மற்றும் பிரதேசத் தலைவியர்களுக்கு உரியது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் இந்த முக்கியமான முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



தமிழ்த் தேசியத்தின் மூத்த அரசியல்வாதி சிவாஜிலிங்கத்தின் இறுதி யாத்திரை...













2027ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தமிழ் பிரதேச செயலகங்களின் பங்கு?



"2027ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கென 2,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் தொகையில் தமிழ் பிரதேச செயலகங்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்த வேண்டும்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்ற 2027ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கோடீஸ்வரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வரவு- செலவுத் திட்டத்தை அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமாகவே பார்க்கின்றோம். இந்த அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள மூன்றாவது வரவு செலவுத் திட்டமாக இது இருக்கின்றது. இதில் நல்ல விடயங்கள் பல உள்வாங்கப்பட்டுள்ளன. சில விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விடயத்திலும் நாங்கள் அரசாங்கத்தைப் பாராட்டுகின்றோம். சுகாதாரம்,போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பிலும் அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், விவசாயம், கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லையென்றே கூற வேண்டும்.

இந்த நாட்டில் மிக முக்கியமான துறையாக விவசாயம் உள்ளது அதன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கடமையுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 4 வீதமே இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் நிலையில், அவர்களின் வாழ்வைக் கேள்விக்குறியதாக்கக் கூடாது. எரிபொருள் விலை உள்ளிட்ட ஏனைய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், தமது உற்பத்திகளைச் சரியான முறையில் விற்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், விவசாயத்திற்கான ஒதுக்கீட்டை அதிகமாகச் செய்ய வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 458 பில்லியன் ரூபா அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற விடயங்களுக்கு அதிகளவில் நிதி ஒதுக்குவதைத் தவிர்த்து, நாட்டின் உற்பத்தியில் முக்கிய பங்களிக்கும் விவசாயத்திற்கு அதிகளவில் நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டித்வா புயல், ஏனைய அனர்த்தங்கள், வளைகுடாவில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை மற்றும் எல்-நினோ தாக்கம் போன்றன இருந்தும், நாட்டின் பொருளாதாரம் சாதகமான சூழ்நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது இதுபோன்ற நல்ல விடயங்கள் அரசாங்கத்தினால் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மிளகாய், கருவாடு, சீனி போன்ற பொருட்களுக்கான வரியைக் குறைத்துள்ளமை பாராட்டக்குரிய விடயமாகும்.

மேலும், கல்விக்காக இதில் அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது கல்வியில் மறுமலர்ச்சிகள் ஏற்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களிலிருந்து கிராமப்புறங்களை நோக்கி கல்வி வளர்ச்சி நகர்த்தப்படுகின்றது இது நல்ல விடயமே. அதேபோன்று, போக்குவரத்து, வீதி அபிவிருத்தி விடயத்திலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகள் குன்றும் குழியுமாக இருக்கின்றன. கடந்த காலங்களில் அங்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை அந்தப் பிரதேசங்கள் தொடர்பில் பாகுபாடுகள் காணப்பட்டன.

வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் பயணிக்க முடியாது என்று கூறுகின்றனர். இதனால், பாடசாலை மாணவர்களின் இடைவிலகல்களும் இடம்பெறுகின்றன. நீங்கள் பாதைகளைச் சரியாகத் திருத்தினால், அந்த மாணவர்களின் கல்வி நிலை உயர்த்தப்படும்.

இந்த வரி விடயத்தை மிக முக்கியமானதாகப் பார்க்க வேண்டியுள்ளது. 7 வீதத்திலிருந்து 15 வீதமாக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதகமான சூழ்நிலையாகவே பார்க்கின்றோம் வரி வருமானத்திற்காகவே இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்கள் மீது சுமத்தப்படும் வரியாகவே இது உள்ளது. நேர் வரியாகவும், மறைமுக வரியாகவும் அறவிடப்படுகின்றது. நாட்டில் 35 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். இந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வறுமையைக் குறைக்க என்ன திட்டத்தை வைத்துள்ளீர்கள் என்று கேட்கின்றோம்.

இதேவேளை, வேலைவாய்ப்பு விடயத்தில் இளைஞர்களுக்குத் தொழில்வாய்ப்புகளை வழங்குவதென்றால் முதலீடுகளைக் கொண்டுவர வேண்டும். ஆனால், முதலீடுகளைக் கொண்டுவருபவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படி நடந்தால், எவ்வாறு எமது இளைஞர், யுவதிகளுக்குத் தொழில்வாய்ப்புகளை வழங்குவது? இதனால், சரியாக முதலீட்டாளர்களை உள்வாங்கும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு 2,000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாகக் கூறுகின்றீர்கள். அந்த நிதியில் எங்களின் பிரதேச செயலகங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகின்றது என்பதனைக் கூற வேண்டும்" என்றார்.



BEHIND ME MEDIA

We're Hiring!

எங்கள் ஊடகத்தின் வலையமைப்பை விரிவுபடுத்துவதில் நாங்கள் மிகுந்த ஆர்வமாக இருக்கின்றோம்.

பின்வரும் பணிகளுக்குத் திறமை யான மற்றும் ஊக்கத்துடன் செயல்படக் கூடிய நபர்களைத் தேடுகிறோம்:

Tenders & Proposal Coordinator!

Accounting Coordinator!

நீங்கள் ஒரு புதிய வாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்தாலோ அல்லது இதற்குப் பொருத்தமான நபரை உங்களுக்குத் தெரிந்திருந்தாலோ எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்!

இன்றே விண்ணப்பியுங்கள் - இந்தப் பதிவை உங்கள் நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்!





சர்வதேச நிதி நிறுவனங்களுடனான அரசாங்கத்தின் உறவு குறித்து சஜித் பிரேமதாச கேள்வி!



சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தலைவரை முத்தமிடுவதை விட, உயிரிழந்த காவன்திஸ்ஸ என்ற தந்த யானையை முத்தமிட்டது மிகவும் பெறுமதியானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரேமதாச, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடனான அரசாங்கத்தின் உறவு குறித்துக் கேள்வி எழுப்பியதுடன், அரசாங்கம் முத்தமிடவும் கட்டித்தழுவவும் விரும்பும் நிறுவனங்களாக அவற்றை அடையாளப்படுத்தினார்.

2025ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் 61.1மூ ஆனோர் நாளொன்றுக்கு 8.30 அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்ததாக மதிப்பிட்டுள்ள 2025 உலக வங்கி அறிக்கையை மேற்கோள் காட்டி, நாட்டின் வறுமை மட்டம் குறித்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும்போதே அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

தனது உரையின் போது, அப்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் தலைவரைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய கட்டித்தழுவி வரவேற்கும் புகைப்படம் அடங்கிய ஆவணமொன்றையும் பிரேமதாச சபையில் காண்பித்தார்.

"பிரதமருக்கு எதிராக நான் இதனைக் காண்பிக்கக் கூடாது, ஆனால் நீங்கள் முத்தமிடும் புகைப்படம் இதோ இருக்கிறது. அது பரவாயில்லை அது ஒருவரை வரவேற்கும் சாதாரண முறைதான்" என அவர் கூறினார்.

காவன்திஸ்ஸ யானையைத் தாம் முத்தமிட்டது குறித்துப் பரவலாகப் பேசப்பட்ட விமர்சனத்திற்குப் பதிலளித்த பிரேமதாச, அந்தச் செயலின் முக்கியத்துவத்தை அரசாங்க உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவரை முத்தமிடுவதை விட, அந்தத் தந்த யானையை முத்தமிட்டதே மிகவும் பெறுமதியானது என அவர் வலியுறுத்தினார்.

கஸ்ஸப தேரர் உட்படஉட்பட ஏழு பேருக்கு இரண்டு வார விளக்கமறியல் : மனநலப் பரிசோதனைக்கு நீதிமன்றம் உத்தரவு

அநுராதபுரம் ருவன்வெலி மகா சாயாவிற்கு அருகில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு ஏற்பட்ட வன்முறை மோதலைத் தொடர்ந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பலாங்கொட கஸ்ஸபதேரர் உட்பட உட்பட ஏழு பேரையும் எதிர்வரும் நவம்பர் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.



குறித்த சந்தேகநபர்களை மனநலப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் அநுராதபுரம் நீதவான் விசேட உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் பலாங்கொட கஸ்ஸபவிற்கு மேலதிகமாக மேலும் மூன்று பௌத்த பிக்குகளும் உள்ளடங்குவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

ருவன்வெலி சாயா வளாகத்தில் இடம்பெற்ற தொடர்ச்சியான பதற்றமான மற்றும் அமைதியற்ற சம்பவங்களைத் தொடர்ந்தே இக்குழுவினர் கைது செய்யப்பட்டனர். பலாங்கொட கஸ்ஸபதேரர் உட்பட அவரது குழுவினரும் அவ்விடத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, ராஜாங்கனயவின் சத்தாரத்ன தேரர் தலைமையிலான குழுவொன்று அங்கு வருகை தந்ததையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த அமைதியின்மை தீவிரமடைந்த நிலையில், உண்ணாவிரதப் போராட்ட இடத்திலிருந்த கஸ்ஸப மற்றும் அவரது குழுவினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் ராஜாங்கனயவின் சத்தாரத்ன தேரர் தலையில் காயமடைந்து அதிக இரத்தப்போக்குக்கு உள்ளானார்.

அதனைத் தொடர்ந்து, புனித வளாகத்திற்குள் கலகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட கஸ்ஸப, தேரர் உட்பட ஏனைய நான்கு பிக்குகள் மற்றும் குழுவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்திற்கு முதல் நாள் சட்டத்தின் பார்வையில் பலாங்கொட கஸ்ஸபதேரர் உட்பட தேடப்படும் நபராக இருந்தார். திருகோணமலை கடற்கரையோரத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் சர்ச்சைக்குரிய புத்தர் சிலை விவகாரம் தொடர்பான வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர் நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்காமல் தலைமறைவாகியிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

அவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமையால், அன்றைய தினம் நீதவான் நீதிமன்றத்தினால் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில், நேற்று ருவன்வெலி சாயாவிற்கு அருகிலுள்ள உண்ணாவிரதப் போராட்ட இடத்தில் தங்கியிருந்தபோது, நீதித்துறையைக் கடுமையாக அவமதிக்கும் வகையில் அவர் பல கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின் போது, திருகோணமலை நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீனுக்கு சட்டம் தெரியாது என்பது தெளிவாகத் தெரிந்ததாக அவர் அங்கு பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். மேலும், தனது வழக்கை விசாரிப்பதற்கு குறித்த நீதவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் அதற்காக அரசியலமைப்பின் 105/4 சரத்தின் கீழ் தனியான நீதிமன்றமொன்று நிறுவப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இதற்கு மேலதிகமாக பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவிற்கு சட்டம் தெரியாது என்றும், தாமே அவருக்குச் சட்டம் கற்றுக்கொடுத்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்திய உளவுத்துறையின் உறுப்பினர் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிற்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலும் சவால் விடும் வகையிலும் இவர் தினமும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வந்தார். நாட்டின் முக்கிய பிரமுகர்களை இலக்கு வைத்து, பித்தலாட்டமான முறையில் பொருத்தமற்ற கருத்துக்களை இவர் பரப்பியதாலும்,

தேவையற்ற மத மற்றும் இனவாத அமைதியின்மையை உருவாக்கும் வகையில் எதிர்க்கட்சிக்கு விசுவாசமான சமூக ஊடகங்களும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளும் அவற்றை முன்னிலைப்படுத்திப் பயன்படுத்தியதாலும், இவர் கூறிய விடயங்கள் நாட்டில் எளிதில் முக்கிய தலைப்புச் செய்திகளாக மாறின.

குறிப்பாக, நீதிமன்ற உத்தரவுகளைப் புறக்கணித்து, தான் தேவநம்பியதிஸ்ஸ மன்னனின் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்படுவதாகக் கூறி அநுராதபுரம் வளாகத்தை விட்டு வெளியேறாமல் இருந்ததன் மூலம், சட்டத்தின் மீதான நம்பிக்கையைச் சீர்குலைக்கும் வகையிலும் மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் வகையிலும் இவர் செயற்பட்டார்.

நீதிமன்றத்தைத் தவிர்த்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலும், நீதிமன்றத்தை பகிரங்கமாக அவமதித்து, அதனைத் தொடர்ந்து புனிதத் தலத்திற்குள் வன்முறை மோதல்களில் ஈடுபட்டதன் மூலமும் சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ள இக்குழுவினர், எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் இருக்க வேண்டியதுடன், நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ள மனநல மற்றும் போதைப்பொருள் மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

BEHIND ME MEDIA

பூர்வீக நிலங்களை 36 ஆண்டுகாலமாக மீளப்பெறக் காத்திருக்கும் மயிலிட்டி மக்கள்!



மயிலிட்டி மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் இவ்வாரத்துடன் 30ஆவது வாரத்தை எட்டியுள்ளது.

சுமார் 36 ஆண்டுகளாகத் தமது சொந்த நிலங்களையும் வாழ்விடங்களையும் இழந்து வாழும் மக்கள், காணிகளை விடுவித்து மீள்குடியேற அனுமதிக்குமாறு வலியுறுத்தி மயிலிட்டி இராணுவ கொமாண்டோ பங்களாவுக்கு முன்பாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

தலைமுறைகளாக வாழ்ந்த பூர்வீக மண்ணில் தங்களால் விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுக்க முடியாத நிலை தொடர்வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் பூர்வீக உரிமையை உறுதிப்படுத்தி, காணிகளை விடுவித்து மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் துப்பரவாக்கல்



அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஆதரவாளர்கள் துப்பரவு செய்யும் பணியை வியாழக்கிழமை (12) கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துசாங்கள் உட்பட மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

எதிர்வரும் 27 ம் திகதி மாவீரர் நினைவேந்தல் இடம்பெற உள்ள நிலையில் மாவீர்களின் குடும்பத்தினர் துயிலும் இல்லங்களுக்கு சென்று நினைவேந்தலில் ஈடுபட்டுள்ள நிலையில் அந்த துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்து அலங்கரிக்கும் ஏற்பாடுகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய நவம்பர் மாதம் மாவீரர் மாதமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி அறிவித்து நவம்பர் முதலாம் திகதி மட்டக்களப்பு தரவை, மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் பணி ஆரம்பித்து மாவீரர் நினைவு தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செய்தி ஆரம்பித்து வைத்தனர்.

இதனை தொடர்ந்து மட்டக்களப்பிலுள்ள மாவடி முன்மாரி, வாகரை கண்டலடி, மாவீரர் துயிலும் இல்லங்களையும் துப்பரவு செய்யும் பணியை முன்னெடுத்து வருவதுடன் அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலும் இல்லத்தை துப்பரவு செய்யும் பணியை ஆரம்பித்து வைத்தனர்.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துஷாங்கன் தலைமையில் மாவீரர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து இந்து மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு பணியை முன்னெடுத்தனர்.

செட்டிகுளம் தனியார் காணிகள் மற்றும் குளங்களை விடுவிக்க விசேட பிரேரணை!



செட்டிகுளம் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் புதன்கிழமை (11.11.2026) பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாக வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்ற பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அவர்கள் விசேட பிரேரணை ஒன்றினை முன்வைத்தார். குறித்த பிரேரணை பிரதேச அபிவிருத்திக் குழுவினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல தனியார் காணிகள் 2021 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் ஊடாக வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டிய பாராளுமன்ற உறுப்பினர், இக்காணிகளை மீண்டும் விடுவிக்க வேண்டியதன் அவசியத்தையும் அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை களையும் தெளிவுபடுத்தினார்.

இவ்வாறு வனவளத் திணைக்களத்தின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள காணிகளில் பல, வருடாந்தக் குத்தகை அடிப்படையில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளாகும். இக்காணிகளை விடுவிப்பது தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் கலந்துரையாடியபோது, வருடாந்தக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளை உரிய காலத்தில் புதுப்பிக்காத காரணத்தினால் அவற்றை மீண்டும் உரிமையாளர் களுக்கு வழங்க முடியாது என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர், வருடாந்தக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளாக இருந்தாலும், காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2013/01 இலக்கச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவற்றை வனவளத் திணைக்களத்தினால் விடுவிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு விடுவிக்கப்படும் காணிகளைப் பிரதேச செயலாளரிடம் கையளிக்கும் பட்சத்தில், குறித்த காணிகளின் தற்போதைய நிலைமை மற்றும் காணி உரிமையாளர்களின் தகைமைகள் தொடர்பில் ஆராய்ந்து, உரியவர்களுக்கு மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலாளரினால் முன்னெடுக்க முடியும் என்றும் விளக்கமளித்தார்.

மேலும், இச்செயற்பாட்டின்போது ஏற்படக்கூடிய மேலதிக சிக்கல்களைத் தீர்ப்பதற்காக காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2014.'.02 இலக்கச் சுற்றுநிருபத்தையும் பயன்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

அதேபோன்று, குறித்த காலப்பகுதிகளில் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த பல குளங்களும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை யும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி 2013.'.01 இலக்க மற்றும் 2014.'.02 இலக்கச் சுற்றுநிருபங்களின் அடிப்படையில், இக்குளங்களையும் விடுவித்து அவற்றை மீண்டும் உரிய பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தனியார் காணிகள் மற்றும் குளங்களை விடுவிப்பது தொடர்பான இந்த இரண்டு விடயங்களையும் விசேட பிரேரணைகளாக முன்வைத்ததுடன், அவை பிரதேச அபிவிருத்திக் குழுவினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், 2025 ஆம் ஆண்டில் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார்.

குறித்த ஆணைக்குழுவானது காணிப் பிரச்சினைகள் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்ட தாகவும், பாரியளவிலான பிரச்சினைகள் இல்லை என்ற முடிவுக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த ஆணைக்குழு மேல்மட்ட அரச அதிகாரிகளுடன் மாத்திரம் தொடர்புகளை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொண்டமை யினாலேயே இவ்வாறான முடிவு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

BEHIND ME MEDIA

வருமான வரி விலக்கு எல்லை ரூ. 162,500 ஆக உயர்வு

2027 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக, மாதாந்த தனிநபர் வருமான வரி விலக்கு எல்லையை 150,000 ரூபாயிலிருந்து 162,500 ரூபாயாக உயர்த்த அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. இதன் மூலம், மாதாந்த சம்பளம் பெறுவோருக்கு மேலதிக வரி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வரவு – செலவுத் திட்ட உரையின் பிரகாரம், வருடாந்த தனிநபர் வருமான வரி விலக்குப் படியை 1.8 மில்லியன் ரூபாயிலிருந்து 1.95 மில்லியன் ரூபாயாக உயர்த்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்மொழிந்துள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களுக்கு அமைய, 162,500 ரூபாய் வரை மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் தமது சம்பளத்திற்கு வருமான வரி செலுத்த வேண்டியதில்லை.

மேலும், படிப்படியாக அதிகரிக்கும் தனிநபர் வருமான வரி கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கும் வரவு - செலவுத் திட்ட உரையில் முன்மொழியப் பட்டுள்ளது.

அதற்கமைய, வரி வரம்புகளை விரிவுபடுத்து வதுடன், ஆரம்ப 6% வரி வரம்பிற்குப் பின்னர் தற்போதுள்ள 18% வரி வீதத்திற்குப் பதிலாக 12% எனும் புதிய வரி வீதத்தை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதன்படி, முன்மொழியப்பட்டுள்ள புதிய வரி வீதங்கள் முறையே 6%, 12%, 18%, 24%, 30% மற்றும் 36% ஆக அமையும்.

இந்தத் திருத்தங்களின் ஊடாக, அதிஉயர் தனிநபர் வருமான வரி வீதம் அறவிடப்படும் மாதாந்த வருமான எல்லையும் 358,000 ரூபாயிலிருந்து 433,000 ரூபாயாக அதிகரிக்கப் படவுள்ளது.

வரவு - செலவுத் திட்ட உரைக்கு அமைய, முன்மொழியப்பட்டுள்ள இம்மாற்றங்கள் மூலம் தனிநபர் வரி செலுத்துவோருக்கு அவர்களின் வரிக்குட்பட்ட வருமானத்திற்கு ஏற்ப, மாதாந்தம் 750 ரூபாய் முதல் 15,750 ரூபாய் வரை மேலதிக வரி நிவாரணம் கிடைக்கப்பெறும்.

2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்களுடன் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது,

தனிநபர் வரி செலுத்துவோருக்கு வழங்கப்படும் மொத்த மாதாந்த வரி நிவாரணம் 4,250 ரூபாய் முதல் 36,250 ரூபாய் வரை இருக்கும் என அந்த ஆவணத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக வருமான வரி நிவாரணங்களை வழங்கும் நோக்கில்,

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள திருத்தங்களின் ஒரு பகுதியாகவே இந்த முன்மொழிவுகள் அமைந்துள்ளன.

உத்தியோகபூர்வ வரவு - செலவுத் திட்ட உரையில் உள்ளடக்கப்பட்டுள்ள இம்மாற்றங்கள், தற்போது முன்மொழிவுகளாக மட்டுமே காணப்படுவதுடன், அவை உரிய சட்டவாக்கச் செயன்முறைகளுக்கு உட்பட்டவையாகும்.

கலை – இலக்கியம்

BEHIND ME MEDIA



ஔவையார் என்னவோ கூழுக்குப் பாடினார் என்றெல்லாம் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது அந்தக் காலம். ஆனால் இந்தக் காலத்தில் ஒரு கவிஞன் மிளகாய்க்குப் பாடிய கதை உங்களுக்குத் தெரியுமா? அவன்வேறு யாருமன்று நான்தான்! எங்கள் ஊரில் நடந்த நிகழ்ச்சி. அதைக் கேட்டால் நீங்கள் "இப்படி நடந்ததா?" என்று ஆச்சரியப் படுவதை விட்டு "இப்படியும் நடந்ததா!" என்றுதான் வியப்பீர்கள்!

எனக்கு இரண்டு நண்பர்கள். ஒருவர் பெயர் பாலகிருஷ்ணன். இன்னொருவர் பெயர் இராஜகோபால். எங்கள் மூவர் பெயரிலும் 'பால்' கலந்திருப்பதால் மற்ற நண்பர்கள் எங்களைச் சந்தித்தால், "அதோ, அங்கே யார் வருகிறார்கள் என்று பாருங்கள்... நம் முப்பாலும் முக்கனியும்...," என்றுதான் கேலி செய்வார்கள்.

ஆகா! அப்படி அவன் என்னை ஒரு வெண்பா எழுதிப் புகழ்ந்துவிடுவான் என்றால், ஒரு மிளகாய் என்ன, இந்தக் கூடையையே கடித்துத் தீர்த்து விடுவேன்!" என்று சொல்லிக்கொண்டு இராஜகோபால் இரண்டு கைகளிலும் கூடையிலிருந்து மிளகாய்களை அள்ளிக்கொண்டார்!

ஒருநாள் நாங்கள் மூவரும் ஒரு பலசரக்குக் கடையில்—கடையின் சொந்தக்காரர் எங்கள் நண்பர்—அமர்ந்து ஜாலியாகப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போதுதான் விற்பனைக்காக பறித்துவரப்பட்ட அங்கேயிருந்த மிளகாய்க் கூடை எங்கள் கண்ணில் பட்டது. இராஜகோபால் கூடையிலிருந்து ஒரு மிளகாயை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, " இதை நான் தின்றால் எனக்கு நீங்கள் என்ன தருவீர்கள்?" என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். "ஏய் புலவா! அவனைப் புகழ்ந்து ஒரு பாட்டு எழுதிக் கொடுப்பதாகச் சொல்!" என்று பாலகிருஷ்ணன் என்னைத் தூண்டினார்.

அதைக் கேட்டதும், " ஆகா! அப்படி அவன் என்னை ஒரு வெண்பா எழுதிப் புகழ்ந்துவிடுவான் என்றால், ஒரு மிளகாய் என்ன, இந்தக் கூடையையே கடித்துத் தீர்த்து விடுவேன்!" என்று சொல்லிக்கொண்டு இராஜகோபால் இரண்டு கைகளிலும் கூடையிலிருந்து மிளகாய்களை அள்ளிக்கொண்டார்!

நாங்கள் அப்போதுதான் கல்லூரி தொடங்கியிருந்தோம். விடுதலை கிடைத்ததும் காந்தியின் கொள்கைகளின் அடிப்படையில் கிராம மக்களுக்குச் சேவை செய்யப் புதிதாக அமல்படுத்தப்பட்ட கல்வித் திட்டம். அது. உப ஜனாதிபதி இராதாகிருஷ்ணனால் தீபமேற்றித் திறத்து வைக்கப்பட்ட கல்லூரி. பேராசியர்களே என்ன சொல்லிக்கொடுப்பது என்று தடுமாறிக் கொண்டிருந்தனர். எனக்குப் புலவனென்று அடைமொழி கொடுத்த தமிழாசிரியர் (அவரும் ஒரு 'பால்' தான், இன்னொரு இராஜகோபால்) டாக்டர் மு. வ-வின் மாணவர். அவர் முதல் வேலை.

கல்லூரி முடிந்ததும் மாலையில் அரட்டை அடிக்க நாங்கள் மூவரும் கூடுவோம். இராஜகோபால் மூவரில் மிகவும் குள்ளமானவர். இப்படிச் சவால் விடுவதில் அதிக நாட்டமுள்ளவர். நான் மற்ற இருவருக்கும் புதிதாக அறிமுகமானவன்.

"சே, சே! அப்படி ஒன்றும் செய்துவிடாதே! அத்தனையும் நீயே தின்றுவிட்டால் வாடிக்கைக் காரர்களுக்கு கடைக்காரர் என்ன சொல்வார்? இதோ பார், நாங்கள் ஒரு காயைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்போம். நீ அதைத் தின்று காட்டினால் போதும். சரியா?" என்று கூறி, கூடையிலிருந்தவற்றில் மிகவும் காரமான காயை எடுத்துக் கொடுக்கக் கடைக்கார நண்பரை வேண்டிக்கொண்டோம்.

கடைக்காரர் காரசாரமான ஐந்து அங்குள நீளமுள்ள ஒன்றை எடுத்து இராஜகோபாலிடம் கொடுத்தார். "ஓ! இவ்வளவு தானா?" என்று எள்ளல் நகையோடு, அதிலிருந்த காம்பைக் கிள்ளியெறியப் போனார்.

அதைப் பார்த்த நான் உடனே, "அப்படியெல்லாம் நீ டபாய்த்து விடுவாய் என்று எங்களுக்குத் தெரியாதா? காயும் காம்பும் எல்லாம் சாப்பிட்டால்தான் உனக்கு ஒரு தனிச்சொல்லோடு நேரிசை வெண்பா பாடுவேன்!" என்றதும் அதற்கும் சம்மதித்துக் கொண்டார்.

கடைக்கார நண்பர், அவர் மிளகாயை வாய்க்குள் வைக்குமுன், "இதையும் கேள்! நான் தண்ணியோ சர்க்கரையோ ஒன்றுமே தரமாட்டேன்! ஆமாம். இப்போதே சொல்லிவிட்டேன்!" என்று அச்சுறுத்தினார். அதைக் கேட்ட சபால்கார நண்பர் ஒரு கணம் திகைத்து விட்டார். ஆனால் மறு வினாடி அவர் வாய்க்குள் மிளகாய்ச் 'சட்னி' உருவாகிக் கொண்டிருந்தது! அந்த அசாதரண மனிதரின் பற்கள் காயையும் காம்பையும் சதக் சதக் என்று அதம் செய்துகொண்டிருந்தன. அவர் கண்கள் மூடிக்கொண்டன.

எல்லாச் சட்னியையும் விழுங்கிவிட்டு, வாயைத் திறந்து எங்களுக்குக் காட்டும்போது, பழுத்த மிளகாயைப் போல் செக்கச் செவேலென்று சிவந்திருந்த நண்பரின் கண்களைக் கண்ட எங்கள் கண்களிலும் நீர்த்துளிகள் அரும்பிவிட்டன.

அப்புறம் என்ன? அப்படித்தான் நான் ஒரு பச்சை மிளகாய்க்கு வெண்பா யாத்த முதல் கவிஞனென்று இன்னொரு அடைமொழியை எனக்கு என் நண்பர்கள் சூட்டினார்கள்!

இதோ அந்த வெண்பா:

மன்னாதி மன்னனென்று மார்பு தட்டி
என்னார்ந்த நண்பன் இராஜகோபாலன் — இன்று
கண்முடித் தின்ற பச்சை மிளகாயாலென்
வெண்பா விற்குமோர் கோவன்

நன்றி: சு. இராமகோபால்

மழை நீக்குமா பற்று எனும் அழுக்கை?

இருட்டிலிருக்கும் சாலை
கண் புரியாமைக்கு நாம் வருந்தியதில்லை
சற்று பார்த்து வந்திருக்கலாமெனும்
சமாதானம் மட்டும் கொண்டோம்.

இருட்டில் பெய்யும் பெருமழை மீது
அன்பு கவனிப்பு நமக்கு ஏற்பட்டதில்லை
கண்ணற்ற மழை என்றே நினைக்கிறோம்

இருட்டிலிருக்கும் மனிதர் வாழ்வு
வெளிச்சம் காண
பற்றுக பற்றற்றான் பற்றினை எனும்
பாதைகள் உண்டென திருக்குறள் போதித்தும்
மீண்டும் மீண்டும் உணர மறுத்த
மனம் கொண்ட மனிதர்கள் நம் மேலே
பற்று எனும் அழுக்கு நீக்க
பெய்யுது மழை
நம் வெளி உடம்பின் மேலே மட்டும்
பலகாலமும் தோல்வியுற்றும் விடாமல்...



திருவள்ளுவர் சிலை தென் கொரியாவில் திறப்பு

கொரியத் தமிழ்ச் சங்கம், கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் தமிழ் ஆய்வு மையம் மற்றும் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய "முதலாம் பன்னாட்டு இந்திய - தமிழ் - கொரிய ஆய்வு மாநாடு 2026", கொரியத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்கும் விழா மற்றும் வி.ஜி.பி.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் 205-ஆவது திருவள்ளுவர் சிலை திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழாக்கள், தென் கொரியாவின் டேஜான் (Daejeon) நகருக்கு அருகிலுள்ள ஓசோங் (Osong) அரங்கில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றன.

இதுவரை உலகெங்கும் உள்ள பல்வேறு நாடுகளில் 204 திருவள்ளுவர் சிலைகளை நிறுவியுள்ள வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செவாலியர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் அவர்கள், 205-ஆவது திருவள்ளுவர் சிலையினைத் தென் கொரிய மண்ணில் திறந்து வைத்தார்.

இவ்விழாவில், தென் கொரியாவிற்கான இந்தியத் தூதரக அதிகாரி சுரேஷ் குமார், சுங்சொங்புக்தோ பயோ சி.எஸ். மையத்தின் தலைவர் புரவலர் லியூ ஜெ யொங், சுங்ஜு மாகாணக் கல்வியாளர் கிம் தோக்யோ, மேனாள் இலண்டன் மேயர் அப்பு தாமோதரன், சென்னையின் புகழ்பெற்ற மருத்துவர் சொக்கலிங்கம், பேராசிரியர் உலகநாயகி பழனி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

மேலும், கொரியத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் அரவிந்த ராஜா, நிறுவனத் தலைவர் முனைவர் இராமசுந்தரம், முனைவர் மோ. பாட்டழகன், துணைத் தலைவர் தெ. விஜயலட்சுமி, பொருளாளர் பீ. ஜெரோம், செயலாளர் முனைவர் செலஸ்டின் ராஜா, இந்தியத் தொடர்பாளர் முனைவர் பிரபாகரன் ஆகியோருடன் பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக ஆய்வரங்கம், கலையரங்கம் மற்றும் மரபு நடைப்பயணம் ஆகியவையும் இடம்பெற்றன.

விழாவில் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் உரையாற்றுகையில்,



"'தொழில் செய்து தொண்டு செய்வோம்' என்ற நோக்கில் உலகெங்கும் திருவள்ளுவர் சிலைகளை நிறுவி, தமிழ் மொழியினை வளர்த்து வருகின்றோம்.

இன்று 205-ஆவது சிலையினைத் தென் கொரிய மண்ணில் நிறுவுவதையெண்ணிப் பெருமை கொள்கிறேன். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலைக் கொடுத்த வள்ளுவரது நெறிகளைக் கைக்கொண்டு, மதத்திற்கு அப்பாற்பட்ட பொதுமறையாகத் திருக்குறளைப் போற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் சங்க நிர்வாகிகளும், பன்னாட்டுத் தொடர்பாளர் தாமோதரனும் இணைந்து சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

மது போதையில் வாகனம் செலுத்துவதைக் கண்டறியும் புதிய கருவி தமிழ் மாணவனால் கண்டுபிடிப்பு!

தொடர்ச்சி

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

2026 ஆம் ஆண்டுக்கான வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டியில் பங்கேற்ற தரம் 13 வர்த்தகப் பிரிவு மாணவன் எஸ். திலீப்ஷான் வீதி விபத்துகளைக் குறைக்கும் வகையில் சாரதிகளின் சுவாசத்திலுள்ள மதுசார அளவைக் கண்டறிந்து உடனடியாக செயலி மூலம் எச்சரிக்கை விடுக்கக்கூடிய "நெக்ஸா" எனும் நவீன கட்டமைப்பை அவர் வடிவமைத்துள்ளதுடன் இக்கருவி இணைய இணைப்பு அல்லது சிம் அட்டை இன்றியே றுஜகுஜ தொழில்நுட்பத்தில் இயங்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

இந்தக் கருவியை குறுஞ்செய்தி ஊடாகவும் எச்சரிக்கை விடுக்கக்கூடிய வகையில் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்குரிய வழிகாட்டல் ஆலோசனகளை அம் மாணவனுக்கு வழங்கவும் நாம் ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமர சூரிய விருது பெற்றுபாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ள மாணவன் எஸ். திலீப்ஷானுக்கும் வழிகாட்டிய ஆசிரியை திருமதி எஸ். அபிராமிக்கும் பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதாக மேலும் குறிப்பிட்டார்.

அந்தரங்கப் படங்கள் தவறான பாவனை: Ontario முதல்வர் Doug Ford அரசினால் புதிய சட்டம் அறிமுகம்

தொடர்ச்சி

மாகாண முதல்வர் Doug Ford தலைமையிலான அரசாங்கத்தினால் திங்கட்கிழமை (நவம்பர் 16) சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

பாதிக்கப்பட்டவர்கள் சிவில் நீதிமன்றங்கள் ஊடாகத் தமது அந்தரங்கப் படங்களை அழிப்பதற்கும், இணையத் தளங்களில் இருந்து அகற்றுவதற்கும் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற முடியும். அத்துடன் தமக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு கோரவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இணையத்தளங்களில் பகிரப்பட்ட படங்களை உடனடியாக நீக்குவதற்குப் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் விண்ணப்பங்களை விரைவாக விசாரித்துத் தீர்ப்பளிக்கும் விசேட நடைமுறையும் உருவாக்கப்படவுள்ளது. செயற்கை நுண்ணறிவு படங்களுக்கும் பொருந்தும்

இந்தப் புதிய சட்ட நடவடிக்கைகள் பல்வேறு துறைசார் மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான சட்டமூலத்தின்ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் நீண்டகாலப் பராமரிப்புத் தரவுகள், இலத்திரனியல் மருத்துவப் பதிவுகள், தனியார் கல்லூரி மாணவர்களுக்கான நிதியுதவி மற்றும் சிறுவர் நலன்புரி அமைப்புகளுக்கான புதிய விதிமுறைகளும் அடங்குகின்றன.

தமிழ்த் தேசியத்தின் மூத்த அரசியல்வாதி சிவாஜிலிங்கத்திற்கு சபையில் அஞ்சலி

தொடர்ச்சி

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்ற 2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கோடீஸ்வரன் எம்.பி. இவ்வாறு அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிக்கையில், "வடக்கு, கிழக்கில் இருக்கின்ற எமது தமிழ் மக்களுக்காகவும், அவர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் இழப்பு, தமிழ் மக்களால் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தாம் இறக்கும் வரையில் தமது கொள்கையிலும், தேசியத்திலும் பற்றுறுதியுடன் தமிழருக்காகக் குரல் கொடுத்த மாமனிதராகவே அவரை நாங்கள் பார்க்கின்றோம். அவருக்கு இந்த இடத்தில் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்" என்றார்.

கனடா சீன வாகன உற்பத்தியாளர்களை நாடப்போகிறதா?

தொடர்ச்சி

இந்த வாரம் சீனாவின் ஷென்சென் நகரில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் நடைபெறவுள்ள திட்டமிடப்பட்ட சந்திப்புக்கு முன்னதாக, திங்கட் கிழமை கம்போடியாவில் Carney இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். இந்தச் சந்திப்பில் சீன வாகன உற்பத்தி குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைக்கப்பட்ட தீர்வைகளில் பல்லாயிரக்கணக்கான சீன மின்சார வாகனங்களை கனடாவிற்குள் அனுமதிக்கும் ஒப்பந்தத்தை இரு தலைவர்களும் கடந்த ஜனவரி மாதம் எட்டியிருந்தனர்.

"உலகின் மிகச்சிறந்த வாகனத் தொழிலாளர்கள் எங்களிடம் உள்ளனர் ஒருங்கிணைந்த வட அமெரிக்க சந்தையில் அவர்கள் முழுமையாகப் பணியமர்த்தப்படவும், முழு வாய்ப்புகளைப் பெறவும் நாங்கள் விரும்புகிறோம்," என்று கம்போடியாவில் செய்தியாளர்களிடம் Carney கூறினார்.

அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளில் சீனாவின் சாத்தியமான முதலீடு ஒரு பேரம் பேசும் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று கேட்டதற்கு, "அது பேரம் பேசும் கருவி அல்ல. ஆனால் செயல், எதிர்வினை" என்று Carney பதிலளித்தார்.

கனடாவின் வாகனத் தொழிலாளர்கள் மற்றும் உற்பத்திச் சொத்துக்கள் குறித்துப் பேசிய கார்னி, "வட அமெரிக்கச் சூழலில் அவை முழுமையாகப் பயன்படுத்தப்படாவிட்டால், அது மற்ற வாய்ப்புகளை உருவாக்கும். கனடா எந்த வழியிலும் முன்னேறிச் செல்லும்" என்றார்.

London Wembley யில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



தொடர்ச்சி

பாதுகாப்பு அனுமதிகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான அணுகலைப் புதிய சட்டங்கள் கடுமையாக்கும் என அவர் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 16 Pearson விமான நிலையப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் தொடர்பாகவும், குறைந்தது ஐவர் பொதி அடையாள அட்டை மாற்றும் சதித்திட்டங்கள் தொடர்பாகவும் கைது செய்யப்பட்டுள்ளதாக ரோயல் கனேடிய மவுண்ட் பொலிஸ் (RCMP) W5 இற்கு அனுப்பிய மின்னஞ்சலில் தெரிவித்துள்ளது என அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

BEHIND ME MEDIA

கனடா விமான நிலையப்பாதுகாப்பு மாற்றியமைக்கப்படுகின்றது?

தொடர்ச்சி

ஊழல் மிக்க விமான நிலையப் பணியாளர்கள் அப்பாவிப் பயணிகளின் பொதி அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி எவ்வாறு போதைப்பொருள் கடத்துகிறார்கள் என்பதை W5 புலனாய்வு வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, பிரதமர் ஆயசம ஊயசநெல அரசாங்கம் பாரிய மாற்றங்களை முன்னெடுத்து வருகின்றது.

பாதுகாப்பு அனுமதிகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான அணுகலைப் புதிய சட்டங்கள் கடுமையாக்கும் என அவர் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 16 Pearson விமான நிலையப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் தொடர்பாகவும், குறைந்தது ஐவர் பொதி அடையாள அட்டை மாற்றும் சதித்திட்டங்கள் தொடர்பாகவும் கைது செய்யப்பட்டுள்ளதாக ரோயல் கனேடிய மவுண்ட் பொலிஸ் (RCMP) W5 இற்கு அனுப்பிய மின்னஞ்சலில் தெரிவித்துள்ளது என அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனநாயக பதக்கத்தைப் பெற்றார் பிரதமர் Carney!



தொடர்ச்சி

இந்த அங்கீகாரம், நெல்சன் மண்டேலா, விளாடிமிர் ஜெலென்ஸ்கி, அலெக்ஸி நவல்னி மற்றும் லெக் வலேசா உள்ளிட்ட, கடந்த கால விருது பெற்றவர்களின் ஒரு அசாதாரணமான குழுவில் அவரைச் சேர்க்கிறது.

ஜனநாயக நிறுவனங்களும் சர்வதேச ஒத்துழைப்பும் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் ஒரு காலகட்டத்தில் கனடா போன்ற நடுத்தர சக்திகள் சக்திவாய்ந்த நாடுகளின் முடிவுகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்ற அவரது தெளிவான செய்திக்காக Carney அங்கீகரிக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Davos இல் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் Carney ஆற்றிய உரை கனடாவையும் தாண்டி வெகுதூரம் எதிரொலித்தது: சிறிய மற்றும் நடுத்தர நாடுகள் ஒன்றிணைந்து நிற்கும்போது, அவற்றால் ஒரு சக்திவாய்ந்த குரலைக் கொண்டிருக்க முடியும்.

பிரதமர் Carney ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுத்ததற்காக கனடா அங்கீகரிக்கப்படத் தகுதியானது என்பதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மாத்தளை மனிதப் புதைகுழி வழக்கு மீண்டும் விசாரணைக்கு...

தொடர்ச்சி

கடந்த பதினொரு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு காணாமற்போனோரின் உறவினர்கள் குழுவொன்று விடுத்த கோரிக்கையைப் பரிசீலிக்க மாத்தளை மேல் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளையும் வழக்கு தொடர்பான நடவடிக்கைகளையும் மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி, நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னர், காணாமற் போனோரின் குடும்பங்களின் ஒன்றியத் தலைவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ப்ரிட்டோ பெர்னாண்டோ தலைமையில், நவம்பர் 11ஆம் திகதி காலை மாத்தளை நகரில் அமைதியான போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Torontoவின் மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங்கள் அருகி வருகின்றன...





நம்பகமான, சக்கர நாற்காலிப் பயன்பாட்டிற்கு ஏற்ற போக்குவரத்து வசதிகளைப் பெறுவதில் தாம் வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்வதாக வுழசழவெழவில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் சிலர் தெரிவித்துள்ளனர். இது தங்களது வேலைக்குச் செல்வது, மருத்துவ மற்றும் முக்கிய சந்திப்புகளில் கலந்துகொள்வது மற்றும் அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவது குறித்த கவலைகளை எழுப்பி யுள்ளது.

நகரின் மிகப்பெரிய Taxi நிறுவனங்களில் ஒன்று, 2015-2016 ஆம் ஆண்டில் சுமார் 200 ஆக இருந்த தமது மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங்களின் எண்ணிக்கை, 2027 மார்ச் மாதத்திற்குள் வெறும் ஐந்தாகக் குறையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக எச்சரித்துள்ள நிலையில் இவர்களின் இந்தக் கவலைகள் வெளியாகியுள்ளன.

Toronto Distillery மாவட்டத்தில் வசிக்கும் ஜெனிபர் கொன்ரோய்க்கு, மாற்றுத்திறனாளிகளுக்கான டாக்சி வசதி கிடைப்பது என்பது அவர் வேலைக்குச் செல்வதற்கும், வீட்டிலேயே முடங்குவதற்கும் இடையிலான வித்தியாசமாக அமைந்துள்ளது.

“அவை மிகவும் இன்றியமையாதவை... மாற்றுத் திறனாளிகளுக்கான டாக்சி வசதி இருப்பது மிக முக்கியம், ஏனெனில் அவை இல்லையென்றால் என்னால் வேலைக்குச் செல்ல முடியாது,” என்று கொன்ரோய் சி.டி.வி நியூஸ் வுழசழவெழவிடம் தெரிவித்தார்.

சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் கொன்ரோய், மாற்றுத்திறனாளிகளுக்கான டாக்சிகளைப் பெரும் பாலும் ஒரு மணி நேரத்திற்கு முன்பே முன்பதிவு செய்ய வேண்டியுள்ளதாகவும், சில சமயங்களில் பயணிகள் வாகனத்திற்காக அதைவிட நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் கூறுகிறார்.

2020 ஆம் ஆண்டில் இத்துறைக்கான நிதியைச் சேகரித்து வழிநடத்தும் பொறுப்பை நகரசபை ஏற்றுக்கொண்ட போதிலும், பழைய வாகனங்களை மாற்றுவதற்கு உதவ நகரசபை போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை.

சி.டி.வி நியூஸ் வுழசழவெழவிற்கு அனுப்பிய அறிக்கையில், 2020 முதல் தனது அணுகல்தன்மை நிதித் திட்டத்தின் மூலம் Taxi உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு 7.6 மில்லியன் டொலர் களுக்கும் அதிகமான நேரடி நிதியை வழங்கியுள்ள தாக நகரசபை தெரிவித்துள்ளது.

“தற்போதைய மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங்களின் விநியோகம் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை இத்துறை சார்ந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமை ஆர்வலர் களிடமிருந்து நாங்கள் அறிந்துள்ளோம்,” என்று செய்தித் தொடர்பாளர் ஒருவர் எழுதியுள்ளார்.

“இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும் வகையில், அணுகல்தன்மை நிதித் திட்டத்தின் ஒரு பகுதியாக, புதிதாக மாற்றியமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான டாக்சி வாகனங்களுக் கான ஒருமுறை மானியத்தை நகரசபை 2026 ஜூலையில் 25,000 டொலரிலிருந்து 55,000 டொலராக உயர்த்தியதுடன், 5,000 டொலர் வரையிலான வருடாந்திர மானியம் மற்றும் ஊக்கத்தொகையையும் வழங்கியுள்ளது.”

தங்களது திட்டம் 100 வாகனங்களை மாற்றியமைக்க ஆதரவளிக்க முடியும் என்றும், ஒருமுறை மானியத்திற்காக 36 விண்ணப்பங்களைப் பெற்று ஏழு மானியங்களை வழங்கியுள்ளதாகவும், மீதமுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் நகரசபை தெரிவித்துள்ளது.

“தேவைக்கேற்ப சக்கர நாற்காலிப் பயன்பாட்டிற்கு ஏற்ற சேவையை அதிகரிப்பதற்கான கூடுதல் நடவடிக்கைகளை நகரசபை ஊழியர்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்து வருகின்றனர், மேலும் இந்தப் பணிகள் முன்னேறும்போது இத்துறை சார்ந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சமூகத்துடன் தொடர்ந்து இணைந்திருப்பார்கள்,” என்று செய்தித் தொடர்பாளர் மேலும் கூறினார்.

Waymo உள்ளிட்ட வளர்ந்து வரும் சாரதியற்ற வாகனங்கள் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் பயணிகளுக்குப் போதுமான வசதிகளை வழங்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார். “ஒரு Waymo வாகனத்தால் ஒருவரின் சக்கர நாற்காலியை மடித்துப் பின்புறப் பெட்டியில் வைக்க முடியுமா? ஒரு வேமோ வாகனத்தால் வாகனத்திற்குள் சக்கர நாற்காலியைப் பாதுகாப்பாகக் கட்ட முடியுமா?” என்று அவர் கேட்டார்.

Keelesdale பகுதியில் வசிக்கும் Doran Berryக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்து வசதி இருப்பது அவர் வெளியில் சென்று வருவதில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. தனது ஊன்றுகோலுடன் பயணம் செய்யும் போது மாற்றுத்திறனாளிகளுக்கான டாக்சிகளில் தனக்குப் பொதுவாக நேர்மறையான அனுபவங்களே கிடைத்துள்ளதாகக் கூறும் Berry ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவையை “அடிப்படையில் அற்புதமானது” என்று விவரிக்கிறார்.

ஆனால், தனது அன்றாடப் பயணத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பெரிய mobility scooter பயன்படுத்தும் போது அவரது போக்குவரத்து வாய்ப்புகள் கணிசமாகக் குறைகின்றன. பெரும்பாலான சவாரிப் பகிர்வு வாகனங்களுக்கு இந்த ஸ்கூட்டர் மிகப் பெரியதாக இருப்பதாகவும், ‘வீல்-டிரான்ஸ்’ வாகனங்களில் கூட இது மிகக் கஷ்டப்பட்டே பொருந்துவதாகவும் கூறும் அவர், இதனால் பொதுவாக நகரின் சிறப்புப் போக்குவரத்துச் சேவையையே நம்பியிருக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

தனது முதுகில் உள்ள “ஏழு சிதைந்த முதுகெலும்பு வட்டுகள்” காரணமாகத் தன்னால் சாதாரண கார்களைப் பயன்படுத்த முடியாது என்றும், தனது நடமாட்டத் தேவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வகை வாகனம் தேவை என்றும் Berry கூறுகிறார். ‘Peg Taxi’யின் மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங் களின் எண்ணிக்கை தற்போது வெறும் ஐந்தாக மட்டுமே உள்ளது என்பதைக் கேட்டது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

“அது மிகுந்த கவலையளிக்கிறது, ஏனெனில் நான் இதை இப்போதுதான் முதன்முறையாகக் கேள்விப்படுகிறேன்,” என்று அவர் கூறினார். “மாற்றுத்திறனாளிகளுக்கான Taxiகளில் பயணிப்பது உண்மையில் மிகவும் சிறப்பாக இருப்பதை நான் உணர்ந்துள்ளேன்.” சாரதியற்ற கார்களின் ஆரம்பகட்ட சோதனை களைப் பொறுத்தவரை, வாடகை வாகனங்களுக் கான துணை விதி தானியங்கி வாகனங்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும், தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் போது என்ன மாற்றங்கள் தேவைப்படலாம் என்பதையும் நகரசபை மதிப்பாய்வு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

முன்னுரிமைகள் மிகத் தெளிவானவை: மலிவான கட்டணத்தில் சவாரிகள் மற்றும் அதிக எண்ணிக்கையிலான மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங்கள். முதலாவதாகவும் முக்கியமாகவும் மலிவான கட்டணம், மற்றும் அதிக மாற்றுத்திறனாளிகளுக்கான டாக்சிகள் தேவை அவர்கள் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும்,” என்று அவர் கூறினார்.

BEHIND ME MEDIA



யாழ். அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



கல்வி மற்றும் ஆராய்ச்சித் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் அமெரிக்காவில் உள்ள தெற்கு இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தின் (Southern Illinois University) அறங்காவலர் குழுவிற்கும் இடையே ஐந்தாண்டு காலப் புரிந் துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத் திடுவதற்கான அவசியமான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே கூட்டுக்கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மூலம் கல்விசார் சிறந்து விளங்குதல், அறிவுப் பகிர்வு மற்றும் நட்புறவை மேம்படுத்துவதே இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இரு பல்கலைக் கழகங்களும் கூட்டு ஆராய்ச்சி, கல்விசார் நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், விவாதங்கள் மற்றும் பீடப் பரிமாற்றங்களுக்கான வாய்ப்புகளை ஆராயவுள்ளன.

அத்துடன், கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான (Internships) வாய்ப்புகள் உள்ளிட்ட இளங்கலை மற்றும் முதகலை மாணவர்களின் பரிமாற்றங்களையும் இது ஊக்குவிக்கின்றது.

மேலும், கூட்டு மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பிற கல்விசார் நிகழ்வுகளையும், தகவல் மற்றும் கல்விசார் வளங்களின் பரிமாற்றங்களையும் இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உறுதி செய்கிறது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது, கையெழுத்திடப்படும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குச் செயற்பாட்டில் இருக்கும்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரின் தகுதி அடிப்படையில் கௌரவ பிரதமர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கான முன்மொழிவிற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



BEHIND ME MEDIA

Meta வின் புதிய தொழில்நுட்பம் : இனி வயதை மறைத்து சிறுவர்கள் சமூகவலைத்தளங்களுக்குள் புக முடியாது!



சிறுவர்கள் வயதை மறைத்து சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதை தடுக்கும் புதிய இன்ஸ்டாகிராம் ஏஐ தொழில்நுட்பத்தின் முழுமையான விவரங்களை இங்கே படியுங்கள்.

இன்றைய அதிநவீன டிஜிட்டல் காலகட்டத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே சமூக வலைத்தளங்களில் தங்களின் அதிகப்படியான நேரத்தை தொடர்ந்து செலவிட்டு வருகிறார்கள். குறிப்பாக 10 முதல் 12 வயதுடைய சிறுவர்கள் தங்களின் உண்மையான பிறந்த தேதியை மறைத்துவிட்டு பெரியவர்களைப் போலப் புதிய கணக்குகளைத் தொடங்கி விடுகிறார்கள்.

இதனால் அவர்களின் வயதிற்குச் சற்றும் பொருந்தாத தேவையில்லாத, தவறான பதிவுகள் மிகச் சுலபமாக அவர்களைச் சென்றடைகின்றன. இந்தப் பெரும் சிக்கலைத் தீர்க்க Meta நிறுவனம் ஒரு அதிரடியான புதிய தொழில்நுட்பத்தை தற்போது அதிரடியாகக் களமிறக்கி உள்ளது.

சிறுவர்கள் தங்களின் கணக்குகளில் தவறான பிறந்த தேதியை உள்ளீடு செய்தாலும் அவர்களைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க யுஐ Age-Estimation என்ற புதிய வசதி தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அதிநவீன ஏஐ அமைப்பு பயனர்களின் புரொபைல் விவரங்கள் பதிவுகள், அவர்கள் செய்யும் கமெண்ட்களைத் தானாகவே அலசி ஆராயும் திறனைக் கொண்டுள்ளது.

மேலும் அவர்கள் பதிவேற்றும் புகைப்படங்களில் உள்ள சில குறிப்பிட்ட அடையாளங்களை மிக நுட்பமாக ஆராய்ந்து அவர்களின் உண்மையான வயதை மிகச் சரியாகக் கணித்துவிடும்.

இந்தத் தொழில்நுட்பமானது பலரும் நினைப்பது போல முக அடையாளத்தை வைத்துச் செயல்படும் Facial Recognition முறை கிடையாது. இதனால் பயனர்களின் தனிப்பட்ட தகவல்களுக்கும் அவர்களின் தனியுரிமைக்கும் எந்தவொரு பாதிப்பும் ஒருபோதும் வராது என்று நிறுவனம் மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளது.

Facebook, Threads போன்ற பிற முன்னணி செயலிகளிலும் இது மிக விரைவில் வரவுள்ளது. இந்த முறையின் மூலம் குழந்தைகள் இணையத்தில் எந்தவிதமான அச்சுறுத்தலும் இன்றி மிகவும் பாதுகாப்பாக வலம் வர முடியும் என்பதை நிறுவனம் முழுமையாக உறுதி செய்துள்ளது.

சமூக வலைத்தளக் கணக்கைப் பயன்படுத்தும் நபருக்கு 13 வயதிற்கும் குறைவு என இந்தத் தொழில்நுட்பம் கண்டுபிடித்தால் உடனடியாக அந்தக் குறிப்பிட்ட கணக்கு முற்றிலுமாக முடக்கப்படும். அந்த கணக்கை மீண்டும் பெறுவதற்குக் Government ID வழங்கி உண்மையான வயதை நிரூபிக்க வேண்டியது கட்டாயமாகும்.

மேலும் 13 முதல் 15 வயதுடைய சிறுவர்கள் தங்கள் கணக்கில் ஏதேனும் செட்டிங்ஸ் மாற்றங்களைச் செய்ய பெற்றோரின் அனுமதி கண்டிப்பாகத் தேவைப்படும். 16 மற்றும் 17 வயதுடைய இளைஞர்களுக்கு மட்டும் சமூக வலைத்தளப் பயன்பாட்டில் சற்று தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, அஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளில் இந்தச் செயல்முறை தற்போது மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆஸ்திரேலிய நாட்டில் பயனர்களின் வயதை உறுதி செய்ய ஆப்பிள் நிறுவனத்தின் பிரத்தியேக தொழில்நுட்பமும் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவிலும் சிறுவர்களுக்கான இணையப் பாதுகாப்புச் சட்டங்கள் கடுமையாக்கப்படும் பட்சத்தில் இந்தத் தொழில்நுட்பம் இங்கும் மிக விரைவில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தொழில்நுட்பமானது பலரும் நினைப்பது போல முக அடையாளத்தை வைத்துச் செயல்படும் Facial Recognition முறை கிடையாது. இதனால் பயனர்களின் தனிப்பட்ட தகவல்களுக்கும் அவர்களின் தனியுரிமைக்கும் எந்தவொரு பாதிப்பும் ஒருபோதும் வராது என்று நிறுவனம் மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளது.

Facebook, Threads போன்ற பிற முன்னணி செயலிகளிலும் இது மிக விரைவில் வரவுள்ளது. இந்த முறையின் மூலம் குழந்தைகள் இணையத்தில் எந்தவிதமான அச்சுறுத்தலும் இன்றி மிகவும் பாதுகாப்பாக வலம் வர முடியும் என்பதை நிறுவனம் முழுமையாக உறுதி செய்துள்ளது.

சமூக வலைத்தளக் கணக்கைப் பயன்படுத்தும் நபருக்கு 13 வயதிற்கும் குறைவு என இந்தத் தொழில்நுட்பம் கண்டுபிடித்தால் உடனடியாக அந்தக் குறிப்பிட்ட கணக்கு முற்றிலுமாக முடக்கப்படும். அந்த கணக்கை மீண்டும் பெறுவதற்குக் Government ID வழங்கி உண்மையான வயதை நிரூபிக்க வேண்டியது கட்டாயமாகும்.

மேலும் 13 முதல் 15 வயதுடைய சிறுவர்கள் தங்கள் கணக்கில் ஏதேனும் செட்டிங்ஸ் மாற்றங்களைச் செய்ய பெற்றோரின் அனுமதி கண்டிப்பாகத் தேவைப்படும். 16 மற்றும் 17 வயதுடைய இளைஞர்களுக்கு மட்டும் சமூக வலைத்தளப் பயன்பாட்டில் சற்று தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, அஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளில் இந்தச் செயல்முறை தற்போது மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆஸ்திரேலிய நாட்டில் பயனர்களின் வயதை உறுதி செய்ய ஆப்பிள் நிறுவனத்தின் பிரத்தியேக தொழில்நுட்பமும் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.



இந்தியாவிலும் சிறுவர்களுக்கான இணையப் பாதுகாப்புச் சட்டங்கள் கடுமையாக்கப்படும் பட்சத்தில் இந்தத் தொழில்நுட்பம் இங்கும் மிக விரைவில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளரும் இளம் தலைமுறையினரைத் தவறான பாதையில் செல்லாமல் முன்கூட்டியே தடுக்க இத்தகைய செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பங்கள் தற்போதைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமானது. சமூக வலைத்தளங்களை எந்த அளவிற்கு பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என்பதைப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு முறையாகக் கற்றுக்கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்த புதிய இன்ஸ்டாகிராம் ஏஐ வருகையானது சிறுவர்களுக்கு எதிராக இணையத்தில் நடக்கும் பல அத்து மீறல்களுக்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும்.



உணவகங்களை ஆக்கிரமிக்கும் ரோபோக்கள்!



சீன உணவகங்களில் ரோபோக்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சீனாவின் ஹாங்சோ நகரில் உள்ள உணவகங்களில் நூடுல்ஸ் தயாரிக்கவும், காய்கறிகளை வதக்கவும், உணவுகளைத் தட்டுகளில் பரிமாறவும் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெய்ஜிங் நகரிலும் உணவு தயாரித்தல், பானங்களைப் பரிமாறுதல் உள்ளிட்ட பணிகளில் ரோபோக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

சீனாவில் துரித உணவகங்கள் மற்றும் குறைந்த விலை உணவகங்களில் சமையல் ரோபோக்களின் பயன்பாடு 30 சதவீதத்தை எட்டியுள்ளது.

வெப்பம் அதிகமுள்ள சூழலில் மேற்கொள்ளப்படும் கடினமான, மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய பணிகளை ரோபோக்கள் மேற்கொள்வதால், ஊழியர்கள் உணவின் சுவை மற்றும் செய்முறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த முடிவதாக உணவக உரிமையாளர்களின் கூறுகின்றனர்.

பள்ளி உணவகங்களிலும் அதிக அளவில் உணவு தயாரிக்க இவை பயன்படுத்தப்படுகின்றன.

சித்திரச் சிறகுகள்



BEHIND ME MEDIA

















நாமலின் கிரிஷ் விசாரணை இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கோரல்



கிரிஷ் (Krrish) கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை, எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, இவ்வழக்குத் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும் (வேறு வழக்குகள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள) சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் மற்றொரு சந்தேகநபரான ஜானகி சிறிவர்தன ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான அதன் உதவிப் பணிப்பாளர் நீதிமன்றத்தில் விடயங்களைத் தெளிவுபடுத்துகையில் "இவ்விசாரணை தொடர்பாகக் கொழும்பு பிரதேச செயலாளர், முன்னாள் காணி ஆணையாளர் உள்ளிட்ட தரப்பினரிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், கோட்டை ட்ரான்ஸ்வேர்க் சதுக்கத்தில் அமைந்துள்ள காணியை கிரிஷ் நிறுவனத்திற்குக் கையளித்தமை தொடர்பில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன" எனத் தெரிவித்தார்.

மேலும், இவ்வழக்குடன் தொடர்புடைய ஆவணமொன்றில் காணப்படும் சந்தேகநபரான நாமல் ராஜபக்ஷவின் கையெழுத்து குறித்து ஆய்வு செய்வதற்காக, குறித்த ஆவணம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த ஆய்வை முன்னெடுப்பதற்குக் குறித்த ஆவணத்தின் மூலப் பிரதியை (Original) இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் கோரியுள்ளதாகவும் அவர் மன்றில் சுட்டிக்காட்டினார்.

குறித்த மூல ஆவணம் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 07ஆம் இலக்க அறையிலுள்ள வழக்குக் கோவையில் இருப்பதால், அதனைப் பெற்று அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைப்பதற்குத் தேவையான உத்தரவைக் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 07ஆம் இலக்க அறைப் பதிவாளருக்குப் பிறப்பிக்குமாறும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதான நீதவான், "இன்றைய தினம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக அறிக்கையில் இக்கோரிக்கை உள்ளடக்கப்படவில்லை" எனச் சுட்டிக்காட்டினார். அதற்கமைய, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் தினமொன்றில் இக்கோரிக்கையை மன்றில் முன்வைத்து அதனை உறுதிப்படுத்துமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு நீதவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, இவ்வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதவான், அதுவரை சந்தேகநபரான ஜானகி சிறிவர்தனவை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

பின்னணி: கொழும்பு, ட்ரான்ஸ்வேர்க் சதுக்கத்தில் அமைந்துள்ள காணியொன்றைப் பல்நோக்குத் திட்டமொன்றுக்காக இந்தியாவின் 'கிரிஷ்' நிறுவனத்திற்கு வழங்குவதில், 70 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்றமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அந்நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான ஜானகி சிறிவர்தன ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்திய 23 பேர் கைது



மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவித்துவிட்டு வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டறியும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடமாடும் மருத்துவப் பரிசோதனை நடவடிக்கை யின்போது 23பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்துப் பொலிஸாரும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகமும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தி, உயிரிழப்புகளைக் குறைக்கும் நோக்கில் இந்த விசேட திட்டம் செயல்படுத்தப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மட்டக்களப்பு நகரின் முக்கிய சந்திகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, வீதிகளில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் முதல் கனரக வாகனங்கள் வரையிலான வாகனங்கள் நிறுத்தப்பட்டு சாரதிகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்காக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் நடமாடும் மருத்துவப் பரிசோதனைப் பேருந்து மட்டக்களப்பு பிரதான பேருந்து நிலையம் மற்றும் ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளின் சாரதிகள், வேன் சாரதிகள், கனரக வாகன சாரதிகள், முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் உள்ளிட்ட பல்வேறு வாகன சாரதிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இன்றைய தினம் குறித்த பகுதிகளில் 141 வாகனங்கள் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டதுடன் அவற்றில் 23பேர் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவித்த நிலையில் வாகனங்களை செலுத்தியமை கண்டறியப்பட்டு கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையிலும், பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இவ்வாறான விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

BEHIND ME MEDIA

சாவகச்சேரியில் பென்ஸ் காருக்குள் போதைப்பொருள் மீட்பு!



சாவகச்சேரி பகுதியில் வீதி சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த "பென்ஸ்" ரக காரை பொலிஸார் மறித்து சோதனையிட்டுள்ளனர்.

அதனுள் மான் கொம்பில் கைப்பிடி செய்த வாள் ஒன்றும் நக்கிள்ஸ் கிளிப் ஒன்றும் காணப்பட்டதுடன் ஹெரோயின் போதைப் பொருளும் காணப்பட்டுள்ளது.

அதை அடுத்து காரில் இருந்த இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணை செய்தால், ஒருவர் கடந்த வருடம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மூன்று நாட்களுக்கு முன்னர் தான் யாழ்ப்பாண மேல் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் என தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் வழக்கு தவிர்ந்த வன்முறை சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றவியல் வழக்குகள் நீதவான் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

இந்தச் சம்பவம் ஒரு தனிநபரின் குற்றமாக மட்டும் பார்க்கப்படாமல் சட்டத்தின் கடுமைப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது.

பிணை நிபந்தனைகளை (அதுவும் மேல் நீதிமன்ற) மீறும் போது, குறித்த பிணை அனுமதி இரத்து செய்யப்பட்டு , அந்த வழக்கு முடியும் வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய விமானத் தாக்குதலின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் 13 பேர் படுகொலை செய்யப்பட்ட துயரச் சம்பவம் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது!







BEHIND ME MEDIA

உணவின் மீது மூளைக்கு ஏன் இத்தனை ஆசை?



‘என்னால ஏன் இந்தப் பழக்கத்தை மட்டும் விட முடியல?“

இதற்கான பதில் நம் வயிற்றில் இல்லை நம் மூளையில் இருக்கிறது என்று நவீன மருத்துவ அறிவியல் கூறுகிறது.



உணவின் மீது மூளைக்கு ஏன் இத்தனை ஆசை?

நாம் சாப்பிடும் ஒவ்வொரு உணவும் வயிற்றை மட்டும் நிரப்புவதில்லை. அது நம் மூளையிலும் ஒரு நினைவையும, ஒரு அனுபவத்தையும் உருவாக்குகிறது. குறிப்பாக அதிக சர்க்கரை, அதிக உப்பு மற்றும் அதிக கொழுப்பு கொண்ட துரித உணவுகள் மூளையின் வெகுமதி மையத்தை (Reward System) வலுவாகத் தூண்டுகின்றன. அப்போது டோபமைன் (Dopamine) என்ற நரம்பியல் வேதிப்பொருள் அதிகமாகச் சுரக்கிறது. இதனால் சில நிமிடங்களுக்கு மகிழ்ச்சி, உற்சாகம், திருப்தி போன்ற உணர்வுகள் உருவாகின்றன.

இந்த அனுபவத்தை மூளை மிகவும் முக்கியமானதாகப் பதிவு செய்து வைத்துக்கொள்கிறது. அடுத்த முறை அதே உணவைப் பார்த்தாலோ, அதன் மணத்தை உணர்ந்தாலோ, விளம்பரத்தைப் பார்த்தாலோ கூட, “அந்த மகிழ்ச்சியை மீண்டும் பெற வேண்டும்“ என்று மூளை நம்மைத் தூண்டத் தொடங்குகிறது.

அதனால்தான்... வயிறு நிறைந்திருந்தாலும்,

“ஒரு சிறிய பீட்சா மட்டும்...“ என்று மனம் சொல்லத் தொடங்குகிறது. இது பசி அல்ல் பல நேரங்களில் இது பழக்கத்தின் நினைவு.

வயிறு நிறைந்தாலும் மனம் ஏன் சாப்பிடச் சொல்கிறது?

ஒரு செயலை நாம் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்தால், அதற்கான நரம்பியல் இணைப்புகள் மூளையில் வலுவடைகின்றன. இதுவே ஒரு பழக்கமாக மாறுகிறது. உதாரணமாக, தினமும் மாலை ஐந்து மணிக்கு தேநீருடன் சமோசா சாப்பிடும் பழக்கம் இருந்தால், அந்த நேரம் வந்தாலே உடலுக்குப் பசி இல்லாவிட்டாலும், மூளை அந்த உணவை எதிர்பார்க்க ஆரம்பித்துவிடும். அந்த உணவு கிடைக்காவிட்டால் சிலருக்கு எரிச்சல், அமைதியின்மை அல்லது ஏமாற்றம் கூட ஏற்படலாம். இதன் காரணமாகத்தான், துரித உணவை ஒரே நாளில் முழுமையாகக் கைவிடுவது பலருக்குக் கடினமாக இருக்கிறது.

பழக்கத்தை மாற்றுவது எப்படி? - நியூரோபிளாஸ்டிசிட்டி

ஆனால் நல்ல செய்தி என்னவென்றால், நம் மூளை புதிய பழக்கங்களையும் உருவாக்கும் திறன் கொண்டது. இதையே அறிவியலில் நியூரோபிளாஸ்டிசிட்டி (Neuroplasticity) என்று அழைக்கிறார்கள். அதனால், கெட்ட பழக்கத்தை அழிக்க முயற்சிப்பதைவிட, அதற்குப் பதிலாக ஒரு நல்ல பழக்கத்தை உருவாக்குவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வாரத்தில் ஐந்து முறை துரித உணவு சாப்பிடுபவர் என்றால், முதலில் அதை மூன்று முறையாகக் குறையுங்கள். பின்னர் வாரத்திற்கு ஒரு முறையாக மாற்றுங்கள்.

வீட்டில் பழங்கள், சுண்டல், வறுத்த கடலை, பாதாம், வேர்க்கடலை, தயிர், மோர் போன்ற ஆரோக்கியமான சிற்றுண்டிகளை வைத்திருங்கள். திடீரென பசி எடுத்தால் முதலில் அவற்றைத் தேர்வு செய்யுங்கள்.

அதேபோல், போதுமான தூக்கம் இல்லாதபோதும், அதிக மனஅழுத்தம் இருக்கும்போதும், தனிமை அல்லது சலிப்பு ஏற்படும்போதும் துரித உணவின் மீது ஆசை அதிகரிக்கலாம். எனவே, தினசரி நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, போதுமான உறக்கம், குடும்பத்தினருடன் செலவிடும் நேரம் ஆகியவையும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை உருவாக்க உதவுகின்றன.

துரித உணவை ஒருமுறை சாப்பிட்டதால் உடனடியாக நோய் வந்துவிடாது. ஆனால்... அது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறும்போது, உடல் பருமன், கொழுப்பு கல்லீரல், இன்சுலின் எதிர்ப்பு, வகை–2 நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல வளர்சிதை மாற்ற நோய்களின் அபாயம் படிப்படியாக அதிகரிக்கலாம்.

திருவள்ளுவர் சொன்ன உணவுக் கட்டுப்பாடு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் உணவுக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

அற்றால் அளவறிந்து உண்க் அ.்துடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

– திருக்குறள் 943

அளவோடு உண்பவனே நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ்வான் என்ற இந்தக் குறள், இன்று மருத்துவ அறிவியல் கூறும் அளவான உணவு, சரியான உணவுத் தேர்வு, உடல் எடைக் கட்டுப்பாடு போன்ற கருத்துகளோடு ஆச்சரியப்பட வைக்கும் வகையில் ஒத்துப்போகிறது.

எனவே, அடுத்த முறை துரித உணவைப் பார்க்கும்போது, “எனக்கு உண்மையிலேயே பசியா... இல்லை என் மூளை பழைய மகிழ்ச்சியைத் தேடுகிறதா?“ என்று உங்களையே ஒருமுறை கேட்டுப் பாருங்கள்.

நாம் மூளையிடம் கேட்கின்ற அந்த கேள்வி உங்கள் மூளை உங்களுக்கு பதில் அளிக்க ஆரம்பிக்கும். உங்கள் அடுத்த உணவுத் தேர்வை மட்டுமல்ல, உங்கள் அடுத்த தலைமுறை ஆரோக்கியத்தையும் மாற்றக்கூடும்.

கண்களுக்கு தேவையான சத்தான உணவுகள்

- காரட் இதில் உள்ள பீட்டா-கெரட்டீன் மற்றும் வைட்டமின் ஏ ரெட்டினா பகுதியைப் பாதுகாத்து, இரவு நேரப் பார்வையை மேம்படுத்த உதவுகிறது.
- பச்சை இலை கீரைகள் : பசலைக் கீரை போன்றவற்றில் உள்ள “லூட்டின்“ மற்றும் “ஸீயாக்சாந்தின்“ ஆகிய ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் தீங்கு விளைவிக்கும் நீல ஒளியிலிருந்து விழித்திரையைப் பாதுகாக்கும்.
- கொழுப்புச்சத்து மீன்கள் : சால்மன், சாடீன் போன்ற மீன்களில் உள்ள ஒமேகா-3 / பேட்டி ஆசிட் கண் வறட்சி மற்றும் வயதான காலத்தில் ஏற்படும் பார்வைக் குறைபாட்டைத் தடுக்கும்.
- முட்டை : இதில் உள்ள லுடீன் மற்றும் சத்துக்கள் கண் விழித்திரைக்கு மிகவும் நல்லது.
- நட்ஸ் மற்றும் பருப்பு வகைகள் : பாதாம், வால்நட் மற்றும் வேர்க்கடலையில் உள்ள வைட்டமின் ஈ கண் சோர்வைக் குறைத்து இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும்.
- சிட்ரஸ் பழங்கள்: ஆரஞ்சு, பப்பாளி, நெல்லிக்கனி போன்ற வைட்டமின் சி நிறைந்த பழங்கள் கண் செல்களைப் பாதுகாக்கும்.



2. தினசரி கண் பாதுகாப்பு பழக்கங்கள்

- 20-20-20 விதிமுறை: ஒவ்வொரு 20 நிமிடத்துக்கு ஒருமுறை, 20 அடி தூரத்தில் உள்ள ஏதேனும் ஒரு பொருளை 20 விநாடிகள் பாருங்கள். இது கணினி அல்லது கைபேசி திரையால் ஏற்படும் கண் தசைகளின் சோர்வைக் குறைக்கும்.
- போதுமான தூக்கம்: தினமும் குறைந்தபட்சம் 7 முதல் 8 மணி நேரம் ஆழ்ந்த தூக்கம் அவசியம்.
- கண்களுக்கு நீர் தெளித்தல்: அவ்வப்போது சுத்தமான குளிர்ந்த நீரைக் கொண்டு கண்களுக்கு மென்மையாகத் தண்ணீர் தெளித்து ஓய்வு கொடுப்பது நல்லது.
- உரிய வெளிச்சம்: இருட்டில் மொபைல் அல்லது லேப்டாப் பயன்படுத்துவதைத் தவிர்த்து போதுமான வெளிச்சம் உள்ள இடத்தில் பயன்படுத்த வேண்டும்.
- சன்கிளாஸ் : வெயிலில் வெளியில் செல்லும்போது ருஏ கதிர்களிடமிருந்து கண்களைப் பாதுகாக்கச் சன்கிளாஸ் அல்லது குடை பயன்படுத்தலாம்.





BEHIND ME MEDIA

பலவீனமான பாலினமா பெண்கள்?

அவள் சுமந்தவரை ‘‘தியாகி’’ என்றீர்கள்...

சுமையை இறக்கி வைத்ததும் ‘‘திமிர் பிடித்தவள்’’ என்கிறீர்கள்!

அவள் அழாமல் இருந்தால் நல்ல பெண்.

எதிர்த்துப் பேசாமல் இருந்தால் குடும்பப் பெண்.

தனக்காக எதையும் கேட்காமல் இருந்தால் தியாகப் பெண்.

ஒருநாள், ‘‘எனக்கும் வலிக்கிறது...
எனக்கும் ஓய்வு வேண்டும்...
எனக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது’’

என்று சொன்னால் மட்டும்,
அவளுடைய குணத்தையே விசாரிக்கத் தொடங்கி விடுகிறீர்கள்!

சரி...

அறிவியலுக்கு வருவோம்.

சராசரியாக, வயது வந்த ஆண்களுக்கு பெண்களைவிடத் தசையின் அளவும் (Muscle mass), அதிகபட்சத் தசை வலிமையும் (Maximal muscle strength) அதிகம்.

பருவமடைதலின் போது ஏற்படும் டெஸ்டோஸ்டிரோன் (Testosterone) வேறுபாடு இதற்கு முக்கியக் காரணம்.

குறிப்பாக மேலுடல் வலிமையில் (Upper-body strength) இந்த வேறுபாடு அதிகம்.

ஆனால் ஒரு பொருளை அதிக எடையில் தூக்க முடிவது, இன்னொரு மனிதரைத் தாழ்த்திப் பேசுவதற்கான தகுதியா?

டெஸ்டோஸ்டிரோன் தசை வளர்ச்சியில் பங்காற்றுகிறது.

மனிதரின் மதிப்புக்கு மதிப்பெண் போடுவதில்லை!

அதிலும் சராசரியாக’’ என்பதைக் கவனியுங்கள்.

வயது, உடலளவு, உணவு, உடல்நிலை, பயிற்சி ஆகியவற்றால் தனிநபர்களின் வலிமை மாறுபடும்.

பெண்களும் எதிர்ப்புப் பயிற்சியால் தங்கள் தசை அளவையும் வலிமையையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

உயிரியல் வேறுபாட்டை வைத்து ஒரு பெண்ணின் அறிவுக்கும், சுதந்திரத்திற்கும், சுயமரியாதைக்கும் எல்லை போட முடியாது.

முன்னைய தலைமுறைப் பெண்கள் தலையில் குடம் சுமந்தார்கள்.

வயலில் உழைத்தார்கள்.

குழந்தைகளை வளர்த்தார்கள்.

அவர்களின் உழைப்பைத் தலைவணங்கி மதிப்போம்.



ஆனால் அந்தப் புகைப்படங்களை இன்றைய பெண்களிடம் காட்டி,

அவர்கள் எவ்வளவு செய்தார்கள்... உன்னால் ஏன் முடியவில்லை? என்று கேட்கும் முன்-

அந்தப் பெண்களுக்கு ஓய்வு கிடைத்ததா?

அவர்களின் உடல் வலியை யாராவது கேட்டார்களா?

‘‘இன்று என்னால் முடியவில்லை’’ என்று சொல்ல அவர்களுக்கு இடமிருந்ததா?

அவர்களின் உழைப்பை நினைவுகூரும்போது, அவர்கள் சொல்ல முடியாமல் விழுங்கிய வலியையும் நினைவுகூருங்கள்.

ஒரு பெண் குடும்பத்தை நேசிக்கலாம். கணவரையும் குழந்தைகளையும் மனதாரக் கவனிக்கலாம்.

அந்த அன்புக்காக அவள் தன்னையே முழுவதுமாக இழக்க வேண்டும் என்று யார் தீர்மானித்தது?

அவளுடைய ஆசை மட்டும் எப்போதும் கடைசியில் நிற்க வேண்டும்.

அவளுடைய ஓய்வு மட்டும் எப்போதும் ஒத்திவைக்கப்பட வேண்டும்.

அவளுடைய கண்ணீர் மட்டும் யாருக்கும் தெரியாமல் இருக்க வேண்டும்.

ஏன்? அவளும் அந்தக் குடும்பத்தில் ஒரு உயிர்தானே?

சுயமரியாதை (Self-respect) உள்ள பெண் என்பவள் எல்லாவற்றையும் தனியாகச் சுமப்பவள் அல்ல. தனக்கு வலிக்கும்போது அதைச் சொல்லவும், உதவி கேட்கவும், அவமதிப்புக்கு எதிராக நிற்கவும் உரிமையுள்ளவள்.

அவள் அழுவது பலவீனத்திற்கான சான்றல்ல.

அவள் அமைதியாக இருப்பது சம்மதத்திற்கான சான்றுமல்ல.

அவள் இதுவரை தாங்கினாள் என்பதற்காக, இனியும் தாங்கிக்கொண்டே இருக்க வேண்டிய கடமை அவளுக்கு இல்லை.

பெண்கள் அனைவரும் மனதளவில் வலிமையானவர்கள் என்றும் சொல்ல வேண்டாம். மனத்திடத்தை பாலினம் மட்டும் தீர்மானிப்பதில்லை. பெண்ணுக்கும் உடைந்து போகும் நாட்கள் இருக்கலாம் அந்த நாட்களிலும் அவள் மரியாதைக்குரியவள்தான்.

அவளை ‘‘வலிமையானவள்’’ என்று பாராட்டிவிட்டு, இன்னொரு சுமையை அவள் தோளில் வைக்காதீர்கள்.

இந்த வாரம்

BEHIND ME MEDIA

17-11-2026

அஷ்டமி

கரிநாள்

ஐயப்ப பக்தர்கள் மாலையணியும் விழா





விஷ்ணுபதி புண்ணிய காலம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 26 முருகப் பெருமானுக்கும் சிவ பெருமானுக்கும் உரிய மிக உன்னத கார்த்திகை மாத துவக்கம் இன்று. ஸப்தமி கா.01.21 வரை, பின்பு அஷ்டமி - திருவோணம் கா.12.13 வரை, பின்பு அவிட்டம்.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 1 | NOV - TUE செவ்வாய் | ஜமாஅத்துல் ஆகிர் 7 | வளர்பிறை 321 / 044

வளர். அஷ்டமி 50.48 (கா.02.33) அவிட்டம் 49.22 (கா.01.59) தியாஜ் 00.00 சித்த 19.22 மேல் மரண. விஷ்ணுபதி புண்ணிய காலம். கரிநாள். ஐயப்ப பக்தர்கள் மாலையணியும் விழா. திருவண்ணாமலை ஸ்ரீசுவாமி காலை பூத வாகனம், இரவு சிம்ம வாகனத்திலும் பவனி.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	03.00	12.00	09.00
மாலை: 4.45-5.45	7.30-8.30	04.30	01.30	10.30

சூலம் : வடக்கு | பரிகாரம் : பால் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 5 வி. 15 | சந்திராஷ்டமம் பூசம்

கரணம்: 7.30-9 | சூரிய உதயம் : 6.14

ஆசைப்படும் முன் அருகதையாய் இரு

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | செ கே | வி | சூ | பு சு | மேல் | திதி அஷ்டமி

இராசிபலன்
- மேஷம் - ஆசை
- ரிஷபம் - நலம்
- மிதுனம் - ஆக்கம்
- கடகம் - அமைதி
- சிம்மம் - புகழ்
- கன்னி - அன்பு
- துலாம் - லாபம்
- விருச்சி - உயர்வு
- தனுசு - ஆதரவு
- மகரம் - சுகம்
- கும்பம் - வரவு
- மீனம் - பிரீதி

18-11-2026

நவமி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 27 கார்த்திகை மாத வளர்பிறை நவமி திதி - அழியாத புண்ணியம் தரும் உன்னத அட்சய நவமி இன்று. அஷ்டமி கா.02.33 வரை, பின்பு நவமி - அவிட்டம் கா.01.59 வரை, பின்பு சதயம்.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 2 | NOV - WED புதன் | ஜமாஅத்துல் ஆகிர் 8 | வளர்பிறை 322 / 043

வளர். நவமி 52.27 (கா. 03.14) சதயம் 52.25 (கா.03.13) தியாஜ் 08.16 சித்த 52.25 அமிர்த யோகம். கிருதயுகாதி. அட்சய நவமி. சுவாமிமலை ஸ்ரீமுருகப் பெருமான் பூத வாகனத்தில் புறப்பாடு. திருப்பரங்குன்றம் ஸ்ரீஆண்டவர் அன்ன வாகன உலா. சிக்கல் சிங்காரவேலவர் விடாயாற்று உற்சவம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 11.15-12.00	1.45-2.45	12.00	10.30	07.30
மாலை: 4.45-5.45	6.30-7.30	01.30	12.00	09.00

சூலம் : வடக்கு | பரிகாரம் : பால் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 5 வி. 04 | சந்திராஷ்டமம் ஆயில்யம்

கரணம்: 6-7.30 | சூரிய உதயம் : 6.15

மருந்தும் விருந்தும் மூன்று பொழுது தான்

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | மேல் | திதி நவமி

இராசிபலன்
- மேஷம் - வெற்றி
- ரிஷபம் - நட்பு
- மிதுனம் - உயர்வு
- கடகம் - சினம்
- சிம்மம் - ஆதரவு
- கன்னி - புகழ்
- துலாம் - பகை
- விருச்சி - அன்பு
- தனுசு - அமைதி
- மகரம் - நலம்
- கும்பம் - ஆசை
- மீனம் - கீர்த்தி

19-11-26



இந்திராகாந்தி பிறந்தநாள்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 28 தியாஜ் எனக்குறிப்பிடும் வேளையில் இருந்து மூன்றே முக்கால் நாழிகை சுப காரியம் தவிர்க்கவும். நவமி கா.03.14 வரை, பின்பு தசமி - சதயம் கா.03.13 வரை, பின்பு பூரட்டாதி.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 3 | NOV - THU வியாழன் | ஜமாஅத்துல் ஆகிர் 9 | வளர்பிறை 323 / 042

வளர். தசமி 52.49 (கா. 03.23) பூரட்டாதி 54.17 (கா. 03.58) தியாஜ் 08.58 சித்த யோகம். திருவண்ணாமலை ஸ்ரீஅருணாச்சல நாயகர் காலை ரிஷப வாகனத்திலும் இரவு பெரிய ரிஷப வாகனத்திலும் பவனி. திருப்பதி ஸ்ரீஏழுமலையப்பன் புஷ்பாங்கி ஸேவை.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 11.30-12.00	----------	01.30	09.00	06.00
மாலை: 12.00-1.00	6.30-7.30	03.00	10.30	07.30

சூலம் : தெற்கு | பரிகாரம் : தைலம் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 4 வி. 53 | மகம்

கரணம்: 3-4.30 | சூரிய உதயம் : 6.15

உன்னைத்தவிர எல்லாரையும் மன்னித்துவிடு

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | கீழ் | திதி தசமி

இராசிபலன்
- மேஷம் - ஆதாயம்
- ரிஷபம் - சுகம்
- மிதுனம் - நிறைவு
- கடகம் - வரவு
- சிம்மம் - செலவு
- கன்னி - தாமதம்
- துலாம் - தடங்கல்
- விருச்சி - களிப்பு
- தனுசு - வெற்றி
- மகரம் - கவலை
- கும்பம் - மேன்மை
- மீனம் - சாந்தி

20-11-2026



சுபமுகூர்த்தம்



சர்வ ஏகாதசி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 29 மஹாவிஷ்ணுவை மனதில் கொண்டு, பாவங்கள் நீக்கி, செல்வம், புகழ், மோட்சம் அருளும் ஏகாதசி இன்று. தசமி கா.03.23 வரை, பின்பு ஏகாதசி - பூரட்டாதி கா.03.58 வரை, பின்பு உத்திரட்டாதி.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 4 | NOV - FRI வெள்ளி | ஜமாஅத்துல் ஆகிர் 10 | வளர்பிறை 324 / 041

வளர். ஏகாதசி 51.55 (கா. 03.01) உத்திரட்டாதி 54.53 (கா. 04.12) தியாஜ் 18.35 சித்த 54.53 மேல் அமிர்த யோகம். சுபமுகூர்த்தம். சர்வ ஏகாதசி. திருவண்ணாமலை ஸ்ரீசுவாமி அறுபத்து மூவருடன் பவனி. வள்ளியூர் முருகப் பெருமான் திருக்கல்யாணம். நாகூர் மீரான் சாஹிப் உரூஸ்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 9.15-10.15	12.00-1.00	10.30	07.30	03.00
மாலை: 4.45-5.45	6.30-7.30	12.00	09.00	04.30

சூலம் : மேற்கு | பரிகாரம் : வெல்லம் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 4 வி. 42 | சந்திராஷ்டமம் பூரம்

கரணம்: 1.30-3 | சூரிய உதயம் : 6.15

துணிபவனையே அதிர்ஷ்ட தேவதைக்கு பிடிக்கும்

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | மேல் | திதி ஏகாதசி

இராசிபலன்
- மேஷம் - வெற்றி
- ரிஷபம் - பிரீதி
- மிதுனம் - சுகம்
- கடகம் - உயர்வு
- சிம்மம் - நட்பு
- கன்னி - அமைதி
- துலாம் - புகழ்
- விருச்சி - ஆதரவு
- தனுசு - லாபம்
- மகரம் - நிறைவு
- கும்பம் - செலவு
- மீனம் - போட்டி

21-11-2026

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 30 மஹாவிஷ்ணு, முன்னோர்கள் மற்றும் துளசி வழிபாட்டுக்கு உகந்த சிலுகத்துவாதசி விரதம் இன்று. ஏகாதசி கா.03.01 வரை, பின்பு துவாதசி - உத்திரட்டாதி கா.04.12 வரை, பின்பு ரேவதி.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 5 | NOV - SAT சனி | ஜமாஅத்துல் ஆகிர் 11 | வளர்பிறை 325 / 040

வளர். துவாதசி 49.50 (கா. 02.11) ரேவதி 54.19 (கா. 03.59) தியாஜ் 24.40 மரண 54.19 மேல் சித்த யோகம். சிலுகத்துவாதசி. ஸ்வாயம்பு மன்வாதி. ஷீராப்தி பூஜை. திருவண்ணாமலை ஸ்ரீஅருணாச்சல நாயகர் ரதோத்ஸவம். தேவகோட்டை ஸ்ரீரெங்கநாதர் புறப்பாடு. ஸ்ரீவைகுண்டம் பாலாபிஷேகம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	09.00	06.00	01.30
மாலை: 12.15-1.15	9.30-10.30	10.30	07.30	03.00

சூலம் : கிழக்கு | பரிகாரம் : தயிர் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 4 வி. 32 | சந்திராஷ்டமம் உத்திரம்

கரணம்: 12-1.30 | சூரிய உதயம் : 6.15

துணை போனாலும் பிணை போகாதே

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | சம | திதி துவாதசி

இராசிபலன்
- மேஷம் - சுகம்
- ரிஷபம் - நட்பு
- மிதுனம் - பயம்
- கடகம் - ஆதரவு
- சிம்மம் - உயர்வு
- கன்னி - போட்டி
- துலாம் - வெற்றி
- விருச்சி - புகழ்
- தனுசு - செலவு
- மகரம் - அமைதி
- கும்பம் - சினம்
- மீனம் - நிறைவு

22-11-26



பிரதோஷம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 மார்கசீர்ஷம் 01 தன்னம்பிக்கை, மகிழ்ச்சி, கண் பார்வை அதிகரிக்க செய்யும் சூரிய வழிபாடு செய்ய ஏற்ற ஞாயிறு இன்று. துவாதசி கா.02.11 வரை, பின்பு திரயோதசி - ரேவதி கா.03.59 வரை, பின்பு அசுபதி.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 6 | NOV - SUN ஞாயிறு | ஜமாஅத்துல் ஆகிர் 12 | வளர்பிறை 326 / 039

வளர். திரயோதசி 46.40 (கா. 12.55) அசுபதி 52.41 (கா. 03.19) தியாஜ் 42.59 சித்த யோகம். பிரதோஷம். திருப்பரங்குன்றம் ஆண்டவர் சிம்மாசனத்தில் பவனி. சுவாமிமலை முருகப் பெருமான் காமதேனு வாகன புறப்பாடு. சென்னை பப்பு மஸ்தான் சாஹிப் உரூஸ்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	04.30	03.00	12.00
மாலை: 3.15-4.15	1.30-2.30	06.00	04.30	01.30

சூலம் : மேற்கு | பரிகாரம் : வெல்லம் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 4 வி. 21 | சந்திராஷ்டமம் ஹஸ்தம்

கரணம்: 10.30-12 | சூரிய உதயம் : 6.15

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | சம | திதி திரயோதசி

இராசிபலன்
- மேஷம் - நிறைவு
- ரிஷபம் - அமைதி
- மிதுனம் - மேன்மை
- கடகம் - வெற்றி
- சிம்மம் - பாராட்டு
- கன்னி - கவலை
- துலாம் - ஆதரவு
- விருச்சி - அன்பு
- தனுசு - கோபம்
- மகரம் - புகழ்
- கும்பம் - போட்டி
- மீனம் - சுகம்

23-11-26

கரிநாள்



புட்டபர்த்தி சத்திய சாய் பாபா பிறந்த நாள்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். விருச்சிக மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 மார்கசீர்ஷம் 02 பரணி நட்சத்திரத்தில் அண்ணாமலையார் கருவறையில் அதிகாலை 4 மணிக்கு ஏற்றும் பரணி தீபம் இன்று. திரயோதசி கா.12.55, பின்பு சதுர்த்தசி மா.11.19 வரை, பின்பு பௌர்ணமி - அசுபதி கா.03.19, பின்பு பரணி.

ஸ்ரீ பராபவ கார்த்திகை 7 | NOV - MON திங்கள் | ஜமாஅத்துல் ஆகிர் 13 | வளர்பிறை 327 / 038

வளர். சதுர்த்தசி 42.39 (மா. 11.19) பரணி 50.15 (கா. 02.21) தியாஜ் 15.45 சித்த 50.15 மேல் மரண யோகம். கரிநாள். பரணிதீபம். பிருந்தாவனபூஜை. திருப்பரங்குன்றம் ஆண்டவர் பட்டாபிஷேகம். திருவெண்காடு, திருக்கடவூர் திருக்கழுகுன்றம், திருவாடானை இத்தலங்களில் 1008 சங்காபிஷேகம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 6.15-7.15	9.15-10.15	07.30	01.30	10.30
மாலை: 4.45-5.45	7.30-8.30	09.00	03.00	12.00

சூலம் : கிழக்கு | பரிகாரம் : தயிர் | விருச்சிக லக்கனம் இருப்பு நா. 4 வி. 10 | சந்திராஷ்டமம் சித்திரை

கரணம்: 9-10.30 | சூரிய உதயம் : 6.15

பாதி செய்வதை விட செய்யாது இருப்பதே மேல்

சனி | ரா | 2 சிம்-செ 13 விரு-புத | கே | செ வி | சூ | பு சு | கீழ் | திதி சதுர்த்தசி

இராசிபலன்
- மேஷம் - செலவு
- ரிஷபம் - நிறைவு
- மிதுனம் - நட்பு
- கடகம் - புகழ்
- சிம்மம் - அமைதி
- கன்னி - பிரீதி
- துலாம் - நன்மை
- விருச்சி - நலம்
- தனுசு - அன்பு
- மகரம் - உயர்வு
- கும்பம் - கவலை
- மீனம் - தடங்கல்

புலனாய்வுப் பக்கங்கள்

BEHIND ME MEDIA

ரஷ்ய எல்லை அருகில் தற்காப்புப் போர்ச் சூழலுக்குத் தயாரான நிலையில் கனடியப் படை!

லாட்வியாவில் நேட்டோவின் பாதுகாப்புப் பணியில் கனடா தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள நிலையில், கனடியத் தளபதி ஒருவர் 3,000 துருப்புக்களை மேற்பார்வையிட்டு வருகிறார். ஆட்ரியன் கோப்ரியல் இது குறித்து விரிவாக ஆராய்கிறார்.



கிழக்கு ஐரோப்பாவில் அதிகரித்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அப்பகுதியில் நேட்டோவின் மிகப்பெரிய இராணுவப் பயன்பாட்டைச் சார்ந்த கனடிய துருப்புக்கள் வழிநடத்தும்போது, ரஷ்யா மற்றும் பெலாரஸ் உடனான லாட்வியாவின் எல்லையிலிருந்து 'CTV நியூஸ்' கனடியர்களுக்குத் நேரடி மற்றும் தனித்துவமான அறிக்கையை வழங்கியது. இது ஐந்து பாகங்களைக் கொண்ட தொடரின் முதல் பாகமாகும்.

REZEKNE, லாட்வியா – வரலாற்றில் முதன் முறையாக, லாட்வியாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள கனடா தலைமையிலான நேட்டோவின் முழுப் படைப்பிரிவும் இந்த வாரம் கிழக்கு நோக்கி, ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய இரு நாடுகளின் எல்லைக்கும் அருகில் சென்று களமிறங்குகிறது.



லாட்வியாவின் யுனயணை உள்ள தங்கள் தளத் திலிருந்து தொட்டிகள், காலாட்படை, மருத்துவக் குழுக்கள் மற்றும் பொறியாளர்கள் கிழக்கு நோக்கி முன்னேறி நேட்டோவின் கிழக்குப் பகுதியில் தற்காப்பு நிலைகளை அமைப்பது உள்ளிட்ட பல நாள் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

லாட்வியா, 2017 ஆம் ஆண்டு முதல் கனடாவின் மிகப்பெரிய வெளிநாட்டு இராணுவமையமாக உள்ளது.

Operation REASSURANCE திட்டத்தின் கீழ் அந்நாட்டில் உள்ள நேட்டோவின் பன்னாட்டுப் படைப்பிரிவை கனடா வழிநடத்தி வருகிறது.

அடாஸியில் உள்ள தளத்தில் 14 நேட்டோ நாடுகளைச் சேர்ந்த சுமார் 3,000 சிப்பாய்கள் உள்ளனர், அவர்களில் தோராயமாக 2,000 பேர் கனடிய ஆயுதப்படைகளின் உறுப்பினர்களாவர். அவர்களில் பெரும்பாலோர் இந்த வாரம் கிழக்கு நோக்கிய துருப்புக்களின் பாரிய திரட்டலில் பங்கேற்கின்றனர்.

கனடிய ஆயுதப்படைகளின் உறுப்பினர்களுடன் இணைந்திருக்கும் ஊவுஏ நியூஸ், அந்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய நேட்டோ நடவடிக்கையின் பிரத்யேகக் காட்சிகளைப் பெற்று வழங்குகிறது.

இந்தப் படைப் பிரிவை வழிநடத்தும் பன்னாட்டுப் போர்ச் சண்டைக் குழுவின் தளபதியான கனடிய ஆயுதப்படையின் லெப்டினன்ட் கர்னல் Simon Mailloux, கிழக்கில் கனடாவின் இராணுவ நிலைப்பாடு மாறியுள்ளதாகப் பகிர்ந்து கொண்டார்.

"2017 இல் லாட்வியாவில் நேட்டோ இருப்பை நாங்கள் வழிநடத்தத் தொடங்கியபோது, நாங்கள் ஒரு 'நம்பிக்கையளிக்கும்' நிலையில் இருந்தோம்,

அது 'தடுப்பு' நிலைக்குப் பரிணமித்தது, இப்போது நாங்கள் 'தற்காப்புக்குத் தயார்' என்ற நிலைக்கு வந்துள்ளோம்" என்று லெப்டினன்ட் கர்னல் ஆலடழரஉமள கூறுகிறார்.

உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பைத் தொடர்ந்து இந்தப் பிராந்தியத்தில் ரஷ்ய அச்சுறுத்தல் குறித்த கவலைகள் அதிகரித்துள்ளன.

ட்ரோன் ஊடுருவல்கள் முதல் இணையத் தாக்குதல்கள் வரை பிராந்தியம் முழுவதும் "சுழல் போர் முறையை" Compline முன்னெடுப்பதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

கடந்த வாரம் முழுவதும் பீரங்கிகள், டாங்கிகள் மற்றும் காலாட்படை வீரர்கள் கட்டளைகளை எழுப்பும் சத்தங்கள் அடாஸியில் உள்ள பயிற்சி மைதானத்தில் எதிரொலித்தன.

கனடா தலைமை யிலான படைப்பிரிவு, கிழக்கு லாட்வியாவிற்குத் தற்போதைய களமிறக்கத்திற்கு முன்னதாகத் தங்கள் போர்த் தயார்நிலை மதிப்பீட்டைப் (combat readiness evaluation) மேற்கொண்டு வருகிறது.

லெப்டினன்ட் கர்னல் Myloucks தனது போர்க்குழு எதுவந்தாலும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்.

"போர்க்குழு சண்டைக்குத் தயாராக இருப்பதை உறுதிசெய்யவே நாங்கள் இந்தப் பயிற்சியை மேற்கொள்கிறோம். எங்களது பயிற்சிகளும் தந்திரோபாயங்களும் தற்போதைய சூழலுக்கு ஏற்பப் புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க விரும்புகிறோம்.

உக்ரைனில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் பார்க்கிறோம், விஷயங்கள் மாறிவருகின்றன. நாங்கள் விளிம்பில் இருக்க விரும்புகிறோம், அந்த நிலை வந்தால் எதிர்கொள்ளத் தயாராக இருக்க விரும்புகிறோம்."

ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய இரு நாடுகளும் லாட்வியாவின் கிழக்கு எல்லையை ஒட்டியுள்ளன. எஸ்டோனியா மற்றும் லிதுவேனியாவுடன் சேர்ந்து லாட்வியா நேட்டோவின் கிழக்கு எல்லையை அமைக்கிறது.

ஜூலை மாதம் துருக்கியின் அங்காராவில் நடைபெற்ற நேட்டோ உச்சிமாநாட்டில் பிரதமர் Mark Carney "ரஷ்யாவிடமிருந்து நாம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களுக்கு" மத்தியில் இப்பகுதியில் அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான கனடாவின் திட்டங்களைப் பகிர்ந்து கொண்ட போது "லாட்வியாவில் ஒப்பரேஷன் ரியாக்சுரன்ஸின் விரிவாக்கத்தை" அறிவித்தார்.

ரஷ்யாவும் எல்லையின் மறுபக்கத்தில் இதே போன்ற இராணுவத் தயார்நிலைப் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

இந்தப் பிராந்தியத்தில் தங்கள் இருப்பும் ஆயத்தமும் ஒரு வலுவான தடுப்பாகச் செயல்படும் என்றும், லாட்வியாவில் அமைதி நிலவும் என்றும் கனடா தலைமையிலான நேட்டோ படைப்பிரிவின் உறுப்பினர்கள் நம்புகின்றனர்.



BEHIND ME MEDIA

சாதனை படைத்த திருகோணமலை மாணவி நிவாஷ்னி



இலங்கையின் 11 வயதுக்குட்பட்டோர் பெண்கள் விரைவு சதுரங்கத் தரவரிசையில் இரண்டாம் இடத்தையும், 1670 சர்வதேச மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் உலகளவில் 120ஆம் இடத்தையும் பெற்று திருகோணமலை மாணவி நிவாஷ்னி சாதனை புரிந்துள்ளார்.

இவர் சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் சர்வதேச விரைவு சதுரங்க மதிப்பீட்டின் அடிப்படையில், 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 1670 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். மேலும், சர்வதேச அளவில் செயற்பாட்டிலுள்ள இதே பிரிவில் மதிப்பீடு பெற்ற வீராங்கனைகளில் 120ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

நடப்பாண்டில் நடைபெற்ற 15ஆவது கண்டி சர்வதேச திறந்தநிலை சதுரங்கப் போட்டியில், 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பங்கேற்ற நிவாஷ்னி, விரைவு நிலைப் போட்டியில் சம்பியன் பட்டத்தையும், பிளிட்ஸ் பிரிவில் 2ஆம் இடத்தையும், கிளாஸிக்கல் பிரிவில் 10ஆம் இடத்தையும் பெற்று மூன்று பிரிவுகளிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பதிவு செய்தார். ஒரே போட்டியில் மூன்று பிரிவுகளிலும் திறமையை வெளிப்படுத்தியமை அவரது சதுரங்க ஆற்றலையும் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாண்டு நடைபெற்ற ஸ்ரீலங்கா பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் தனிநபர் சம்பியன்ஸ் போட்டியின் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பிரிவில் பங்கேற்ற நிவாஷ்னி, 7 சுற்றுகளில் 5 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டச் சிறப்பு வெற்றி நிலையையும் பெற்றார். இந்தப் போட்டியின் மூலம் தனது சர்வதேச சதுரங்க மதிப்பீட்டில் சுமார் 35 புள்ளிகள் மதிப்பீட்டு அதிகரிப்பையும் பெற்றுள்ளார்.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவியான ஜெகதீஷன் நிவாஷ்னி, சதுரங்க விளையாட்டில் தொடர்ச்சியாகப் பல சாதனைகளைப் படைத்து திருகோணமலை மாவட்டத்திற்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்து வருகின்றார்.

திருகோணமலை சதுரங்கப் பயிற்சி நிலையத்தின் மூலம் இவர் தனது பயிற்சிகளைப் பெற்றுள்ளார். கோணேசலிங்கம் ஜெகதீசன், ஷோபனா ஜெகதீசன் தம்பதிகளின் மகளான இவர், 2024ஆம் ஆண்டில் இலங்கை தேசிய மட்டத் தெரிவுப் போட்டியின் மூலம் பொதுநலவாய சதுரங்கச் சம்பியன்ஸ் போட்டிக்கான குழுவிற்கும் தெரிவு செய்யப பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கொட்லாந்தை வீழ்த்தி இரண்டாவது வெற்றியை ஈட்டியது இலங்கை



ஓமான் தேசத்தின் அஜ்மான் விளையாட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐசிசி மகளிர் முன்னேறிவரும் நாடுகள் கிரிக்கெட் தொடரின் ஏ குழு போட்டியில் ஸ்கொட்லாந்தை 4 விக்கெட்களால் இலங்கை வெற்றிகொண்டது.

சுகந்திகா குமாரி, சத்யா சந்தீப்பனி ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகள், விஷ்மி குணரட்னவின் திறமையான துடுப்பாட்டம் என்பன இலங்கையின் வெற்றியில் முக்கிய பங்காற்றின.

இந்தத் தொடரில் இலங்கை ஈட்டிய இரண்டாவது வெற்றி இதுவாகும். இதன் மூலம் அரை இறுதி வாய்ப்பை இலங்கை அதிகரித்துக்கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீராங்கனை டார்சி கார்டர் மாத்திரம் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 62 ஓட்டங்களைப் பெற்றார்.

சுகந்திகா குமாரி 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சத்யா சந்தீப்பனி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 18.1 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்திலிருந்து விலகிய பெத்தெல்

முழங்கால் காயமொன்றிலிருந்து குணமடைவதில் ஏற்பட்ட பின்னடைவையடுத்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளைக் கொண்ட அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தை இங்கிலாந்தின் துடுப்பாட்டவீரர் ஜேக்கப் பெத்தெல் தவறவிடுவதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இடதுகால் பெருவிரல் காயம் காரணமாக வேகப்பந்துவீச்சாளர் ஜோஷ் டொங்கும் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து விலகிய நிலையில் புதுமுகவீரர்களான சகல துறைவீரர் ஜேம்ஸ் கோல்ஸும் வேகப்பந்துவீச்சாளர் எடி ஜக்கும் குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய அமெரிக்காவின் பயிற்சியாளராக குவார்டியோலா?

ஐக்கிய அமெரிக்காவின் தலைமைப் பயிற்றுவிப்பாளரான மௌரிசியோ பொச்செட்டினோ இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்குச் செல்லுமிடத்து, அவரை பெப் குவார்டியோலா மூலம் பிரதியிட ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

யுனைட்டெட்டின் பெறுபேறுகள் மோசமாகக் காணப்படும் நிலையில் யுனைட்டெட்டின் தலைமைப் பயிற்சியாளரான மைக்கல் கரிக்கை பொச்செட்டினோ மூலம் பிரதியிட யுனைட்டெட் எண்ணியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் சம்மாந்துறை வீரர்கள்

இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கையின் சுஊஊ அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பங்கேற்கவுள்ள சம்மாந்துறையைச் சேர்ந்த மூன்று இளம் வீரர்களுக்கு உதவும் வகையில், சம்மாந்துறை பிரதேச சபையினால் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சம்மாந்துறை MUFO Cricket Academy-யைச் சேர்ந்த ஹம்தான், இஸ்பாக், சாஹித் ஆகிய மூன்று வீரர்களும் Riches Lanka Center for Cricket (RCC) ஊடாகத் தெரிவு செய்யப்பட்டு, இலங்கை சுஊஊ அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் இம்மாதம் இந்தியாவின் ஹரியானா மற்றும் டெல்லி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும், 2027 ஜனவரி மாதம் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள போட்டிகளிலும் பங்கேற்கவுள்ளனர்.



இதற்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவுகளுக்கு நிதியுதவி கோரி ஆருகுழு விளையாட்டுக் கழகத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம், சம்மாந்துறை பிரதேச சபையின் ஐந்தாவது கூட்டத்தொடரின் 17ஆவது அமர்வில் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, கடந்த பல்கலைக்கழக அனுமதித் தெரிவில் தொழில்நுட்பப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதற்கும் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், ஏனைய கல்வித் துறைகள் ஊடாகப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் பிரதேச சபைக்கு அழைத்து கௌரவிக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு, அதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது.

சர்வதேச விளையாட்டுத் துறையில் சாதிக்க முயற்சிக்கும் இளம் வீரர்களையும், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களையும் ஊக்குவித்து கௌரவிக்கும் வகையில் சம்மாந்துறை பிரதேச சபை முன்னெடுத்துள்ள இத்தீர்மானங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

உலகக் கண்ணோட்டம்

BEHIND ME MEDIA

nvidia CEO போட்டியில் 3 இந்திய வம்சாவளியினர்



சஞ்சய் மெஹ்ரோத்ரா நிகேஷ் அரோரா தாமஸ் குரியன்

nvidia நிறுவனத்தின் நிரந்தர சிஇஓ பதவிக்கான போட்டியில் 3 இந்திய வம்சாவளியினர் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

உலகின் முன்னணி சிப் தயாரிப்பு நிறுவனமான ஏனையவின் தலைமைச் செயல் அதிகாரி ஜென்சன் ஹுவாங், ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான கோலெட் கிரெஸ் இடைக்கால சிஇஓ-ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஏனையை நிறுவனத்தின் நிரந்தர சிஇஓ பதவிக்கு அமெரிக்காவின் முன்னணி நிறுவனங்களில் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வரும் சஞ்சய் மெஹ்ரோத்ரா, நிகேஷ் அரோரா மற்றும் தாமஸ் குரியன் ஆகிய 3 இந்திய வம்சாவளியினர் பெயர் பரிசீலிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

மெமரி சிப் தயாரிப்பு நிறுவனமான மைக்ரானின் தலைமை நிர்வாகியான சஞ்சய் மெஹ்ரோத்ரா, இத்துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். மைக்ரான் தயாரிப்புகளைப் பயன்படுத்தும் என்விடியா நிறுவனத்துடன் இவர் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளார். 2017-ல் மைக்ரானில் சேருவதற்கு முன்பு, மெஹ்ரோத்ரா 1988-ல் ஃபிளாஷ் மெமரி முன்னோடியான சான்டிஸ்க் நிறுவனத்தை இணைந்து நிறுவினார்.

பாலோ ஆல்டோ நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி நிகேஷ் அரோரா. கூகுள் நிறுவனத்தில் 10 ஆண்டு காலம் பணிபுரிந்துள்ளார்.

கூகுள் கிளவுட் தலைமைச் செயல் அதிகாரியான தாமஸ் குரியன், கூகுளில், கிளவுட் உள்கட்டமைப்பு, நிறுவன மென்பொருள் மற்றும் செயற்கை நுண்ணறிவு சேவைகளை மேற்பார்வையிடுகிறார். மேலும் 8 பேர் பரிசீலனையில் உள்ளனர்.

என்விடியா பங்குகள் வரலாறு காணாத அளவில் சரிவை கண்டுள்ளது. ஜென்சென் விவகாரம் கிளம்பியது முதல் நேற்று வரை அந்த நிறுவனத்தின் சந்தை மதிப்பு மட்டும் 490 பில்லியன் டாலர் (சுமார் ரூ.47 லட்சம் கோடி) சரிந்துள்ளது. இதனால் அந்த நிறுவன பங்குகளில் முதலீடு செய்திருந்தவர்கள், பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

வாடகைத் தாய் முறை கிரிமினல் குற்றம்: சீன அரசு



சட்டவிரோதமாகச் செயல்படும் இனப்பெருக்க உதவி மையங்கள் குறித்த புகார்களைத் தொடர்ந்து, வாடகைத் தாய் முறையை கிரிமினல் குற்றமாகச் சீன அரசு அறிவித்துள்ளது.

அனைத்து வகையான வாடகைத் தாய் முறைகளுக்கும் சீனா கடுமையான தடை விதித்துள்ளதாகவும், இத்தகைய ஏற்பாடுகளைச் செய்வது நெறிமுறைகளை மீறும் குற்றவியல் செயலாகக் கருதப்பட்டுக் கடுமையான சட்டத் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படும் என்றும் சீன தேசிய சுகாதார ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் யாங் ஜின்ருய் தெரிவித்துள்ளார்.

வாடகைத் தாய் ஒப்பந்தங்களுக்கு எவ்வித சட்டப் பாதுகாப்பும் கிடையாது என்றும், இதில் ஈடுபடுவோர் கடும் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மத்திய சீனாவின் ஹனான் மாகாணத் தலைநகரான சாங்ஷாவில் சட்டவிரோதமாக இனப்பெருக்க உதவி மையங்கள் செயல்பட்டு வருவதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக நடத்தப்பட்ட சோதனையில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்பட்ட மருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சீன அரசு ஊடகமான குளோபல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே 2001-ஆம் ஆண்டு முதல் மருத்துவ நிறுவனங்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் வாடகைத் தாய் முறையில் ஈடுபட சீனா தடை விதித்திருந்தது. வாடகைத் தாய் முறை பெண்களின் உடல்நலம் மற்றும் உரிமைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும், பெண்களின் உடலை வணிகமயமாக்கி அவர்களை குழந்தை பெறும் கருவிகளாக மாற்றி மனித மாண்பைக் குறைப்பதாகவும் தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், முறையற்ற வாடகைத் தாய் நடைமுறைகளால் கர்ப்பகால சிக்கல்கள் மற்றும் பாதுகாப்பற்ற மருத்துவ சிகிச்சைகளால் ஏற்படும் உயிருக்கு ஆபத்தான விளைவுகள் குறித்தும் சுகாதார ஆணையம் கவலை தெரிவித்துள்ளது.

தெற்கு காஸாவில் மருத்துவமனை மீது இஸ்ரேல் தாக்குதல்



தெற்கு காஸாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், மருத்துவர் ரிஸ்க் அபு வைரா உள்பட நோயாளிகள் மற்றும் அவர்களுடன் வந்தவர்கள் என 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 27 பேர் படுகாயமடைந்தனர் என்று காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மருத்துவ வசதிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நோயாளிகளைப் பாதுகாக்கும் சர்வதேச சட்டங்களை இந்தத் தாக்குதல் வெளிப்படையாக மீறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அமைச்சகம், மருத்துவமனைகளைப் பாதுகாக்கவும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் சர்வதேச சமூகமும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளும் தலையிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானோம் கெப்ரேயஸ் பலிகளை உறுதிப்படுத்தியமையுடன், மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

காஸாவில் சுகாதார சேவைகள் மீது மீண்டும் ஒரு கொடிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காஸாவில் போரினால் பெரும்பாலான மருத்துவமனைகள் முடங்கியுள்ள சூழலில், எஞ்சியிருக்கும் மிக முக்கியச் சிகிச்சை மையங்களில் ஒன்றாக விளங்கும் நாசா மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவு மீது அதிகாலை தாக்கப்பட்டதில், மருத்துவர் ரிஸ்க் அபு வைரா உள்பட, நோயாளிகள் மற்றும் அவர்களுடன் வந்தவர்கள் என ஆறு பேர் பலியாகியுள்ளனர். மேலும் குறைந்தது 27 பேர் பலத்தகாயமடைந்துள்ளனர். அறுவை சிகிச்சை பிரிவு பெரும் சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று டெட்ரோஸ் “எக்ஸ்“ தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மருத்துவமனையின் அறுவை சிகிச்சை அறைகள், நோயாளிகள் குணமடையும் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பிற பகுதிகளும், கட்டடத்தின் 2 ஆவது தளம் பலத்த சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், சேதத்தின் முழு அளவை மதிப்பிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

“ஸ்பேஸ்எக்ஸ்“ நிறுவனத்தின் புதிய முயற்சி தோல்வி

விண்ணுக்கு செலுத்தும் ராக்கெட்டை, மீண்டும் பயன்படுத்தும் வகையில், பத்திரமாக தரையிறக்கும், “ஸ்பேஸ்எக்ஸ்“ நிறுவனத்தின் புதிய முயற்சி தோல்வியில் முடிந்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த பெரும் பணக்கார தொழிலதிபரான எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம், விண்வெளி துறையில் பல சாதனைகளை படைத்து வருகிறது. ராக்கெட்களை மீண்டும் பயன்படுத்தும் நோக்கில் சோதனைகளை அந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முன் மூன்று சூப்பர் ஹெவி பூஸ்டர்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை வெற்றி அடைந்தது. தொடர்ந்து, சூப்பர் ஹெவி வி - 3 ரக பூஸ்டரில் இத்தகைய சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், “ஸ்டார்ஷிப்“ எனப்படும், 406 அடி உயரமுள்ள பிரமாண்ட ராக்கெட்டின் 16வது சோதனை நடந்தது.

இது இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மேல்பகுதி, செயற்கைகோள்களைக் கொண்ட ராக்கெட் ஆகும்.



கீழ்பகுதி, அதை உந்த வைக்கும் பூஸ்டர் எனப்படும் இன்ஜினுடன் கூடியது. ராக்கெட்டின் முதல் நிலையில் உள்ள பூஸ்டரையும், இரண்டாம் நிலையில் உள்ள ராக்கெட்டையும் மறு பயன்பாட்டுக்காக பூமியில் பத்திரமாக தரையிறக்கி, “சாப்ஸ்டிக்“ எனப்படும் ஏவுதளத்தில் உள்ள இயந்திர கைகளால் பிடிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

செயற்கைகோள் இணையசேவை வழங்கும், தன், “ஸ்டார்லிங்க்“ நிறுவனத்துக்காக, 26 செயற்கை கோள்களுடன் இந்த ராக்கெட்டை ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் அனுப்பியது. திட்டமிட்டபடி, செயற்கை கோள்களுடன் கூடிய ராக்கெட்டின் மேல்பகுதி, வளிமண்டலத்துக்குள் வெற்றிகரமாக நுழைந்தது.

ஆனால், பூஸ்டர் உடன் கூடிய கீழ்பகுதி பூமிக்கு திரும்பும்போது, தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து அது திசை திருப்பப்பட்டு, மெக்சிகோ வளைகுடாவில் இறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது கடலில் விழுவதற்கு முன் வெடித்து சிதறியது.

இதனால், முதல்நிலை பூஸ்டரை பிடிக்கும் இலக்கு தோல்வி அடைந்தது. இருப்பினும், 2ம் நிலையில் உள்ள ஸ்டார்ஷிப் ராக்கெட் வெற்றிகரமாக தன் சுற்றுப்பாதையை அடைந்ததுடன், 26 ஸ்டார்லிங்க் செயற்கைகோள்களை வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியது. பூமியை 14 முறை சுற்றி வந்த பின், இந்த ராக்கெட்டை வெற்றிகரமாக தரையிறக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் என, தெரிவிக்கப் பட்டுள்ளது.

சினிமா

BEHIND ME MEDIA

ஒரு கிராமத்தில் நிகழ்ந்த உணர்வுப்பூர்வ சம்பவமே 'கூடு'



அறிமுக இயக்குநர் ஜோயல் விஜய் இயக்கத்தில் உருவாகியுள்ள 'கூடு' திரைப்படம். இதில் விஜே கதிரவன், ஜெயப்பிரகாஷ், விவேக் பிரசன்னா, தேவிகா சதீஷ், ரக்ஷிதா மகாலட்சுமி, நமோ நாராயணன் உள்ளிட்ட பலர் விறபம் பலர் நடிதத்துள்ளனர்.

மனோஜ் கிருஷ்ணா இசையமைத்துள்ள இப்படத்தை ஸ்கைமூன் என்டர்டெயின்மென்ட் மற்றும் கல்ட் டிஜிட்டல் நிறுவனங்க ளுடன் இணைந்து பனோரமா ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது.

விரைவில் திரைக்கு வருகிறது!

"தமிழ்நாட்டின் ஒரு கிராமத்தில் நிகழ்ந்த உணர்வுப்பூர்வமான சம்பவத்தை மையமாகக் கொண்டது இப்படம். அரிய வகைப் பறவை ஒன்று மின்மாற்றிக்குள் தனது முட்டைகளை இட்டுக் கூடுகட்டுகிறது. அந்தக் கூட்டையும் அதிலுள்ள உயிர்களையும் பாதுகாக்க வேண்டிய சூழலில், கிராம மக்கள் தொடர்ந்து 35 நாட்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் இருக்க முன்வருகின்றனர். ஒற்றுமையின் மகத்துவத்தையும் கூட்டமாவாக வெளிப்படும் மனிதநேயத்தின் வலிமையையும் எடுத்துரைக்கும் படம் இது." – படக்குழு

தயாரிப்பு: பனோரமா ஸ்டுடியோஸ், ஸ்கைமூன் என்டர்டெயின்மென்ட் & கல்ட் டிஜிட்டல் | இயக்கம்: ஜோயல் விஜய் | இசை: மனோஜ் கிருஷ்ணா

தமிழ் மற்றும் மலையாளத்தில் உருவாகும் 'மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்'



காளிதாஸ் ஜெயராம் நடிப்பில் உருவாகியுள்ள 'மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்' திரைப்படம், அஹ்மது கபிர் இயக்கத்தில் லக்ஷ்மி ஜோதிஷ், தலி, லால், பொப்பன் அலுமூடன், சஞ்சு சானிச்சென், சோவாப்மமா, ரெஞ்சித் சேகார் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

அஹமது கபீர், ஹசன் ரஷீத் இணைந்து தயாரித்துள்ள இப்படத்துக்கு ஜிதின் ஸ்டானிஸ்லாஸ் ஒளிப்பதிவு செய்துள்ளார். கோவிந்த் வசந்தா இசை அமைத்துள்ளார்.

டிசம்பர் 4-ம் தேதி தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் வெளியாகிறது!

தமிழகத்தில் இப்படத்தை ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் வெளியிடுகிறார்.

"காதல், நட்பு, குடும்ப உறவுகள் மற்றும் நம் வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவுகளை மையமாகக் கொண்டு இப்படத்தின் கதை உருவாகியுள்ளது. நகைச்சுவை, காதல், இசை என அன்றாட வாழ்க்கையில் நாம் கடந்து செல்லும் உறவுகளின் அழகையும் நமக்கு பிடித்த மனிதர்கள் நம் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் உணர்வுப்பூர்வமாகச் சொல்லும் படம் இது"

- இயக்குநர் அஹ்மது கபிர்

தயாரிப்பு: அஹமது கபீர் – ஹசன் ரஷீத் | ஒளிப்பதிவு: ஜிதின் ஸ்டானிஸ்லாஸ் | இசை: கோவிந்த் வசந்தா

"வார்த்தைகளால் விவரிக்க முடியாது..." - சூர்யா



'சீன்' படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்ததற்காக மலையாள நடிகர் டோவினோ தாமஸுக்கு சூர்யா நன்றி தெரிவித்துள்ளார். தீபாவளியை முன்னிட்டு வெளியான இப்படம் ரசிகர்களிடலேள 'சீன்' படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்ததற்காக மலையாள நடிகர் டோவினோ தாமஸுக்கு நடிகர் டோவினோ தாமஸுக்கு சூர்யா நன்றி தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு வெளியான இப்படத்தின் கதையை, 'பிரியத்துக்குரிய டோவினோ தாமஸ்' என்று தனது நெகிழ்ச்சியான வாழ்த்துகளை சூர்யா சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார்.

"வார்த்தைகளால் விவரிக்க முடியாது... சில படங்கள் நம் மனதை அப்படியே தொட்டுவிடுக்ன்றன. தோவினோ தாமஸின் நடிப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்னை வியக்க வைத்தது. திரையில் அவர் காட்டியுள்ள உணர்வுபூர்வமான நடிப்பு, வார்த்கைளுக்கு அப்பாற்பட்டது. 'சீன்' படத்தின் கதைக்களமும், அதில் உள்ள மஜயமும் ஒவ்வொருவர் நெஞ்சையும் தொடும். இந்த அற்புதப் படைப்பை உருவாக்கிய படக்குழுவினர் அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்!" - சூர்யா

இயக்கம்: ஜித்து மாதவன் | தயாரிப்பு: ழகரம் ஸ்டுடியோஸ், சூர்யா - ஜோதிகா | இசை: சுஷின் ஷியாம்

'அப்பா குட்டி' திரைப்படம் பற்றி நடிகை ப்ரீத்தி அஸ்ராணி



"அப்பா குட்டி எனக்குத் தனிப்பட்ட முறையில் நெருக்கமான படம். இயக்குதர் மாறன் ஒவ்வொரு காட்சியையும் மிகத் தெளிவான பார்வையுடன் உருவாக்கி இருக்கிறார். இந்தப் படத்தில் ஒரு மகளாக அப்பாவின் அன்பையும் தியாகத்தையும் உணரக்கூடிய பல தருணங்கள் இருக்கின்றன."

"அம்மாவின் அன்பைப் பற்றி அதிகம் பேசுகிறோம். ஆனால் அப்பாக்கள் தங்களுடைய அன்பையும் உணர்வுகளையும் அதிகம் வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் நமக்காகச் செய்யும் தியாகங்களையும் முயற்சிகளையும் நாம் பல நேரங்களில் கவனிப்பதில்லை. இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு பலரும் தங்களுடைய அப்பாவிடம் உடனடியாஸப் பேசுவார்கள் என்று நம்புகிறேன். என்னுடைய என்னுடைய மத்காத்திரம் முதிர்ச்சியான சிந்தனைகளைக் கொண்டது. இந்தப் படம் அப்பா - மகள் உறவை மட்டும் பேசும் படமாக இருக்காது"

இயக்கம்: மு.மாறன் | தயாரிப்பு: விஜய் ஆண்டனி | வெளியீடு: நவம்பர் 20



அத்தியாயம் - 9

பரத்வாய முனிவரின் மகன் துரொணர்.

துரோணர் சிறந்த வில் வீரர்.

பஞ்சால தேசத்தின் அரசனான துருபதன் துரோணருடன் அஸ்திரப் பயிற்சி பெற்றவன்.

அத்துடன் இருவரும் நல்ல நண்பர்கள்.

அதனால் துருபதன் பாஞ்சால தேசத்தின் அரசனாக முடிசூடியதும் தனது இராச்சியத்தில் அரைவாசியைத் துரோணருக்குக் கொடுப்பதற்காகக் கூறியிருந்தான்.

அதைத் துரோணர் நம்பியிருந்தார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்தபின் துரோணர் கிருபருடைய சகோதரியை மணந்து அசுவத்தாமன் என்ற மகனைப் பெற்றார்.

ஒருநாள் பாசுராமர் தன்னிடமிருந்த பொருட்கள் எல்லாவற்றையும் தானமாகக் கொடுத்து முடிந்தபின் துரொணர் அவரிடம் பொருள் பெறவந்தார்.

பாசுராமரிடம் பொருட்கள் எதுவும் இல்லாததால் தான் கற்ற வித்தைகள் அனைத்தையும் துரோணருக்கு உபதேசித்தார்.

பாஞ்சாலமன்னன் இறந்ததும் துருபதனுக்கு முடிசூட்டப் பட்டது.

இதை அறிந்த துரோணர் துருபதனிடஞ்சென்று முன்பு தனக்குத் தருவதாகச் சொன்ன அரைவாசி நாட்டைத் தரும்படிகேட்டார்.

அதைக்கேட்டுப் பரிகசித்த துருபதன் துரொணரை அவமானப் படுத்தி அனுப்பினான்.

அதனால் அவமானமடைந்த துரோணர் தனது மனைவியின் அண்ணனின் வீட்டுக்குச் சென்று தங்கியிருந்தார்.

ஒருநாள் பீஷ்மர், துரோணரை அழைத்துப் பாண்டவர் களுக்கும் கௌரவர்களுக்கும் ஆயுதப்பயிற்சி யளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி துரோணர் அவர்களுக்கு ஆயதப் பயிற்சி யளித்தார்.

பாண்டவர்கள் மாவீரர்களாயினர்.

ஆயதப் பயிற்சி முடிந்ததும் தனது மாணவர்களிடம் துருபதனை உயிருடன் பிடித்து வந்து தனக்குக் குரு தட்சணையாகத் தரும்படி வேண்டினார்.

முதலில் துரியோதனனும் கர்ணனும் சென்று தோற்றுத்திரும்பினர்.

பின்னர் அருச்சுனன் சென்று போரிட்டுத் துருபதனைக் கைது செய்து துரோணரின் முன் நிறுத்தினான்.

அதனால் துருபதனுக்குத் துரோணரின் மீது கடுங்கோபம் உண்டானது.

அதனால் அவன் துரோணரைக் கொல்லக் கூடிய ஒரு மகனும்,

அர்ச்சுனனுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஒரு மகளும் வேண்டி யாகம் செய்தான்.

அதன்படி திருஷ்டத்யும்மன் என்ற மகனும் திரௌபதி என்ற மகளும் அவனுக்குப் பிறந்தனர்.

அடுத்த வாரம் தொடரும்



BEHIND ME MEDIA

இங்கிலாந்து முழுவதும் சுமார் 70 சிறுமிகள் இணையவழியில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தவருக்கு 30 ஆண்டுகள் சிறை!



இங்கிலாந்து முழுவதும் உள்ள குறைந்தது 70 சிறுமிகளை இணைய வழியில் ஏமாற்றி, அவர்களது பாலியல் ரீதியான படங்கள் மற்றும் காணொளிகளைப் பெற்ற நபருக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

செஸ்டர் பல்கலைக்கழகத்தில் படித்து வந்த இந்திய மாணவரான பிலால் காஜி (27) என்பவரே இவ்வாறு தண்டனை பெற்றுள்ளார். இவர் ஆகஸ்ட் 2021க்கும் ஆகஸ்ட் 2025க்கும் இடைப்பட்ட காலத்தில் ஸ்னாப்சாட் (Snapchat), விங்க் (Wink) மற்றும் ரோப்லாக்ஸ் (Roblox) போன்ற செயலிகளைப் பயன்படுத்தி 10 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுமிகளை இலக்கு வைத்துச் செயற்பட்டுள்ளார்.

தன்னை 14 வயது வெள்ளையின கனேடிய சிறுவனாக உருவேற்றி, பாதிக்கப்பட்ட சிறுமிகளுடன் காதலில் இருப்பதாக நம்பவைத்தே காஜி இக்குற்றங்களைச் செய்துள்ளார். ஆபாசப் படங்களைத் தயாரித்தல், மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் குழந்தைகளைப் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுதல் உள்ளிட்ட 37 குற்றச்சாற்றுகளை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

காஜி பரோ (parole) எனப்படும் நன்னடத்தை விடுவிப்பைப் பெறுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்பதுடன், அவரது வாழ்நாள் முழுவதும் பாலியல் குற்றவாளிகள் பதிவேட்டில் (sex offenders register) பெயரிடப்படுவார். பரோ காலத்தில் அவர் எட்டு ஆண்டுகள் மேற்பார்வையின் கீழ் (on licence) இருப்பார்.

செஸ்டர் கிரவுன் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட ஒருவரின் தனிப்பட்ட தாக்க அறிக்கையில், காஜி தனது தனியுரிமை மற்றும் பாதுகாப்பைக் கெடுத்துவிட்டதாகவும், தான் அதிலிருந்து மீள முயன்று வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். பாதிக்கப்பட்ட சில சிறுமிகள் தற்கொலைக்கு முயன்றதுடன், கவலை மற்றும் உணவு உண்ணும் கோளாறுகளாலும் (eating disorders) பாதிக்கப்பட்டுள்ளனர் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

போலியான அடையாளத்தைப் பயன்படுத்திய காஜி

ஒரு சிறுவனின் சமூக வலைத்தளப் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பயன்படுத்தி, "ரீஸ்" (Reece) என்ற போலிப் பெயரில் காஜி சிறுமிகளிடம் பழகியுள்ளார். ஆரம்பத்தில் சாதாரண முறையில் உரையாடும் அவர், பின்னர் படிப்படியாக நெருக்கமான உள்ளடக்கங்களை அனுப்புமாறு கோரியுள்ளார். சிறுமிகள் தயங்கும்போது, "இதுதான் காதலிப்பவர்கள் செய்யும் விதம்" எனக் கூறி அவர்களை ஏமாற்றியுள்ளார்.

அவர்கள் மறுக்கும் பட்சத்தில், ஏற்கனவே அனுப்பப்பட்ட அல்லது ரகசியமாகப் பெறப்பட்ட படங்களை அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு வெளியிட்டு விடுவதாக மிரட்டியுள்ளார். சில சந்தர்ப்பங்களில் சிறுமிகளின் சமூக வலைத்தளக் கணக்குகளை ஹேக் செய்தும் அவர் மிரட்டல்களில் ஈடுபட்டுள்ளார்.

டிசம்பர் 2021 இல் டெர்பிஷயர் (Derbyshire) காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சிறுமி புகார் அளித்ததைத் தொடர்ந்து இக்கொலை விசாரணை தொடங்கியது. மே 2022 இல் இந்த விசாரணை செஸ்டர் காவல்துறைக்கு மாற்றப்பட்டது. ஜூலை 21, 2023 அன்று மீண்டும் நாட்டிற்குள் நுழையும் போது ஹீத்ரோ விமான நிலையத்தில் காஜி கைது செய்யப்பட்டார்.

காஜி ஒரு பாலியல் வேட்டையாடி (sexual predator) எனத் தெரிவித்த நீதிபதி ஸ்டீவன் எவெர்ட், சமூக வலைத்தளங்களில் உள்ள முறையான பாதுகாப்பு இன்மையை அவர் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் என்றார்.

இத்தாலியப் பாடசாலைகளில் மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்கள்



இத்தாலி முழுவதும் உள்ள பாடசாலைகளுக்குத் தொடர்ந்து இரண்டாவது நாளாக வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதால், மீண்டும் பதற்றம் ஏற்பட்டு மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வடக்கே மிலன் முதல் தெற்கே சிசிலி வரையிலான சுமார் 3,778 பாடசாலைகளுக்குப் புதன்கிழமை குழப்பத்தை ஏற்படுத்தியதைப் போன்றே மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. எனினும், இதுவரை எவ்வித வெடிபொருட்களும் கண்டெடுக்கப்படவில்லை.

"ஆபத்தைக் குறிக்கும் வகையிலான மொத்த மின்னஞ்சல் வந்ததைத் தவிர, உறுதியான ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் கட்டிடங்களை விட்டு வெளியேற வேண்டியதில்லை" என அரசாங்கம் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. முந்தைய நாளைப் போலல்லாமல், வியாழக்கிழமை 77 பாடசாலைகள் மட்டுமே வெளியேற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்பவர்களுக்கு உதவுவதற்காகத் தமது அரசாங்கம் "துறை சார்ந்த" (sector-specific) ஆலோசனைகளை வழங்கும் எனப் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி (Giorgia Meloni) தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை ஸ்கொட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள பாடசாலைகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இச்சம்பவங்களுக்கு இடையே தொடர்புள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வியாழக்கிழமை காலை, பிரான்சின் வடக்கிலுள்ள கலே (Calais) ரயில் நிலையத்தில் விடுக்கப்பட்ட வெடிகுண்டு எச்சரிக்கை காரணமாகச் சர்வதேச மற்றும் உள்நாட்டு ரயில் சேவைகள் தாமதமடைந்தன. கடந்த வாரம் பல ஐரோப்பிய நாடுகளில் உள்ள விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட தொடர்ச்சியான போலி வெடிகுண்டு மிரட்டல்களைத் தொடர்ந்து இந்தப் புதிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பல அச்சுறுத்தல்களுக்குத் தீவிர பெண் வெறுப்புக் குழுவொன்று (extremist misogynistic group) உரிமை கோரியிருந்த போதிலும், பின்னர் அந்தப் போலி எச்சரிக்கைகளுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என அக்குழு மறுத்தது.

இத்தாலியிலுள்ள மொத்தமுள்ள 7,476 அரச பாடசாலைகளில் 6,300 பாடசாலைகளுக்குப் புதன்கிழமை அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மிரட்டல், "விலாயத் டி மிசோஜினிஸ்தானின் தலைவர் மிகைல் ஆண்ட்ரோபோவ்" (Mikhail Andropov, leader of Vilayat di Misoginistan) என்பவரிடமிருந்து வந்ததாகக் கூறப்பட்டது. இது தாய்வானிலிருந்து அனுப்பப்பட்டிருக்கலாம் எனச் சில அதிகாரிகள் கூறுகின்றனர்.

வியாழக்கிழமை இத்தாலியப் பாடசாலைகளுக்கு மீண்டும் மிகைல் ஆண்ட்ரோபோவ் என்ற பெயரில் அனுப்பப்பட்ட இதேபோன்ற செய்தி, பிலிப்பைன்ஸில் உள்ள ஒரு ஆசிரியரின் மின்னஞ்சல் கணக்கிலிருந்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது குறித்த ஆசிரியரின் கணக்கு ஹேக் (hack) செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

எவ்வாறாயினும், பல பெற்றோர்கள் கவலையடைந்துள்ளதுடன், அரசாங்கத்திடமிருந்து தெளிவான விளக்கத்தையும் நடவடிக்கையையும் கோரி வருகின்றனர்.

ரோமிலுள்ள இடைநிலைப் பாடசாலையொன்றின் தலைமை ஆசிரியை, மிரட்டல் செய்தியில் எழுத்துப் பிழைகள் இருந்ததைக் கவனித்து அது "போலியானது" என உணர்ந்ததால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறிய முடிவிற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டதாக "லா ரிபப்ளிகா" (La Repubblica) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. புதிய தேசிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் கோருவதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் போராளிகள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகினால் நடவடிக்கை எடுப்போம் – அமைச்சர் ஆனந்த விஜேபால



விடுதலை புலி உறுப்பினர்களாக இருந்து, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் ஆரம்பகாலத்தில் புனர்வாழ்வாதார ஆணையாளர் காரியாலயத்தினால் கண்காணிப்புக்கு உட்படுத்தட்டு வந்தனர். ஆனால் தற்போது அவர்கள் விசேட கண்காணிப்புக்கு உட்படுத்த தேவைப்பாடு இல்லை. அத்துடன் அவர்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருவது தொடர்பில் முறைப்பாடு செய்தால், அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது தமிழ் தேசிய கட்சி உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் எம்.பி. கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

விடுதலை புலி உறுப்பினர்களாக இருந்து, புனர்வாழ்வளிக்கப்பட்ட 12190 பேர் தற்போது சமூகமயப்படுத்தப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ளன. இவர்களின் ஆரம்பகட்டத்தின்போது, இவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக பல்வேறு கடன் திட்டங்களை 2010 காலப்பகுதியில் மேற்கொண்டிருந்தோம். அதேபோன்று வீட்டு நிவாரணங்கள் சுயதொழில் மேற்கொள்வதற்காக தையல் இயந்திரங்கள் போன்ற பல்வேறு உதவிகளை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தற்போது இவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவர்கள் தற்போது சாதாரண மக்களாக இருப்பதால், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கடன் திட்டங்கள் ஊடாக அவர்களுக்கும் சுயதொழில் நடவடிக்கைகளுக்கு முறையாக பெற்றுக்கொள்ள முடியும். தற்கு எந்த தடைகளும் இல்லை என்றார்.

இதன்போது இடையீட்டு கேள்வி எழுப்பிய சத்தியலிங்கம் எம்.பி குறிப்பிடுகையில், புனர்வாழ்வளிக்கப்பட்ட 12190 பேர் அந்த காலப்பகுயில் பாலியல் உள்ளிட்ட பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்வாங்கப்பட்டதாக அவர்கள் வெளியில் வந்து கருத்து தெரிவித்திருந்தார்கள். அது தொடர்பில் எந்த விசாரணையும் நடத்தி தீர்வு காணப்படவில்லை. அதேநேரம் தற்போதும அவர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாக இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அதனால் இந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பாக அரசாங்கம் முறையான விசாரணை மேற்கொள்ளுமா என கேட்பதுடன் இவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்புக்கு உட்படுத்தப் படுகின்றார்களா என கேட்கிறேன் என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில்,

நான் அறிந்தளவில் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் கண்காணிப்புக்குட்படுத்தப்படுவதாக எனக்கு இப்போது எதனையும் தெரிவிக்க முடியாது. ஆனால் அவர்கள் ஆரம்பகாலத்தில் புனர்வாழ்வாதார ஆணையாளர் காரியாலயத்தினால் கண்காணிப்புக்கு உட்படுத்தட்டு வந்தனர். ஆனால் தற்போது அவர்கள் விசேட கண்காணிப்புக்கு உட்படுத்த தேவைப்பாடு இல்லை. ஏனெனில் அவர்கள் தற்போது நீண்டகாலம் சமூகத்துடன் இணைந்து நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார்கள்.

அத்துடன் அவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருவதாக தெரிவித்திருந்தீர்கள். அதுதொடர்பில் முறைப்பாடு செய்தால், அதன் பிரகாரம் செயற்படுவதற்கு எங்களுக்கு முடியும். அவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணங்கள் தேவைப்படுவதாக இருந்தால், அதுதொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

பலாலியில் விமானத்தை தாக்கும் வெடி குண்டுகளின் பாகங்கள் மீட்பு!



பலாலி பகுதியில் விமானத்தை தாக்கும் வெடி குண்டுகளின் பாகங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் இராணுவ முகாமின் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு கிடங்கு வெட்டியபோது குறித்த பொருட்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது. பின்னர் மோப்ப நாயின் உதவியுடன், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பங்குபற்றுதலுடன் குறித்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

இதன்போது விமானத்தை தாக்கும் ஏவுகணையின் 22 பாகங்கள் மீட்கப்பட்டன. அத்துடன் இனந்தெரியாத வெடிபொருட்களின் பாகங்களும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரேல் வேலை வாய்ப்புக்காக 2,994 இலங்கையர்கள் பயணம்!



இந்த வருடத்தின் ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில், மொத்தம் 2,994 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

உணவகம், ஹோட்டல், வீட்டுப் பராமரிப்பு (ர்ழரளநமநநிபெ), உற்பத்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் இவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மற்றுமொரு குழுவாக 261 இலங்கையர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி இஸ்ரேல் நோக்கிப் புறப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு புறப்படவுள்ள தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி யொன்று பணியகத்தின் கேட்போர் கூடத்தில், பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் 158 பேர் உணவகத் துறை சார்ந்த பணிகளுக்காகத் தெரிவு செய்யப் பட்டுள்ளதோடு, ஏனைய 103 பேர் ஹோட்டல், வீட்டுப் பராமரிப்பு, உற்பத்தி மற்றும் விவசாயத் துறைகளில் பணியாற்ற தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, அரச மற்றும் தனியார் ஆட்சேர்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக இதுவரை மொத்தமாக 14,349 இலங்கையர்கள் இஸ்ரேலின் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

BEHIND ME MEDIA

ஈழத் தமிழ் அகதிக் குடும்பத்தின் மகன் – அமெரிக்க Hartford நகர மேயர் அருணன் அருளம்பலம்



இலங்கையில் 1983ஆம் ஆண்டு நிகழ்ந்த "கறுப்பு ஜூலை" இன வன்முறைகளுக்குப் பின்னர் தாயகத்தை விட்டு வெளியேறிய தமிழ் குடும்பத்தில் பிறந்த அருணன் அருளம்பலம் இன்று அமெரிக்காவின் கனெக்டிகட் மாநிலத் தலைநகரான Hartford நகரின் மேயராகப் பணியாற்றி வருகிறார். 2024 ஜனவரி 1ஆம் தேதி அவர் நகரின் 68ஆவது மேயராக பதவியேற்றார்.

அருணனின் பெற்றோர் சுஹாந்தி மற்றும் நரேஷ் இலங்கையைச் சேர்ந்த தமிழ் குடும்பத்தினர். 1983ஆம் ஆண்டு வன்முறைகள் தீவிரமடைந்தபோது, அவரது தாயார் இங்கிலாந்துக்குச் சென்றார் அவரது தந்தை அதற்கு முன்பே அங்கு வசித்து வந்தார். பின்னர் குடும்பம் ஜிம்பாப்வேக்குச் சென்றது. அருணன் 1985ஆம் ஆண்டு அங்குள்ள புலவாயோ நகரில் பிறந்தார். பின்னர் குடும்பம் அமெரிக்காவில் குடியேறியது.

அருணன் தனது குடும்ப வரலாற்றைக் கேட்டறிந்த போது, இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல உறவினர்கள் எதிர்கொண்ட ஆபத்துகளையும், அவர்களுக்கு உதவியவர்களின் கதைகளையும் அறிந்ததாக தெரிவித்துள்ளார். அகதிப் பின்னணி அவரது அடையாளத்திலும் பொதுச் சேவைப் பயணத்திலும் முக்கியமான இடம் பெற்றுள்ளது.

அட்லாண்டாவில் உள்ள Emory Universityயில் சர்வதேசக் கற்கைகளில் இளங்கலைப் பட்டம் பெற்ற அவர், Quinnipiac University School of Lawயில் சட்டப் பட்டம் பெற்றார். பின்னர் Hartford ல் வழக்கறிஞராகப் பணியாற்றினார். அதன்பிறகு, கனெக்டிகட் ஆளுநர் நெட் லாமோன்டின் நிர்வாகத்தில் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் துணை ஆணையராக பணியாற்றினார். அந்தப் பொறுப்பில் நுகர்வோர் உரிமைகள் மற்றும் சிறு வணிகங்களுக்கான பாதுகாப்பு விவகாரங்களில் ஈடுபட்டார்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு, அவர் Hartford Land Bank அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்தார். காலியாகவும் பாழடைந்தும் கிடந்த சொத்துகளை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதுடன், உள்ளூர் மக்களுக்கே சொத்து மேம்பாட்டாளர்களாகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தையும் உருவாக்கினார். அந்த முயற்சி, நகரின் குடியிருப்பாளர்களைத் தங்கள் அண்டைச் சூழலின் மறுசீரமைப்பில் நேரடியாகப் பங்கெடுக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டது.

2023 நவம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற ஹார்ட்ஃபோர்ட் மேயர் தேர்தலில், அருளம்பலம் 4,702 வாக்குகள் - மொத்தத்தில் 62 சதவீதம் - பெற்று வெற்றி பெற்றார். அந்தத் தேர்தலில் அவருக்கு எதிராக எட்டு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 2024 ஜனவரி 1ஆம் தேதி அவர் மேயராகப் பதவியேற்றார்.

மேயராகப் பொறுப்பேற்றபோது, குடியிருப்புகளின் தரம் மற்றும் விலை, பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வாய்ப்புகள், சிறு வணிக வளர்ச்சி, அண்டைநகரப் பகுதிகளில் முதலீடு ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய சவால்கள் என்று அவர் வலியுறுத்தினார். நகரின் முதல் பட்ஜெட் முன்மொழிவில், வரி அல்லது கட்டணங்களை உயர்த்தாமலும் நகரச் சேவைகளை வெட்டாமலும், வீடமைப்பு, இளைஞர் ஈடுபாடு, வன்முறைத் தடுப்பு, சிறு வணிக வளர்ச்சி ஆகியவற்றில் முதலீடு செய்யத் திட்டமிட்டதாகக் குறிப்பிட்டார். அருளம்பலத்தின் வாழ்க்கைப் பயணம், அகதிக் குடும்பப் பின்னணியிலிருந்து கல்வி, சட்டம், அரசுப் பணி மற்றும் உள்ளூர் அரசியல் வழியாக நகரத் தலைமையை அடைந்த கதையாகும். இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் குடும்பத்தின் மகன் ஒருவர் அமெரிக்க நகரத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பது, உலகத் தமிழர்களிடையே பெருமையையும் கவனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

BEHIND ME MEDIA

CANADA
HUMANITY
SINCE 2024
BEHIND ME FOUNDATION

மனிதநேயம் - Behind me foundation

வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.



எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது **Behind me International Media** ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

தொடர்புக்கு

இலங்கை	-	+94 76239 0159
இந்தியா	-	+ 91 917632 3079
கனடா	-	+ 437 688 3493
மின்னஞ்சல்	-	info@behindmemedia.com

BEHIND ME FOUNDATION

உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...

இந்தியச் செய்திகள்

BEHIND ME MEDIA

ஒரு தேசத்திற்கு ஜனநாயகம் குறித்துப் பாடம் எடுப்பது பொருத்தமற்றது



ஹைதராபாத்தில் காங்கிரஸ் சார்பில் நடந்த பாரத் மாநாடு என்ற நிகழ்ச்சியில் இத்தாலியைச் சேர்ந்த ஐரோப்பிய சோசலிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பிலிபெக், பிரதமர் மோடி குறித்து பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பிலிபெக்கின் பேச்சை கைதட்டியபடி, பார்த்து சிரித்த காங்கிரஸ் எம்பி ராகுலுக்கும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பிரதமர் மோடியை விமர்சித்த பிலிபெக்கின் பேச்சுக்கு, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியின் கூட்டணிக் கட்சியான போர்சா இத்தாலியா கட்சியின் தலைவர் டெபோரா பெர்காமினி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது எக்ஸ் தளப்பதிவில் ஜனநாயகத்தில் கருத்துக்களையும், குற்றச்சாட்டுகளையும் முன்வைக்க அனைவருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் அவற்றை நிரூபிக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் தீவிர ஒத்துழைப்புடன் இருக்கும் நமது ஒரு சிறந்த நட்பு நாட்டின் உள்நாட்டு அரசியல் விவாதத்திற்குள் நுழைவது முறையற்றது.

97 கோடி மக்கள் வாக்களிக்க வழிவகை செய்யும் ஒரு தேசத்திற்கு ஜனநாயகம் குறித்துப் பாடம் எடுப்பது பொருத்தமற்றது. இந்தியாவிற்குத் தனித்துவமான ஜனநாயக அமைப்புகளும் நீதித்துறையும் இருக்கிறது, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் இளவரசருடன் கிரிக்கட் விளையாடும் சச்சின்!



3 நாள் பயணமாக பிரிட்டன் இளவரசர் வில்லியம், இளவரசி கேட் இந்தியா வந்துள்ளனர்.

இளவரசர் வில்லியமால் 2020ல் தொடங்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னெடுப்பான “எர்த்ஷாட் பரிசு“ வழங்கும் விழாவில் பங்கேற்பதற்காக வந்துள்ளனர்.இன்று நடைபெறும் இவ்விழாவில் பாலிவுட் பிரபலங்களும், பிரிட்டனைச் சேர்ந்த “டேக் தட்“ இசைக் குழுவினரும் பங்கேற்க உள்ளனர்.

இளவரசர் வில்லியம், அவரது மனைவி கேட், இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை சந்தித்து பேசினர்.

மூவரும் மும்பையின் பாலார்ட் எஸ்டேட்டில் நடந்தபடியே உரையாடினர். அங்கிருந்த சிறுவர்களுடன் வீதியில் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தனர். சாலையோர கடைகளிலும் உணவருந்தினர்.

2016ல் முதல்முறையாக இந்தியா வந்த இளவரசர் வில்லியம், இளவரசி கேட், மும்பையில் கல்லி கிரிக்கெட் விளையாடினர். தற்போது, மீண்டும் அதனை ரீ கிரியேட் செய்துள்ளனர்.

ஈவெரா அறிவுலகத்தில் போலி நூல்கள் விசாரணை ஆரம்பம்!

கோவை ஈவெரா அறிவுலகத்தில் போலி நூல்கள் இடம்பெற்றிருந்த விவகாரம் தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அகல்விளக்கு, பீனிக்ஸ் பதிப்பங்கள் விநியோகித்த நூல்களில், எழுத்தாளர்கள் பெயர்கள் போலியானதாக இருந்ததோடு, போலி நூல்கள் அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டது தெரிய வந்தது.

இந்த மோசடியைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள பல மாவட்ட நூலகங்களிலும் போலி நூல்கள் இடம்பெற்றிருந்தது அம்பலமானது. ரூ.7 கோடி மதிப்பிலான 70,674 போலி நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், போலி நூல்கள் விவகாரம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறையின் விசாரணைக்கு உத்தரவிட்டது.

அதன்படி, வழக்குப்பதிவு செய்த போலீசார், சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள அகல்விளக்கு பதிப்பாக உரிமையாளர் மோகன் வீட்டில் சோதனை நடத்தினர். இந்தப் போலி நூல்கள் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதியப்பட்ட வழக்குகளை திரும்ப பெற தமிழக அரசு உத்தரவு

தி.மு.க ஆட்சிக் காலத்தில் 2021ம் ஆண்டு மே முதல் 2026ம் ஆண்டு ஏப்ரல் வரை விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதியப்பட்ட வழக்குகளை திரும்ப பெற தமிழக அரசு உத்தரவிட்டது.

தமிழக அரசின் அறிக்கை: கடந்த செப்டம்பர் 2ல் தமிழக முதல்வர் விஜய் சட்டசபையில், விதி 110-ன் கீழ் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய போது அவர்கள் மீது கடந்த ஆட்சிக் காலங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் திரும்ப பெறப்படும் அறிவித்தார்கள்.

முதல்வர் விஜயின் ஆணைக்கிணங்க, மே 2021 முதல் ஏப்ரல் 2026 வரை விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது போடப்பட்ட 600 வழக்குகள் கண்டறிப்பட்டன. அவற்றைத் திரும்ப பெற உரிய சட்ட விதிகளின்படி ஆய்வு செய்து இவ்வழக்குகளில் பதிவு செய்யப்பட்ட 92,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் அவ் வழக்குகளில் இருந்து விடுவித்து ஆணை வெளியிடப் பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தமிழக முதல்வருக்கு ‘அரோகரா’ முக்கிய அமைப்புக்கள் கடும் கண்டனம்



திருச்செந்தூர் சூரசம்ஹார விழாவின்போது, முதல்வருக்கு ‘‘அரோகரா’’, அமைச்சருக்கு ”அரோகரா” என முழக்கம் எழுப்பியதற்கு தலைவர்கள் மற்றும் கட்சிகள் சார்பில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வீத லீடர்ஸ் அமைப்பின் தலைவர் அண்ணாமலை: ‘‘நேற்று, திருச்செந்தூர் சூரசம்ஹார விழாவின்போது, இந்து சமய அறநிலையத்துறை குழு உறுப்பினரான வேல்முருகன், தமிழக முதல்வருக்கு ‘‘அரோகரா’’, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருக்கு ”அரோகரா” என முழக்கமிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

முருகப்பெருமானின் திருவிழாவையும், பக்தி முழக்கங்களையும் அரசியல் புகழ்ச்சிக்குப் பயன்படுத்துவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. ‘‘அரோகரா’’ என்பது முருகப்பெருமானை போற்றிப் பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் எழுப்பும் புனிதமான முழக்கம். அந்த இறை முழக்கத்தை அரசியல் தலைவர்களுக்காகப் பயன்படுத்துவது ஆன்மிக மரபுகளைக் கொச்சைப்படுத்துவதுடன், முருகப்பெருமானை வழிபடும் கோடிக்கணக்கான பக்தர்களின் உணர்வுகளையும் புண்படுத்தும் செயலாகும்.

இந்து சமய அறநிலையத்துறையின் குழு உறுப்பினராக இருப்பவரே இத்தகைய செயலில் ஈடுபடுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பக்தர்களின் நம்பிக்கையையும் வழிபாட்டு மரபுகளையும் அவமதிக்கும் வகையிலான இதுபோன்ற செயல்களைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தமிழக முதல்வர் விஜய் அறிவுறுத்த வேண்டும்.’’ என்று வலியுறுத்தியுள்ளார்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: ‘‘தமிழ்க் கடவுளான முருகப்பெருமானை அவமதிக்கும் விதமாக, கடவுளுக்கு இணையாக முதல்வரையும் அறநிலையத்துறை அமைச்சரையும் துதி பாடிய வர்ணனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். புண்படுத்தியமைக்காக முதல்வர் விஜய்யையும் அமைச்சர் ரமேஷ் பாஜக வன்மையாக கண்டிக்கிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று நடைபெற்ற சூரசம்ஹார விழாவின்போது, முருகப் பெருமானுடன் தமிழக முதல்வருக்கும், அமைச்சருக்கும் அரோகரா முழக்கமிட்ட இயல் இசை நாடக மன்றத் தலைவர் புஷ்பவனம் குப்புசாமி மற்றும் அறங்காவலர் தேர்வுக்குழு உறுப்பினரும் பாடகருமான வேல்முருகன் ஆகியோரின் செயல் பக்தர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முருகப்பெருமானின் வீரத்தையும் அருளையும் போற்றிப் பாட வேண்டிய புனிதமான இடத்தில், தங்களுக்குப் பதவி வழங்கிய ஆட்சியாளர்களிடம் விசுவாசத்தைக் காட்டுவதற்காக, கடவுளுக்கு இணையாகத் தமிழக முதல்வரையும் அமைச்சரையும் ஒப்பிட்டுத் துதி பாடுவதற்கு இவர்களுக்கு யார் அனுமதி வழங்கியது? பதவி தந்த ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக முருகப்பெருமானின் புனிதத்தையும், லட்சக்கணக்கான பக்தர்களின் இறை நம்பிக்கையையும் பலிகொடுப்பதா?.

சாதி, மதம், அரசியல் கட்சி, ஆட்சி அதிகாரம் ஆகிய அனைத்தையும் கடந்து நடைபெறும் புனிதமான நிகழ்வைத் தனிநபர் புகழ்ச்சிக்கும் அரசியல் ஆதாயத்திற்கும் பயன்படுத்தியிருப்பது, தாங்கள் படும் துன்பங்களிலிருந்து விடுபடக் கடுமையாக விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட வந்திருந்த பக்தர்களின் நம்பிக்கையை ஏளனப்படுத்தி, அவர்களை அவமதிக்கும் செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இந்த இரண்டையும் முதல்வர் விஜய்யுடைய அரசு உடனடியாக செய்ய பாஜக வலியுறுத்துகிறது. இந்து மக்கள் மனதை புண்படுத்தியமைக்காக முதல்வர் விஜய்யையும் அமைச்சர் ரமேஷ் பாஜக வன்மையாக கண்டிக்கிறது.